www.tamilarangam.net

# களத்தில்

"அன்னை பூபதி தனி மனிதப் பிறவியாக சாக வில்லை, தமிழீழ தாய்க் குலத்தின் எழுச்சி வடிவ மாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது"

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (09.04. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (132) அன்பளிப்பு: 60 p

## "தமிழர் தாயகத்தை அந்நிய இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தலே மனித உரிமை மீறல்களுக்கு காரணமாகும்"

### - ஐ.நா மனிதஉரிமைகள் ஆணைக்குழு முன்பாக குமார் பொன்னம்பலம் சாட்சியம்



"தமிழர்களின் மரபுவழித் தாய கத்தை, அந்நிய சிறிலங்கா இராணுவம் தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப் பதாலேயே மனித உரிமை மீறல்கள் ஏற்படுகின்றன; நான் அந்நிய இராணுவம் எனக் குறிப்பிடுவதற்குக் காரணம், அவர்கள் 99 வீதம் சிங்கள வர்களைக் கொண்ட சிறிலங்கா இராணுவத்தினர்– தமிழ் பேசத் தெரியாதவர்கள் – அறியாத வர்கள் – தமிழர்களின் பண்பாட்டைப் பற்றி, மதத்தைப் பற்றி அக்கறை இல்லாதவர்கள். இவர்கள் அங்கு தொடர்ந்தும் இருப்பதனால் மனித உரிமை மீறல்கள் மேலும் அதிகரிப் பதுடன், பேச்சுவார்த்தை ரீதியான அரசியல் தீர்வுக்கும் தடையாகும்.

எனவே, தமிழர்களின் துயரநிலை குறித்து, சர்வதேச சமூகம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். ஆகவே, தன்னிச் சையாகத் தடுத்து வைத்தல் சம்பந்தமான நடவடிக்கைக் குழு மற்றும் சித்திரவதை குறித்த விசேட அதிகாரி ஆகியோர் உடனடியாக

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## யாழ். குடாநாட்டு மக்களுக்கு விசேட அடையாள அட்டை

யாழ். குடாநாட்டை இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கியுள்ள சிறிலங்கா, அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்கும் செயலில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. இதுவரை ஒரு இலட்சத்து நாற்பதாயிரம்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

### புத்தாண்டு வாழ்த்துக்கள்

எழுந்திடு சித்திரையே !
எம்தரை வந்த
எத்தரை விரட்டி
எழுந்திடு சித்திரையே !
நித்திரை போதும்
எழுந்திடு சித்திரையே !




### வீரவணக்கம்

தமிழினம் வாழ
தன்னுயிர் தந்த
தமிழ்த் தாய் !
அன்னை பூபதிக்கு
9 ஆம் ஆண்டு
நினைவாக
எமது வீரவணக்கம்.



# இராணுவ ஆக்கிரமிப்புப் பிடிக்குள் யாழ். குடாநாடு சிக்கித் தவிக்கிறது

### - தப்பிவந்த பொதுமகன் கூறும் கண்ணீர்க்கதை

யாழ் குடாநாட்டில் ஒவ்வொரு நாளும் இராணுவச் சுற்றி வளைப்புக்கள், காரணமின்றிக் கைதாக்குதல், கைதாகியவர்கள் காணமற்போதல், பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுதல் போன்ற குற்றச் செயல்கள் மேன்மேலும் அதிகரித்துக்கொண்டு செல்கிறதெனவும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுள்ள யாழ் குடாநாட்டுப் பகுதி மக்கள் இருண்ட வாழ்வுக்குள் அகப்பட்டு, கடும் இன்னல்களை அனுபவித்து வருவதாகவும், அங்கிருந்து தப்பிவந்த பொதுமகன் ஒருவர் கண்ணீர் மல்கக் கூறினார்.

### இராணுவ இலக்கில் பள்ளி மாணவர்கள்

இம்மாதம் பிறந்தது முதல் சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் வேகப்படுத்தப்பட்டு விட்டதாகவும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

உள்ளே...


- அன்னை பூபதி நினைவாக.... (நடுப்பக்கம்)
- உலக அரங்கு தூபக் அமாறு இயக்கத்தினர்....
- கனடா (நீதிமன்ற) வழக்கு....
- கவிதைக்களம் ...
- அழைப்பு.... (சிறுகதை)
- தமிழீழச் செய்திகள்...
- மக்கள் பணியில் த.பு.க.(TRO)
- ஜே.ஆரின் மறைவு .....


### பிரித்தானிய அரசின் முயற்சி :

## சமாதானப் பேச்சுக் குறித்து சந்திரிகா - ரணில் கடிதப் பரிமாற்றம்

இலங்கைத் தீவின் இனப் பிரச்சினையை ஒரே திசையில் அணுகுவதற்கு சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும், சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கம் தெரிவித்து, இணக்கக் கடிதங்களை பரிமாறிக் கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த இரு

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவத்தால் கைதாக்கப்பட்டவர் பலாச்சோலையில் பிணமாகக் கிடந்தனர்

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் உள்ள தளவாயிலில் பங்குனி மாதம் 12ஆம் திகதி 28 வயதான சீனித்தம்பி கோணேஸ்வரன், 23 வயதான முத்தையா அருள் ஆகிய இரு தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் எதுவித காரணமுமின்றி கைதாக்கப்பட்டனர். பின்னர் இவர்களின் உயிரற்ற உடல்கள் மட்டுமே 22ஆம் திகதி சனிக்கிழமை பலாச்சோலை என்ற இடத்தில் கிடக்க காணப்பட்டன.

இறந்தவர்களில் ஒருவரான கோணேஸ்வரன் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிய வருகிறது. அருள் க.பொ.த. உயர்தர வகுப்பில் தேறிய பின் தொழில் வாய்ப்பினை எதிர்பார்த்துக் காத்திருந்த தாகக் கூறப்படுகிறது. 'இவர்களுடன் சேர்த்து ஐந்து தமிழ்ப் பொதுமக்கள் இவ்வாறு இராணுவத்தினரால் படுகொலைக்கு உள்ளாகியுள்ளனர்.

## வை.எம்.சி.ஏ. கண்டனம்

மட்டக்களப்பு மர்மக் கொலைகளை சர்வதேச அமைப்பான வை.எம்.சி.ஏயின் மட்டக்களப்புக் கிளை கண்டித்துள்ளது. வை.எம்.சி.ஏயின் உறுப்பினர் மோசஸ் என்பவரும் இவ்விதம் படுகொலையா னோரில் ஒருவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டுதலே நமது முன்னுரிமை - பிரதான பணி!

-போராட்டத்தில் இணைந்த மாணவர்கள்

கிளிநொச்சி தர்மபுரம் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் கூட்டாகத் தம்மை தமிழீழ தேசிய விடுதலைப் போரில் இணைத்துள்ளனர். 15 மாணவர்கள் தாமாகவே முன்வந்து விடுதலைப் புலிகளின் பணிமனையில் தம்மை இணைத்துக் கொண்ட பின் பத்திரிகையாளர்களுக்கு தமது நிலையை விளக்கிச் செவ்வியும் அளித்துள்ளனர். அதில் "எமக்கு முன்னுள்ள பிரதான பணி – எமது தாய்நிலத்தை ஆக்கிரமித்து நாசம் செய்யும் சிங்களப் படைகளை இங்கிருந்து விரட்டுவதேயாகும். அதற்கே நாம் எல்லோரும் தற்போது முன்னுரிமை கொடுக்க வேண்டியவர்களாகவும் உள்ளோம்" எனக் கூறியுள்ளனர்.

# 18 வயது தமிழ் இளைஞன் இராணுவத்தால் வெட்டிக் கொலை

18 வயது நிரம்பிய தமிழ் இளைஞனான கந்தசாமி இராஜேந்திரன் சிறிலங்கா இராணுவத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு குழியொன்றில் புதைக்கப்பட்டுள்ளார். சிங்கள ஆக்கிரமிப்புப் படையின் இக் கொடூரச் செயல் யாழ்ப்பாணம் புத்தூரில் வாதரவத்தை எனும் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் புத்தூரில் தேடுதல் வேட்டை எனும் பெயரில் நடாத்தப்பட்ட சோதனையின் போது இவ் இளைஞர் காரணமின்றிக் கைது செய்யப்பட்டார். பின்னர் இவர் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கப் பெறவில்லை. இதன் பின்னரே பொதுமக்கள் சிலரால் புதைகுழி ஒன்று அடையாளம் காணப்பட்டு அது தோண்டப்பட்டபோது, அவ் இளைஞனின் உயிரற்ற உடல் வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

# இந்திய 'றோ' அமைப்பின் இருவர் யாழ். செல்ல சிறிலங்கா விசேட அனுமதி

யாழ். குடாநாட்டுக்குள் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் எவரையும் அனுமதிக்க மறுக்கும் சிறிலங்கா அரசு, இந்திய உளவுப் பிரிவான 'றோ' அமைப்பைச் சேர்ந்த இருவருக்கு அங்கு சென்று தனது இராணுவ அதிகாரிகளையும் ஈபிடிபி. டக்ளஸ் தேவானந்தாவையும் சந்திக்க விசேட ஏற்பாடுகள் செய்து கொடுத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. சென்னை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சூரிய நாராயணா, டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எஸ்டி. முனி ஆகியோரே 'றோ' அமைப்பின் சார்பாக யாழ். குடாநாட்டுக்குச் சென்று மீண்டவர்களாவார்கள். இதில் சூரிய நாராயணா ஏற்கனவே 'இந்து' பத்திரிகையில் புலிகளுக்கு எதிராக எழுதி வருபவர் என்றும் இவர் 'றோ'வின் கருத்துக்களுக்கு எழுத்து வடிவம் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டு செயற்படுகிறார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பாடசாலை நோக்கி எறிகணை வீச்சு பள்ளி ஆசிரியை காயம்

## யாழ். குடாநாட்டில் மாணவன் சுட்டுக் கொலை

மன்னார் மாவட்டம் பேசாலையில் உள்ள றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் சிறிலங்காப் படையினர் ஏவிய எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததில் பாடசாலை ஆசிரியை ஒருவர் காயமுற்றுள்ளார். பாடசாலை முன்பாக விழுந்த எறிகணை வெடித்துச் சிதறிய போதே இவ் ஆசிரியை காயமுற்றுள்ளார். தெய்வாதீனமாக பள்ளிக்கூட மாணவிகள் காயங்களின்றித் தப்பிக் கொண்டனர்.

இது இவ்வாறிருக்க, யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் பள்ளி மாணவன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். பங்குனி மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற இத் துப்பாக்கிச் சூட்டின்போது மேலும் இரு தமிழ்ப் பொதுமக்களும் காயமுற்றுள்ளனர்.

### கறுவான்கேணி பாடசாலையிலும் எறிகணை வீச்சு

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை, கறுவான்கேணி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் வகுப்புக்கள் நடந்து கொண்டிருந்த நேரம் சிறிலங்காப் படையினர் ஏவிய இரண்டு எறிகணைகள் பாடசாலை வளவுக்குள் விழுந்து வெடித்துள்ளது. இதனால் பாடசாலைக் கட்டிடம் சேதமடைந்துள்ளது. இதன்போது பாடசாலை ஊழியர் பண்டாரம் (56 வயது) எனும் தமிழ்ப் பொதுமகன் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளார்.

# பாதிரியாரின் தோளில் இராணுவத்தினன் தாக்குதல்

மட்டக்களப்பில் கிறிஸ்தவ வழிபாடு ஒன்றை நடாத்துவதற்காக இரு தமிழ் பாதிரிமார் ஒரே மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். அச் சமயம் சிறிலங்கா இராணுவத்தினர் வீதியால் நடையணியாக சென்று கொண்டிருந்தனர் எனவும், அவர்களுடன் நாய்களும் கொண்டு செல்லப்பட்டன எனக் கூறப்படுகிறது. இதன்போது இவ் வீதிவழியே சென்றுகொண்டிருந்த பாதிரிமார் மீது இராணுவத்தினன் ஒருவன் தனது துப்பாக்கிப் பிடியால் ஓங்கி அடித்துள்ளான். அதுமட்டுமல்லாமல் தனது நாயுடன் பாதிரியாரின் மோட்டார் சைக்கிள் உரசியதாலேயே தாக்கியதாகவும் காரணமும் கூறியுள்ளான்.

# பதவி ஆசை இருக்கும்வரை போர் முடியப் போவதில்லை

-ரணில் விக்கிரமசிங்க

"பதவி ஆசை இருக்கும்வரை போர் முடியப் போவதில்லை" என சிறிலங்காவின் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். "நாம் வடக்கில் மட்டுப்படுத்தியிருந்த போர், கிழக்கிலும் புத்தளப் பகுதியிலும் வியாபித்துள்ளதுடன் கொழும்பிற்கும் வந்துவிட்டது. 11 ஆண்டு காலம் நாம் நடாத்திய போரில் 4000 அளவிலான படை வீரர்களே கொல்லப்பட்டனர். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் 6,000க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 17 விமானங்கள், 11 கப்பல்கள் அழிக்கப்பட்டுள்ளன. மூவாயிரம் கோடிக்கும் மேலான தொகையை வட்டியுடன் கடனாகப் பெற்று போரிற்குச் செலவு செய்கிறார் ஜனாதிபதி சந்திரிகா" என ரணில் தனது சார்பான புள்ளி விபரத் திரட்டு ஒன்றையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

# வன்னிக்கான தபால் சேவை நிறுத்தம்

வன்னிப் பிரதேசத்தில் சிறிலங்காவின் கடும் பொருளாதார தடைகளுக்கும், இராணுவ முற்றுகைகளுக்கும் மத்தியில் தமது நிலத்தில் வாழ்கிறோம் எனும் பெருமையுடன் ஓர் நம்பிக்கையுடன் வாழ்வையே போராட்டமாக வெளிப்படுத்த வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழ் மக்கள் மீது சிறிலங்கா மேலும் மேலும் அழுத்தங்களைப் பிரயோகித்து அடிமை கொள்ள நினைக்கிறது. அதற்காக என்ன வழிகள் உள்ளதோ அனைத்தையும் கையாள முயல்கிறது. இந்த வகையான நடவடிக்கையில் ஓர் அங்கமாக, வன்னிப் பிரதேசத்திற்கான தபால் சேவையை சிறிலங்கா அரசு இடைநிறுத்தியுள்ளது. இதனால் வெளியுலகத் தொடர்புகள் ஏதுமற்று வாழும் மக்கள், வெளிநாடுகளில் வாழும் தமது சொந்தங்களிடம் தமது நிலையை – தேவைகளைத் தெரிவித்து உதவி பெறக்கூட முடியாது தடுக்கப்பட்டுள்ளனர்.

# அரச பயங்கரவாதச் சிறிலங்கா! உள்ளூராட்சி தேர்தல் நிரூபிப்பு

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் என்பதே சிறிலங்காவின் அரச பயங்கர வாதத்தில் இருந்து தம்மைப் பாதுகாப்ப தற்கான தமிழீழ மக்களின் போராட்டம் என்பதை உலகறியும். ஆனால், இதனைப் 'பயங்கரவாதம்' எனக் கொச்சைப்படுத்தித் தனது இராணுவ மேலாண்மை நடவடிக்கைகளுக்குச் சட்டவலு தேடிப் பரப்புரை செய்துவரும் சிறிலங்கா, தனது சிறிலங்கா தேசத்தில் எப்படிப் பயங்கரவா தத்தைக் கட்டவிழ்த்து விட்டு வருகிறது என்பதற்கு நடந்து முடிந்த சிறிலங்காவின் உள்ளூராட்சித் தேர்தல் சான்று பகர்கிறது. 1914 தேர்தல் வன்முறைகள் நடைபெற்றன எனவும் 997 சம்பவங்கள் பாரதூரமானவை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

847 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பொதுசன ஐக்கிய முன்னணியினாலும் 463 வன்முறைச் சம்பவங்கள் ஐக்கிய தேசிய கட்சியாலும் 34 வன்முறைச் சம்பவங்கள் ஜே.வி.பியாலும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

இவற்றுள் ஆறு கொலைகளும் அடங்குகின்றன. இவை சிறிலங்காவின் 30 காவற்துறைப் பிரிவுகளுள் மட்டும் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விதம் பயங்கரவாதத்தையே தனது அரசியலாக வெளிப்படுத்தும் சிறிலங்கா தமிழர்கள் மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதனாலேயே தமிழர்கள் தொடர்ந்தும் ஆயுதம் ஏந்தித் தங்களைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி வாழ்கின்றனர்.

## யூலை 7 இல் வடக்கு -கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்

யூலை 7ஆம் திகதி வடக்கு–கிழக்கு பிரதேசங்களுக்கும் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்த சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசும் அதன் படைகளும் திட்டம் தீட்டி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவற்றில் சிறிலங்காவின் முகவர்களான தமிழ்க் குழுக்கள் ஆயுத முனையில் வேட்பாளர்களாகக் குதிப்பதில் ஆர்வம் காட்டி வருவதாகவும் கூறப்படுகிறது.

www.tamilarangam.net



## சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு! ஏமாற்றப்பார்க்கிறார்கள் –ஏமாறாதீர்கள்

சர்வதேச சமூகமும், உலக அரசுகளும் சிறிலங்காவுக்கு இரண்டு விடயங்களில் உறுதியான உண்மைகளை எடுத்துக்கூறி வருகின்றன. ஒன்று, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமில்லை அரசியல் தீர்வே ஏற்புடையது என்பது. அதுமட்டுமல்லாமல், இவ் விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடாத்தப்படக்கூடிய பேச்சுவார்த்தைகளுக்கு மூன்றாவது நாடாக மத்தியஸ்தம் வகிப்பதற்கும் தமது விருப்பைத் தெரிவித்துள்ளன. மற்றையது, சிறிலங்கா திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை வன்முறைப்படுத்துகிறது என்பதில் எல்லா நாடுகளுமே ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளன.

இவை இரண்டும், தமிழ் மக்களின் நியாயமானதும் தவிர்க்க முடியாததுமான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தினை அங்கீகரிக்க வேண்டிய நிலைக்கு சர்வதேச நாடுகளை இட்டுச் செல்கின்றன. இதை உணர்ந்த சிறிலங்காவின் நீதி மற்றும் அரசியல் அமைப்பு விவகார அமைச்சரான பேராசிரியர் பீரிஸ், "சிறிலங்கா அரசு வாழ்வதா? அல்லது சாவதா? என்பதனை தீர்மானிக்கும் காலகட்டம் நெருங்கி விட்டது; இதனை எதிர்வரும் கார்த்திகை மாதத்தில் தாக்கல் செய்யப்படும் புதிய அரசியல் அமைப்புச் சட்டமே தீர்மானிக்கும்" எனப் பகிரங்கமாக சிறிலங்காவை எச்சரித்துள்ளார். எச்சரித்த கையோடு சிங்கள பௌத்த பேரினவாதத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தலே தனது அரசின் 'புனிதக்கடமை' என்ற கோட்பாட்டையுடைய சந்திரிகாவின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் சார்பாக புதிய அரசியல் திட்டத்திற்கான அதிகாரப் பரவலாக்கல் தவிர்ந்த 18 அத்தியாயங்களை உள்ளடக்கிய விபரக் கொத்தொன்றையும் வெளியிட்டுள்ளார். இது சிறிலங்கா தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்கு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் சார்பாக எடுக்கும் முயற்சியாகவும் அமைகிறது. ஆயினும், சிறிலங்கா அரசு சிங்கள–பௌத்த பேரினவாதத்திற்கு எவ்வளவு தூரம் வளைந்து கொடுக்கிறது என்பதற்கு உதாரணமாக, 'அதிகாரப்பரவலாக்கல்' எனும் அத்தியாயத்தை மர்மமாக விட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். இதிலிருந்து தமது சார்பான அரசியல் திட்ட ஆலோசனைகளைக் கூட சிங்கள–பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக முன்வைக்கும் துணிவு கூட சிறிலங்கா அரசுக்கு இல்லை என்பது வெளிப்படையாகின்றது. இவ்வாறு தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் இப் பேரினவாதிகளைக் கூட நெறிப்படுத்த முடியாது தவிக்கும் சிறிலங்கா அரசு, இதற்கெல்லாம் அப்பாற்பட்ட நேர்மையானதும் – நீதியானதுமான தீர்வுகளைத் தமிழ் மக்களுக்கு வழங்குமா? என்ற கேள்வியை உலக நாடுகள் நெஞ்சில் நிறுத்திப் பார்க்க வேண்டும். அப்போதுதான், இலங்கைத் தீவின் யதார்த்த நிலையும், சிங்களவர்களதும் தமிழர்களதும் இறைமை – பிரித்தானிய காலனித்துவத்தால் பொதுவாக்கப்பட்டதினால் ஏற்பட்ட, ஏற்பட்டுவரும் விளைவுகளும் உலக நாடுகளுக்குத் தெளிவாகும்.

மேலும், இச் சிங்கள–பௌத்த பேரினவாதிகள் தீர்வுகளை வழங்கத் தாம் முற்படுவதாகக் கூறும்பொழுது அவர்கள் கையாளும் சில நடைமுறைகளையும் சர்வதேச சமூகத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். இன்று நேற்றல்ல என்றுமே சிறிலங்கா அரசுகள், சிங்களவர்களை ஆள்ப வர்களாகவும் தமிழர்களை ஆளப்படுபவர்களாகவும் கருதுகின்றனவே தவிர, பங்குபற்றல் ஜனநாயகத்தின் மூலம் தமிழர்களுடன் கலந்து பேசி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முயல்வதில்லை. சிங்கள அரசுகளின் இத் தத்துவமே சிறிலங்கா அரசை, தமிழர்கள் அந்நிய



அரசாகக் கருதுவதற்குக் காரணமாகி விடுகிறது.

மேலும், சிறிலங்கா போரினைப் பிரகட னப்படுத்தியதுடன், இராணுவ நடவடிக்கைகளில் இன்னொரு தேசத்துடன் போரில் ஈடுபடுவதுபோல் பொதுமக்கள் மீதான குண்டுவீச்சுக்கள், பொதுமக்கள் மீதான இராணுவ முற்றுகைகள், பொருளாதாரத் தடைகள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் என்பவற்றை செய்துகொண்டு, அதேவேளை அதனை உள்நாட்டுப் போர் என உலகுக்குக் காட்டியும் வருகிறது. இலங்கைத் தீவின் பிரச்சினை சிறுபான்மை – பெரும்பான்மை பிரச்சினையோ அல்லது பல்இன நாட்டுப் பிரச்சினையோ அல்ல. இது தமிழீழத் தேச மக்களுக்கும் சிங்களத் தேச மக்களுக்கும் இடையிலான தேசியப் பிரச்சினையாகும். இந்த உண்மையை சிறிலங்கா அரசு மூடி மறைக்கிறது. இதனாலேயே நேர்மையான, நீதியான தீர்வு – இலங்கைத் தீவின் பிரச்சினைக்கு முயற்கொம்பாகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக. வரலாற்றுத் திரிபுவாதத்தின் மூலம் தமிழர்களின் தாயக இருக்கையை சிங்கள அரசுகள் ஏற்க மறுக்கின்றன. இதனால், பௌத்த பேரினவாதத்தை வேதமாகவும் பௌத்த மகாசங்கத்தின் மதவெறியை ஆகமமாகவும் கொண்ட தீர்வுகளையே அவற்றால் என்றும் பிரசவிக்க முடிகிறது. அது மட்டுமல்லாது, தமிழ் மக்களின் நியாயமானதும் – தவிர்க்கப்பட முடியாததும் – சர்வதேச சட்டங்களுக்கு ஏற்புடையதுமான சுயநிர்ணய உரிமைப் பிரயோகமாகிய தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் 'பயங்கரவாதம்' எனக் கொச்சைப்படுத்துவதினால், சிறிலங்கா அரசு தானாகவே தமிழீழ மக்களைத் தனியரசு நிலைக்குத் தள்ளி வருகிறது. இப் பயங்கரவாத முத்திரையினைத் தமிழீழ மக்களின் உண்மைப் பிரதிநிதிகள் மேல் குத்திவிட்டு, போலித் தமிழ்த் தலைமைகளை உருவாக்கி தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான பங்களிப்பு உரிமையை சிறிலங்கா என்றுமே மறுத்து வருகின்றது. இதன் மூலம், தமிழீழ மக்கள் தாமாகவே தமக்கான அரசியல் எதிர்காலத்தை நிர்ணயித்து, அதனை சர்வதேச நாடுகள் அங்கீகரிக்க 'வேண்டும் எனக் கோர வேண்டிய காலத் தேவையையும் அதனை ஏற்க வேண்டிய சர்வதேச நாடுகளின் கடமையையும் சிறிலங்கா உருவாக்கி நிற்கிறது.

இதனை சர்வதேச நாடுகள் உணர்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்காது தடுக்கும் சூழ்ச்சிகளே இன்றைய சிறிலங்கா அரசின் செயற்பாடுகளாக உள்ளனவே தவிர, தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்த உண்மையான அக்கறையும் சிறிலங்காவால் வெளிப்படுத்தப்படவில்லை. தமிழ் மக்களின் மனித உரிமைகளை வன்முறைப் படுத்துவதன் மூலம் இனங்காணக்கூடிய அச்சத்தைத் தோற்றுவித்து, தமிழ் மக்களின் அரசியல் பணிவை வலுக்கட்டாயமாகப் பெறுதலை தனது கொள்கையாகக் கொண்ட சிறிலங்கா, ஐக்கிய நாடுகள் சபையினதும் – சர்வதேசச் சட்டங்களினதும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டங்களின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காக முன்னர் மனித உரிமைகள் பணிக் குழுவையும் தற்பொழுது மனித உரிமைகள் ஆணைக்குழுவையும் நியமித்து சர்வதேச சமூகத்தைத் திசை திருப்புகிறது. ஆயினும், நடைமுறையில் தமிழர்களின் மனித உரிமைகள் நாளுக்கு நாள் அதிகளவில் சிறிலங்கா அரசால் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதை புள்ளிவிபரங்களும் செய்திகளும் உறுதிப்படுத்தி வருகின்றன. எனவே, சிறிலங்கா சர்வதேச சமூகத்தை ஏமாற்ற எடுக்கும் முயற்சிகளில் சர்வதேச சமூகம் ஏமாறாது தடுப்பதற்கான பொறுப்பு – புலம்பெயர் தமிழர்க ளுடையது. இதனை உணர்ந்து, "ஏமாற்றப் பார்க்கிறார்கள் – ஏமாறாதீர்கள்" என்பதை சர்வதேச சமூகத்திற்குப் பரப்புரை செய்வோமாக! ✷

## உண்மை வலியது

ஆசிரிய தலையங்கம் . ஈழநாதம் – தமிழீழம்

சிறிலங்கா இராணுவ ஆய்வாளர்கள் நீண்டகாலமாகவே வெளிநாடுகளில் புலிகள் மேற்கொள்ளும், சிறிலங்கா அரசிற்கு எதிரான பிரச்சாரங்கள் அவர்களுக்கு வெற்றியளித்து வருவதாகவும் சிறிலங்கா அரசினால் இவற்றை முறியடிக்க முடியாதுள்ளது எனவும் குறை கூறிவருவதோடு தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியும் வந்துள்ளனர். இந்த வகையில் சண்டே ரைம்ஸ் இதழின் இராணுவ ஆய்வாளர் ஒருவரும் சில வாரங்களுக்கு முன்னர் வெளிவந்த இதழில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கம் தமது பிரச்சார நடவடிக்கைகளுக்காக, 'இன்டர் நெட்' உட்பட நவீன மக்கள் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி வருகின்றது என்பது உண்மைதான். ஆகையினால் தகவல்களை சர்வதேச ரீதியில் அதனால் பரவல் செய்ய முடிகின்றது என்பதும் சரியானதுதான். ஆனால் விடுதலைப் புலிகளின் பிரச்சாரம் சர்வதேச ரீதியாக எடுபடுவதற்கும் உலகச் செய்தி நிறுவனங்கள் கண்டுகொள்வதற்கும் தனியாக இவை மட்டும்தான் காரணமா? அவ்வாறானால் சிறிலங்கா அரசினால் அவ்வாறான வசதிகளைச் செய்யமுடியாதா? விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்படும் மக்கள் தொடர்புச் சாதனங்கள் போன்றதை, அரசு பயன்படுத்துவது என்பது கடினமான காரியமல்ல. ஒருவகையில் பார்க்கையில் அரசு என்ற ரீதியில் பொருளாதார ரீதியிலும் அரசுக்கு இது மிக மிக இலகுவானதொன்றாகவே இருக்கும். இதே சமயம் உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள சிறிலங்கா தூதரகங்கள் இப்பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் வாய்ப்பாக இருக்கும். அத்தோடு வலுவான தொலைத்தொடர்புச் சாதனங்கள் அதிகமாக இருப்பதினால் பிரச்சாரத்தை வேகமாகவும் நிறைவாகவும் மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இதனை, ஒரு சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் அறிக்கை வெளிவரும் முன்னர், அரசின் அறிக்கை வெளிவருவதில் இருந்தே புரிந்துகொள்ள முடியும். ஆகையினால் தொடர்பு சாதனங்கள் என்ற ரீதியில் புலிகளை விட விரைவாகப் பிரச்சாரங்களை மேற்கொள்ளக் கூடிய வசதி அரசிற்கு அதிகமாகவே உள்ளது. இதைத் தவிர, சிறிலங்கா அரசின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் சர்வதேச ரீதியாகச் சென்று பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளும் அரசுக்கு உண்டு. இந்த வகையிலும் புலிகளுக்கு எதிரான பிரச்சாரம் என்ற ரீதியில் அமைச்சர் கதிர்காமர் பல சுற்றுலாக்களை மேற்கொண்டுள்ளார். இதற்குச் சில உலக நாடுகள் வரவேற்பும் ஒத்துழைப்பும் வழங்கியுள்ளன. ஆனால் அவ்வாறு ஆதரவு கிடைக்கப்பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் புலிகளின் பிரச்சாரத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இந்த நிலை ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் என்ன? இதற்கு ஒரே காரணம் – சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் பிரச்சாரம் அனைத்துமே – உண்மைக்கு மாறானவை, யதார்த்தத்திற்குப் புறம்பானவை என்பதினாலேயே ஆகும். இதனால் பிரச்சாரங்கள் அடிப்படை ரீதியிலேயே வலுவிழந்தவையாகவும், தார்மீகபலம் அற்றவையாகவும் உள்ளன. இன ஒடுக்குமுறையையும் இனப்படு கொலையையும் திட்டமிட்டே மேற்கொள்ளும் சிறிலங்கா அரசு, அவற்றைப் பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிரான அரசின் நடவடிக்கை என எத்தனை காலத்திற்குத்தான் கூறமுடியும். அரசின் தீவிரப் பிரச்சாரங்களினால் உண்மை சிறிது காலத்திற்கு மறைக்கப்பட்டிருப்பினும் கூட, இறுதியில் மறைக்க முடியாது வெளிவந்தே தீரும். ஆனால் விடுதலைப் புலிகளின் பிரச்சாரங்களே உண்மையின்பாற் பட்டவையாகும். அத்தோடு, ஓர் ஒடுக்கப்பட்ட இனத்தின் விடுதலைக்கான குரலுமாகும். ஆகையினால் தார்மீக பலம் கொண்டதாகவும், மனிதாபிமானம் கொண்ட மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையுமாக உள்ளன. அத்தோடு இப்பிரச்சாரத்திற்கான ஆதாரங்களும் புலிகளினால் வெளிப்படுத்தப்படக்கூடியவையாக உள்ளன. இந்த நிலையில் சிறிலங்கா அரசின், விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரம் தோல்வியை அடைவதும், விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் பிரச்சாரம் வெற்றி அடைவதும் அவர்களுக்குக் கிடைக்கப்பெறும் வசதிகளைப் பொறுத்த விடயம் மட்டுமல்ல, உண்மைக்கும் பொய்மைக்கும் இடையிலான போராட்டத்தின் விளைவுமாகும். பொய்மை, உண்மையை மறைத்து சிறிது வெற்றிகொள்ளலாம். ஆனால் இறுதியில் பொய்மை உண்மையை எதிர்த்து நிற்கமுடியாமல் போவது தவிர்க்க முடியாமையே ஆகும். ஏனெனில் உண்மை என்றும் வலியது. ✷

www.tamilarangam.net



# தமிழர் தாயகத்தை அந்நிய இராணுவம் ...

சிறிலங்காவுக்குச் சென்று அங்குள்ள நிலை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்."

இவ்வாறு திரு. குமார் பொன்னம்பலம் சர்வதேசக் கல்வி அபிவிருத்தி அமைப்பின் சார்பாக, பங்குனி 25ஆம் திகதி ஜெனிவாவில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 53வது அமர்வில் சாட்சியம் அளிக்கையில் வேண்டுகோள் விடுத்தார். அவர் தமது சாட்சியத்தில், "இந்தச் சபையின் உடனடிக் கவனத்தையும் தலையீட்டையும் கோரும் நிலைமைகளை எடுத்துரைக்க இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த விரும்புகிறேன்; இலங்கைத் தீவில் இருந்து வந்த நான் அந்நாட்டின் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவன். கைதுகள், தடுத்து வைத்தல், சித்திரவதை, சிறை வைத்தல், காணாமல் போதல் ஆகியவற்றை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். அங்கு தமிழர்களுக்கு எதிராக, "சமாதானத்துக்கான போர்" என்ற தீமையான சித்தாந்தத்துடன் போர் நடந்து கொண்டிருக்கிறது. தமிழர்களின் மரபுவழித் தாயகமான வடக்கு–கிழக்குப் பகுதியில் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்தச் சண்டையில் தற்பொழுது கொலைகள் அதிகரித்து வருகின்றன. இங்கு தடுத்து வைத்தல் தொடர்பான கோட்பாடுகள் யாவும் அலட்சியம் செய்யப்படுகின்றன. ஆயுதப் போராட்டங்களின் போது பின்பற்றப்பட வேண்டிய சர்வதேசம் தழுவிய மனித நேய சட்டங்கள் மீறப்படுகின்றன.

சிறிலங்கா அரச படைகள் – கைது செய்தல், சித்திரவதைகள், காணாமல் போதல் மற்றும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் ஆகியவற்றின் மூலம் தமிழர்களைத் துன்புறுத்துகின்றன. அத்துடன் சிறிலங்காப் படைகள், தம்முடன் உள்ள குழுக்கள் மேற்குறிப்பிட்ட குற்றங்களைச் செய்வதற்கு அனுமதியும் வழங்கியுள்ளன.

தன்னிச்சையான . கைதுகள் விடயத்தில் ஒரே மாதிரியான சட்டரீதியான கருத்துக்கள் இல்லை. இவ் விடயத்தில் சாதாரணமான சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகால விதிகள் ஆகியவை செயற்படுத்தப்படுகின்றன. இச் சட்டங்களின் கீழ் எந்தவொரு காவற்துறையினரும், முப்படைகளின் அங்கத்தினரும் கைதுகளை மேற்கொள்ளலாம். தடுத்து வைத்தல் சட்டத்தில் சமநிலை இல்லை. சாதாரண சட்டத்தின் கீழ் தடுத்து வைத்தல் இயலாது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் உயர்தர பொலிஸ் அதிகாரியால் விடுக்கப்படும் தடுப்புக் காவல் உத்தரவு பாதுகாப்பு அமைச்சால் நீடிக்கப்படலாம். அவசரகால நிலைமைகளின் கீழ் வடக்கு–கிழக்கில் மேற்கொள்ளப்படும் கைதுகளுக்கும் கொழும்பில் மேற்கொள்ளப்படும் கைதுகளுக்கும் வித்தியாசங்கள் உண்டு.

தடுப்புக் காவல் நேரத்தில் அனாதரவான தமிழர்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர். அவர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பலவந்தமாகப் பெறப்படுகிறது அல்லது உற்பத்தி செய்யப்படுகிறது.

யாழ்ப்பாண பாடசாலை மாணவிகள் கிருசாந்தி குமாரசாமி, ரஜனி வேலாயுதபிள்ளை, தேனுகா செல்வராஜா சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்தவர்களால் கூட்டான பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதும் அதில் முதல் இரண்டு பிள்ளைகள் படுகொலை செய்யப்பட்டதும் சர்வதேச எதிர்ப்பை உருவாக்கியுள்ளன. தமிழர்கள் தன்னிச்சையின்றிக் காணாமல் போவது, வடக்கில் மட்டுமல்ல கொழும்பிலும் கிழக்கிலும் இடம்பெறுகிறது. திருமலை மாவட்டம் குமாரபுரம் பகுதியில் 26 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். பொல்கொடவாவியிலும் தியவன்ன ஆற்றிலும் 21 தமிழர்களின் சடலங்கள் மிதக்கக் காணப்பட்டன. கடந்த வாரம் கூட வவுனியாவில் இரு தமிழ்ப் பெண்களின் சடலங்கள் வீதியோரத்தில் வீசப்பட்டிருந்தன. திருகோணமலையில் சிறை உடைப்பு ஒன்று நடந்தபோது சிறையில் எஞ்சியிருந்த ஐவர் கடற்கரைக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மனித உரிமைகளை மீறியமைக்குப் பொறுப்பானவர்களை அணுக முடியாத நிலைமை, சிறிலங்காவில் நடக்கும் அதிர்ச்சி தரும் விடயங்களில் ஒன்றாகும். குமாரபுரம் சம்பவத்தின் போது கைதாகி அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர்களான 6 இராணுவத்தினர், ஆற்றில் சடலங்கள் மிதந்தமை தொடர்பாகக் கைதான சந்தேக நபர்களான விசேட அதிரடிப் படையினர், ஆட்கள் எரிக்கப்பட்டது தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களான ஆறு பொலிஸ் அதிகாரிகள் ஆகிய அனைவருமே பிணையில் விடப்பட்டார்கள். அவர்களுக்கு எதிராக இன்னமும் வழக்கு எதுவும் தொடரப்படவில்லை.

தமிழர்கள் பாதிப்படைந்து வருவதும் பல மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாவதும், பல அமைப்புகளால் சிறிலங்காவுக்கு உள்ளேயும் வெளிநாட்டிலும் கவனமாக வரிசைப்படுத்தப்பட்டு பதியப்பட்டுள்ளன. அதில் ஒன்று, தமிழர்களின் மனித உரிமைகளுக்கான அமைப்பால் பதியப்பட்டு இந்த அமர்வில் சரன்றாக முன்வைக்கப்படுகிறது" எனவும் கூறினார். ✷

# யாழ். குடாநாட்டு மக்களுக்கு ....

விசேட அடையாள அட்டைகள் கடந்த சித்திரை மாதம் முதல் இவ்வாண்டு பங்குனி வரை தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் இன்னும் நாற்பதாயிரம் அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் சிறிலங்கா அறிவித்துள்ளது. தீவகப் பகுதிகளில் 10 ஆயிரம் மக்கள் விசேட அடையாள அட்டை வழங்குவதற்கென புகைப்படம் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இவ் விசேட அடையாள அட்டை முயற்சியானது – யாழ். குடாநாட்டு மக்களைத் தனிமைப்படுத்துவதற்காகவும் நடமாட்டச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்படும் ஒரு புதிய அடக்குமுறை முயற்சி என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சிறிலங்கா அரசு, தமிழ் மக்களை தனது குடிகள் எனக்கூறி வருகிறது. அப்படியிருக்கையில் தேசிய அடையாள அட்டை எனக் கூறப்படும் அடையாள அட்டை இருக்கும்போது, விசேடமானது எனக் கூறப்படும் இத்தகைய நடவடிக்கைகள் – சிறிலங்கா அரசானது, தமிழ் மக்களது அந்நிய அரசுதான் என்பதை மேலும் தெளிவாக்குகின்றது.

மக்கள் அந்நிய அரசுக்கு எதிராகப் போராடுவதை ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்களும், சர்வதேசச் சட்டங்களும் ஏற்கின்றன. அவ்வகையில் தமிழ் மக்களின் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமும் – அந்நிய அரசுக்கு எதிரான தேசிய விடுதலை போராட்டமே என்பதை சிறிலங்காவின் இவ் விசேட அடையாள அட்டைத் திட்டம் உறுதிப்படுத்துகிறது. ✷

# பிரித்தானிய அரசின் முயற்சி .....

சிங்களக் கட்சிகளுக்குமிடையிலான "பொது அணுகுமுறை" இணக்கப்பாடு உருவாகுவதற்கு கடந்த 7 மாதங்களாகப் பிரித்தானிய அரசின் வெளிவிவகாரச் செயலாளர் திரு. மல்கம் ரிவ்கிண்ட் அவர்களும், அவரின் பிரதிச் செயலாளர் திரு. லியம் பொக்ஸ் அவர்களும் உழைத்ததாக பிரித்தானிய வெளிநாட்டு அலுவலகம் அறிவித்துள்ளது.

வட அயர்லாந்து விவகாரம் தொடர்பாக, பிரித்தானியப் பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் ஒரே திசை அணுகுமுறையைக் கையாள்வதை மாதிரியாகக் கொண்டு, சிறிலங்காவின் ஆளுங்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் இந்தப் "பொது அணுகுமுறை"த் திட்டம் வடிவமைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறிலங்காவின் சமாதானப்பேச்சுவார்த்தை குறித்த செய்திகள் பரவலாக வெளிவந்து கொண்டுள்ளன. சிறிலங்காவின் இரு பிரதான சிங்களக் கட்சிகளுக்கிடையே சமாதான நடவடிக்கை விடயத்தில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. பொது சன ஐக்கிய முன்னணி மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கை குறித்து, ஐக்கிய தேசியக்கட்சி தடையாக நிற்காதென தெரிவித்துள்ள அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இதன் அர்த்தம் அரசின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்வது என்பதாகாது எனவும் தெரிவித்துள்ளார். பிரித்தானிய அரசின் முயற்சியின் பேரிலேயே இரு கட்சிகளும் இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கும் செய்தித்தாபனங்கள், இவ்விணக்கப்பாட்டை அடுத்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை சிறிலங்கா அரசு ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் குறித்தும் ஊகம் தெரிவித்துள்ளன.

## புலிகளுடன் பேச்சு நடாத்துவதின் முக்கியத்துவம் ஏற்பு

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டியதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், போர் தொடர்பான எந்த முக்கிய செயற்பாடுகளையும் சிறிலங்கா ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவருக்கு சுருங்க அறிவுறுத்தல் செய்வதற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ✷

# இராணுவ ஆக்கிரமிப்புப் பிடிக்குள்....

முதலாம் திகதி சிறிலங்கா இராணுவத்தால் நாச்சிமார் கோவிலடி சுற்றிவளைக்கப்பட்டு, மக்கள் பொது மைதானங்களுக்கு வருமாறு கட்டாயப்படுத்தப்பட்டு, கொதிக்கும் வெயிலில் தண்ணீர் தாகத்துடன் நிறுத்தப்பட்டு, மாலை வரை பதைபதைக்க வைக்கப்பட்டதன் பின்னர் வீடுகளுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். கைதாகிக்கொண்டு செல்லப்படுபவர்கள் பற்றிய தகவல்களைப் பெறமுடியாதவாறு தவிக்கும் பெற்றோர்கள், கிட்டிய குடும்ப உறுப்பினர்கள் பலதடவைகளில் அவர்களது உயிரற்ற சடலங்களையே காணக்கூடியதாக உள்ளதென கண்கலங்கக்கூறிய அவர், குறிப்பாகப் பள்ளிமாணவர்களே இராணுவ இலக்காக்கப்படுவதாகவும் இதனால் அவர்களின் கல்வி கற்பதற்கான உளவியல் நிலை பாதிக்கப்பட்டு கல்வித்தரம், சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் படுமோசமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், பரா இராணுவத்தினராக தமிழ்க்குழுக்களைச் சேர்ந்தவர்களின் குடாநாட்டு வருகை மாறியுள்ளதாகக் கூறிய அவர், மேற்படி குழுக்களைச் சேர்ந்தவர்களால் பொதுமக்கள் தாக்கப்பட்டும் இம்சைப்படுத்தப்பட்டும் வருவதனால் இத்தமிழ்க் குழுக்களின் வருகை மேலும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். மட்டக்களப்பு நகரில் தையல்வேலை செய்து வந்த பெண் ஒருவர் புளட் குழுவைச் சேர்ந்த ஒருவனால், சிங்கள வெறியர்களின் பாணியில் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட செய்தி வெளிவந்ததையடுத்து, யாழ் குடாநாட்டிலும் இத்தமிழ் குழுக்களின் வருகை தமிழ் பெண்களிடையே பலத்த அச்சத்தைத் தோற்றுவித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை பங்குனி 2 ஆம் திகதி, கோண்டாவிலில் முகாமிட்டுள்ள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணமற்போயுள்ள 23 வயதுடைய மஞ்சுளா துரைராசாவின் செய்திகள், 20 ஆம் திகதி நள்ளிரவில் தென்மராட்சியில் தீய நோக்குடன் வீட்டிற்குள் நுழைந்த இராணுவத்தினரைக் கண்டு அவலக்குரல் எழுப்பிய 37 வயதுடைய அன்னபூரணம் கந்தசாமி மற்றும் அவரது மகள் 12 வயதுடைய தவரஞ்சினி கந்தசாமி ஆகியோர் இராணுவத்தால் சுடப்பட்டு காயப்படுத்தப்பட்டனர்.

மைலம்பாவெளி முகாமைச் சேர்ந்த இராணுவக் குண்டர்களால் பாலியல் வல்லுறவுக்கு இலக்கான பெண் விசம் குடித்து தற்கொலை செய்ய முயன்றுள்ளார். ஊர்காவற்றுறையில், இராணுவ ஆக்கிரமிப்பின் பொழுது ஒரு வருடத்திற்கு முன் கொல்லப்பட்ட இளம் பெண் ஒருவரின் எலும்புக்கூடும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவங்கள் யாவும் தமிழ் இளம் பெண்களிடையே மேலும் அச்சத்தை ஏற்படுத்தி வருவதாகவும் கூறியுள்ளார்.

கைதடியில் முதியவர் ஒருவர், தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்களால் மிக மோசமாகத் தாக்கப்பட்டதாகவும் பொதுமக்கள் இக்குழுக்களால் பல்வேறு இம்சைகளுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவித்த மேற்படி நபர், தமிழ் குழுக்களின் வருகையினை அடுத்து இராணுவம் சில பகுதிகளிலிருந்து விலகிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பிலும் சுற்றி வளைப்புக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்மாதம் 2 ஆம் திகதி சிறிலங்கா இராணுவம் பல கிராமங்களைச் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தியதுடன் வெருகல்முனை, புதூர் மற்றும் இவற்றைச் சுற்றியுள்ள கிராமங்கள் அதிகாலை 6 மணிக்கே சுற்றி வளைக்கப்பட்டதாகவும் முகமூடி அணிந்த தலையாட்டிகளின் துணையுடன் 20 இளம் வயதினர் இராணுவத்தால் கொண்டு செல்லப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கொழும்பில் தமிழ் நோயாளிகளும் கைது

கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகளின் படி, இம்மாதம் 3 ஆம் திகதி கொழும்பின் பல பகுதிகளிலும் தமிழர்களை மனித வேட்டையாடும் வேலைகள் மும்முரமாக நடாத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இச்சுற்றிவளைப்பின் போது, 300 இற்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் கைதாக்கப்பட்டதாகவும் இவர்களில் பலர் விடுதலைப்புலிகள் என்ற சந்தேக முத்திரை குத்தப்பட்டு விசாரணையின்றி காலவரையற்ற தடுப்புக்காவலுள் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. கொழும்பில் நீண்ட காலமாகத் தங்கியிருந்த தமிழ் நோயாளிகளும் பிறநாட்டிற்கு செல்லவென வந்த தமிழர்களும் கைது செய்யப்பட்டதுடன் ஆண் – பெண், சிறியோர் – முதியோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் இம்சைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. ✷

www.tamilarangam.net



# சிங்கள அரசின் கொள்கை நிலைப்பாட்டின்படி: சமாதானத் தீர்வுக்காகப் போர் ; இராணுவத் தீர்வுக்காகப் பேச்சுவார்த்தை!

தமிழருடனான போருக்கு அம்மையார் இட்ட பெயர் **சமாதானத்திற்கான போர்.**

அம்மையார் நடாத்த விரும்பும் அரசியல் பேச்சுவார்த்தைக்கு **இராணுவத் தீர்விற்கான பேச்சுவார்த்தை** என்று பெயர் சூட்டுவது சிறந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்காக, அவர் விதித்துள்ள முன் நிபந்தனைகளான **ஆயுதச் சரணடைவும் – பேச்சுக்கான குறுகியகால எல்லை விதிப்பும்** இராணுவத் தீர்விற்கான நடைமுறைகளே அன்றி வேறொன்றும் அல்ல.

## பேச்சுவார்த்தைக்காக, சந்திரிகா அரசு விதிக்கும் முன்நிபந்தனைகள் இரண்டும் ஏற்க முடியாதவை! ஏன்?

சந்திரிகா அம்மையாரின் திமிர்த்தனமான இந்த இராணுவ சிந்தனையை உலகிற்குப் புலப்படுத்தும் வகையில் தலைவர் பிரபாகரனின் 1996ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரை அமைந்திருந்தது. சந்திரிகா அரசின் இராணுவவாதப் போக்கையும் – பேரினவாத நிலைப்பாட்டையும், அந்த உரையில் தலைவர் அவர்கள், சர்வதேச சமூகத்திற்கு விளக்கிக் கூறியுள்ளார்.

அதேவேளை 'சமாதானம்', 'அரசியல் தீர்வு' என்று சந்திரிகா அம்மையார் பேச்சளவில் மட்டும் பயன்படுத்திவரும் அரசியல் வார்த்தைகளுக்கு நடைமுறை வடிவம் கொடுக்கும் நீதியான – சமத்துவமான வழிவகைகள் பற்றி, தலைவர் அந்த உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக, அரசு விதித்துள்ள நிபந்தனைகளைப் பார்க்கும்போது ஒரு உண்மை வெளிப்படுகின்றது. அமைதிவழி மூலம் ஒரு நிரந்தர அரசியல் தீர்வுக்கு, சிறிலங்கா அரசு தயாராக இல்லை என்பதே அதுவாகும்.

ஆயுதச் சரணடைவைப் புலிகள் இயக்கம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. தலைவர் கூறியுள்ளது போல "தன்மானமுள்ள எந்த ஒரு விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப்பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை". அத்துடன், இந்த முன் நிபந்தனையை உலக சமூகம் ஆதரித்துக் குரல் கொடுக்கவும் மாட்டாது.

சந்திரிகா அரசைப் பொறுத்தவரையில் தமிழரின் இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வை வழங்குவதைவிட புலிகளின் ஆயுதங்களை நயவஞ்சகமாகப் பறித்தெடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக உள்ளது. ஏனெனில், தமிழர் தேசியத்தின் பாதுகாப்புக் கவசமாகவும், தமிழ் இனத்தின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு அடிப்படைக் காரணியாகவும் விளங்கும் புலிகளின் இராணுவ பலத்தை எப்படியாவது சிதைத்துவிட்டால், அரசியல் தீர்விற்கான தேவையும் இல்லாமல் போகும். தமிழரின் ஆயுதப் போராட்டத்தை நசுக்கிவிடவும் முடியும் என்பது பேரினவாதிகளின் கணிப்பு. இந்த வகையில், ஆயுதங்களைப் புலிகள் சரணடைவு செய்ய வேண்டும் என்ற அரசின் நிலைப்பாடு, சமாதானத்திற்கான நிபந்தனை அல்ல; தமிழினத்தின் அழிவுக்கான முன் நிபந்தனையே அதுவாகும்.

இதேபோன்றுதான், பேச்சுவார்த்தைக்கு குறுகிய கால எல்லை விதிப்பது என்ற, அம்மையாரின் அடுத்த நிபந்தனையும் யதார்த்தத்திற்குப் பொருந்தாதது. அதேவேளை, வரலாற்றையும் அது நிராகரிக்கின்றது.



24 ஆண்டுகள் இரத்தம் தோய்ந்த போர் வரலாற்றையும், 50 ஆண்டுகால அரச ஒடுக்குமுறை வரலாற்றையும், பல நூற்றாண்டுகால பகைமை வரலாற்றையும் தன்னகத்தே கொண்ட 'இடியப்பச்' சிக்கலான, தமிழ் – சிங்கள இனப்பிரச்சினையைக் 'கோழி முட்டையைக் குஞ்சு பொரிப்பதுபோல', மிகக் குறுகிய காலத்தில் பேசித் தீர்க்கக் காலக்கெடு விதிப்பது சரியான அணுகுமுறை அல்ல. இது ஒரு சர்வாதிகாரச் சிந்தனை. ஜனநாயக விரோத நிபந்தனை.

முடிந்தளவுக்கு விரைவாக இனப் பிரச்சினையைப் பேசித் தீர்க்க வேண்டும் என்பதுதான் புலிகளின் விருப்பம். தமிழ் மக்களின் ஆசையும் – எதிர்பார்ப்பும் – அதுதான். ஆனால், சிங்கள அரசு காட்ட விரும்பும் கடுகதி வேகம் நல்ல நோக்கம் கொண்டது அல்ல. மாறாக, சிங்கள அரசின் அரசியல் கொள்கையாகிய இராணுவத் தீர்வைத் தாமதமில்லாமல் தொடர்வதற்கு ஏதுவாக, பேச்சுவார்த்தையை வேகமாக முடிக்க வேண்டும் என்ற இராணுவ நோக்கமே – அரசு காட்ட விரும்பும் கடுகதி வேகத்திற்குக் காரணமாகும்.

சிங்கள அரசு நியமித்த பாராளுமன்றத் தெரிவுக்குழு, ஆண்டுக் கணக்காகக் கூடிப்பேசியும் ஒரு தீர்வுத் திட்டத்தை அதனால் இன்றுவரை வரையமுடியவில்லை. அதுபோல, சந்திரிகா அரசின் தீர்வுப்பொதி நகலை முழுமைப்படுத்தும் நோக்குடன் நடாத்தப்படும் கலந்துரையாடல்களும் – கருத்துப் பரிமாற்றங்களும் – ஏறக்குறைய ஓராண்டாக முடிவு காணாது தொடர்கின்றன. சிங்கள – தமிழ் மக்கள் மீதான இராணுவ அட்டூழியங்கள், மர்மக் கொலைச் சம்பவங்களை விசாரிக்கவென, அரசு பல விசாரணைக் குழுக்களை அமைத்ததுவே! மாதங்கள் பல கடந்தும் அதில் ஏதாவது ஒன்று தன்னும் விசாரணையை முடித்துள்ளதா?

உண்மை நிலைமை இப்படி இருக்கப் புலிகள் இயக்கத்துடனான அரசியல் பேச்சுவார்த்தையை மட்டும் மிகக்குறுகிய காலத்தில் முடித்துவிட வேண்டும் என்று முன் நிபந்தனை விதிப்பதற்கு என்ன காரணம்?

"பேச்சுவார்த்தைக் காலங்களைத் தமது இராணுவ பலத்தை அதிகரிக்கப் பயன்படுத்தும் இடைவெளியாகப் புலிகள் இயக்கம் பாவிப்பது வழமை. எனவேதான் ஒரு கால எல்லையை பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளுள் ஒன்றாக விதிக்கின்றோம்" என அரச தரப்பில் காரணம் கூறப்படுகின்றது.

இது பொய்யான காரணம்; பொருந்தாத வாதம்.

வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதன் மூலமே புலிகள் தமது இராணுவ பலத்தை அதிகரித்துக் கொள்கின்றனர் என்றும், அதைச் சமாதான காலத்தில் வடக்கு – கிழக்கிற்குக் கடத்தி வருகின்றனர் என்றும் பொய்யான கற்பிதங்கள் மூலம், பேச்சுவார்த்தைக்கான இந்த நிபந்தனைக்கு நியாயம் கூற அரசு எத்தனிக்கின்றது.

ஒரு சில நவீன ஆயுதங்களை வெளிநாட்டுச் சந்தைகளில் இருந்து புலிகள் இயக்கம் கொள்வனவு செய்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. எனினும், சிங்களப் படையிடமிருந்து கைப்பற்றப்படும் ஆயுத தளபாடங்கள் மூலமே, பெரும்பாலும் புலிகள் இயக்கம் தனது படைபலத்தை வளர்த்துக் கொள்கின்றது. பூநகரி 'தவளை'த் தாக்குதலில் கைப்பற்றப்பட்ட டாங்கி மற்றும் **சக்தி வாய்ந்த நீருந்து விசைப்படகுகளைக்** கொண்டும், ஓயாத அலைகள், புளுகுணாவி தாக்குதல்கள் மூலம் **'ஆட்டிலறி' ஏவு கருவிகள்** உட்பட பெருந்தொகைப் படைக்கலங்களை புலிகள் கைப்பற்றியும், தமது

## பேச்சுவார்த்தைக்கான முன் நிகழ்வாகப் புலிகள் இயக்கம் வலியுறுத்தும் விடயங்கள் சரியானவை! ஏன்?

இராணுவ பலத்தை உயர்த்தி வருவதை – உதாரணத்திற்காக – இங்கே சுட்டிக்காட்ட முடியும்.

எனவே, போர்க்காலங்களிலேயே புலிகள் இயக்கம், தனது இராணுவ பலத்தை பெருக்கிக் கொள்கின்றது. அரசு கூற முற்படுவதுபோல சமாதான காலத்தில் அல்ல. அரச படையிடமிருந்து அடித்துப் பறிக்கப்படும் ஆயுத தளபாடங்கள்தான் புலிகளின் படைவலுப் பெருக்கத்திற்குப் பிரதான காரணம். அரசு கூற விரும்புவதுபோல வெளிநாடுகளில் கொள்வனவு செய்யப்படும் படைக்கலங்கள் மூலம் அல்ல.

இந்த உண்மை எமது மக்களுக்கு மட்டுமல்ல – உலக நாடுகளுக்கும், ஏன், சிங்கள அரசிற்கும் நன்கு தெரியும்.

இந்த வகையில், **பேச்சுவார்த்தைக்கு குறுகியகால எல்லை விதிப்பது** என்ற தனது நிலைப்பாட்டிற்கு, அரசு அளித்த விளக்கம் பொய்யானது என நிரூபணமாகின்றது. உலகை ஏமாற்றுவதற்குப் போட்டுக்கொண்ட சமாதான வேடத்தால் தனது போர் முயற்சி தடைப்பட்டுவிடக் கூடாது என்ற அம்மையாரின் இராணுவ சிந்தனைதான் மேற்குறித்த நிபந்தனைக்குக் காரணமேயல்லாது வேறொன்றும் அல்ல.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைக்கான புறச் சூழலை ஏற்படுத்தும் முகமாக சில முன்

தமிழர் தேசியத்தின் பாதுகாப்புக் கவசமாகவும், தமிழ் இனத்தின் அரசியல் உறுதிப்பாட்டுக்கு அடிப்படைக் காரணியாகவும் விளங்கும் புலிகளின் இராணுவ பலத்தை எப்படியாவது சிதைத்துவிட்டால், அரசியல் தீர்விற்கான தேவையும் இல்லாமல் போகும். தமிழரின் ஆயுதப் போராட்டத்தை நசுக்கிவிடவும் முடியும் என்பது பேரினவாதிகளின் கணிப்பு. இந்த வகையில், ஆயுதங்களைப் புலிகள் சரணடைவு செய்ய வேண்டும் என்ற அரசின் நிலைப்பாடு, சமாதானத்திற்கான நிபந்தனை அல்ல் தமிழினத்தின் அழிவுக்கான முன் நிபந்தனையே அதுவாகும்.

தொடர்ச்சி 16ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜே.ஆரின் மறைவு தமிழரின் மனப்பதிவு

சிங்களத்தாருக்கு ஜே.ஆரைப் பற்றிய பெரிய பெருமை; சருவதேசப் புகழ்வாய்ந்த தென்னாசியாவின் முதுபெரும் அரசியல் வாதியென்றும், சிங்களத்தின் சாணக்கியர் – தவப்புதல்வன் என்றும் பலவாறாக அவர்கள் பாராட்டியே வந்துள்ளனர். 1940களில் நேரு, காந்தியோடு இனங்காட்டி, பின் இந்திரா காந்தியோடு மோதி, ராஜீவ் காந்திக்குத் தண்ணிகாட்டி, நடுவராக வந்த படையை புலியோடு மோதவைத்து, அவரது வார்த்தையில் சொல்வதானால் "சிங்களத்திற்குப் பெரும் உயிரழிவு, நிதிச்செலவு ஏற்படாமல் எல்லாவற்றையும் இந்தியா தலையில் கட்டியடித்தவர். கிழட்டு நரி! என்றும் வியப்பது அவர்கள் வழக்கம்.

கொழும்பிலே சட்டத்துறையிலே, புகழ்பெற்ற செல்வந்த உயர்குடியிலே, 1906 செப்ரெம்பர் 17இல் அவதரித்து, சட்டம் பயின்று 1940 டிசம்பரில் கொழும்பு மாநகரசபை உறுப்பினராகி, 1943– மேயில் சட்டசபைக்கு களனித்தொகுதி மூலம் தெரிவான பின், 50 வருடத்திற்கு மேலாக ஒரேயொரு தடவையைத் தவிர (1956–60), 1989 ஜனவரி–2 ஆம் திகதி அரசியலிலிருந்து ஓய்வு பெறும் வரை அபூர்வ அரசியல்



ஆயுளைக் கொண்டவர். 15 வருட அமைச்சர் அனுபவம் கொண்டவர். 1977 யூலையில் பிரதமராகி 1978 பெப்ரவரியில் நிறைவேற்று ஜனாதிபதியாக அவதாரம் எடுத்தார். 1982 மீண்டும் எல்லார் கண்ணிலும் மண்ணைத்தூவி ஜனநாயகத்தையே றப்பராக வளைத்து, இரண்டாம் தடவையும் ஜனாதிபதியாக மொத்தம் 12 வருடங்கள் நாட்டின் தலைவராக தொடர்ந்திருந்தவர். 16–செப்ரெம்பர் 1951 ஆம் ஆண்டு சன்பிரான்சிஸ்கோவிலே, "வெறுப்பை வெறுப்பால் அழிக்க முடியாது; அன்பாலேதான் அதுமுடியும்" என புத்தரின் தத்துவத்தையே யப்பானுக்காகப் பரிந்துபேசி அதன் நல்லெண்ணத்தை பெற்றவர். அத்தோடு, நிலவுடமையாளர் பிடியிலிருந்த சிங்களப் பொருண்மியத்தை புதிய பொருண்மியப் பாதையில் இணைத்துவிட்ட, "தனியார்துறையின் மகாநாயக்கர்" என்றும் இதுவரை காலமும் புகழ்ந்து தள்ளினர் சிங்களத்தார்.

எனவே, இப்பேர்ப்பட்ட "தகுதிகளை" உடைய யூலியஸ் றிச்சர்ட் ஜெயவர்த்தனா டிசெம்பர் மாதம் 1ம் திகதி தனது 90ஆவது வயதில் நண்பகல் 12.15 மணிக்கு மூச்சை நிறுத்தியபின் என்ன நடந்தது? அவரது இறப்பு மேலும் அவருக்கு சிறப்பையல்லவா கொடுத்திருக்க வேண்டும்? ஆனால் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை! அனுதாப அலைக்குப் பதிலாக விவாத அலையே கிளம்பியது. பரிவுக்குப்பதிலாக காழ்ப்பும், வெறுப்புமே பீறிட்டது. நாட்டில் துக்கதினம், விடுமுறை தினம் எதுவும் அறிவிக் கப்படவில்லை. பதிலாக விடுமுறை இல்லையென்றே அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதியின் வேண்டாவெறுப்பான 4 வரி அனுதாபச்செய்தி 2 நாள் கழித்தே வெளியிடப்பட்டது. படைகளின் பிரதம தளகர்த்தராக இருந்தவருக்கே சாதாரண படைமரியாதை கூடக் கிடைக்கவில்லை. இந்தியா பேருக்கு அனுப்பிய அமைச்சரைத் தவிர வேறெந்த வெளிநாட்டுத் தலைவரும் வரவில்லை. எந்தவொரு சர்வதேச சஞ்சிகையும் இறப்பைப் பெரிதாகக் கணிக்கவில்லை. அட்டையில் படம் போடவில்லை. 1987 களில் ஜே.ஆரைச் சுற்றி வந்த "புரொன்ட்லைன்" ராம் கூட ஒருவரி எழுதவில்லை.

இத்தோடு அவமரியாதை முடியவில்லை. எந்த மாநகரசபையில் தனது அரசியல் வாழ்வை ஜே.ஆர் ஆரம்பித்தாரோ, அங்கு என்ன நடந்தது? இதுவரை எந்தவொரு தலைவருக்கும் கிடைக்காத "சிறப்பு மரியாதை" அங்கேதான் கிடைத்தது! ஐ.தே.கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கும் கொழும்பு மாநகரசபை ஜே.ஆருக்கு அனுதாபம் தெரிவிக்க பொதுச்சபையைக் கூட்டியபோது, மாநகரசபையின் ஒரேயொரு N.S.S.P கட்சியின் உறுப்பினரான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின புயலையே கிளப்பினார். "200 வருடங்களுக்கு மேலாக குடியேற்றவாதத்தை ஆதரித்த குடும்பத்திலே தோன்றியவர். இவரது பதவிக்காலத்திலே 37 வேலைநிறுத்தக்காரர் தற்கொலை செய்து கொண்டனர். 83 யூலைக் கலவரத்தின் போது

> "200 வருடங்களுக்கு மேலாக குடியேற்றவாதத்தை ஆதரித்த குடும்பத்திலே தோன்றியவர். இவரது பதவிக்காலத்திலே 37 வேலைநிறுத்தக்காரர் தற்கொலை செய்து கொண்டனர். 83 யூலைக் கலவரத்தின் போது மேலும் பலர் பலியாகினர். இவ்வாறு கொல்லப்பட்டோருக்காகவும், எரிக்கப்பட்ட யாழ். நூல்நிலையத்திற்காகவும், இவை எல்லாவற்றிற்குமாக நான் அனுதாபம் தெரிவிக்கிறேன். தயவு செய்து குறித்துக்கொள்ளுங்கள். நானோ எனது கட்சியோ இவரது இறப்பிற்காக வருந்தவுமில்லை. அனுதாபம் தெரிவிக்கப்போவதுமில்லை!
>
> *- கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின*



மேலும் பலர் பலியாகினார். இவ்வாறு கொல்லப்பட்டோருக்காகவும், எரிக்கப்பட்ட யாழ். நூல்நிலையத்திற்காகவும், இவை எல்லாவற்றிற்குமாக நான் அனுதாபம் தெரிவிக்கிறேன். தயவு செய்து குறித்துக்கொள்ளுங்கள். நானோ எனது கட்சியோ இவரது இறப்பிற்காக வருந்தவுமில்லை. அனுதாபம் தெரிவிக்கப் போவதுமில்லை! என்றார்.

இதற்கெல்லாம் என்ன காரணம்? பெருந்தன்மையற்ற குறுகிய சுயநோக்கம் கொண்ட குள்ளநரிப்புத்தி, எப்போதும் முதலாளிய நலன்பேணி, ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கிய திமிர் என நீளும் பல குறைபாடுகளை அவர் கொண்டிருந்த போதும் ஜே.ஆர் பற்றி பல்வேறு நிலைப்பாடுகளை முன்வைக்கும் செய்தியாளர்கள், ஆய்வாளர் எல்லோருமே மிகத்தெளிவாக ஒரே விடயத்தில் ஒன்றுபடுகின்றனர். தமிழர் தேசியஇனச் சிக்கலை புரியாதது மட்டுமல்ல, தீர்க்க முடியாதது மட்டுமல்ல, இன்றைய பெரு நெருக்கடிநிலைக்கு சிறிலங்காவை இட்டுச்சென்றதற்கும் ஜே.ஆரே மிகப்பிரதான காரணகர்த்தா என்பதுதான் அது. அவரது அரசியல் ஐந்தொகைக்கணக்கு என்றுமே சமப்படுத்தப்பட முடியாதது. வரவாக அவரது பொருண்மிய சீரமைப்புக்கள் இடம்பெற்றாலும் நிரப்பமுடியாத பற்றாக தேசிய இனச்சிக்கலை தீர்க்காமை இடம்பெறுவதால் 50 வருட அரசியல் ஐந்தொகைக் கணக்கு முற்றிலுமாக பிழைத்து விட்டது!

ஜே.ஆரின் இந்தப்பேரினவாத இழிகுணம் தொடக்கத்திலிருந்து காணப்பட்டமைதான் இங்குள்ள வியப்பு. 1943 ஆம் ஆண்டு மே மாதம் களனி சட்டசபைத் தொகுதியில் வெற்றிபெறுவதற்காகத் தன்னோடு போட்டியிட்ட E.W பெரேராவை கத்தோலிக்கர் எனப்பழித்து, சட்டசபைக்குத் தெரிவானவுடன் 1943 யூன் மாதமே சிங்களம் மட்டும் பிரேரணையை முன்மொழிந்தது. தனது 36 வயதிலே சிங்களமும் தமிழும் சமவுரிமை பெற்றால் காலப்போக்கில் சிங்களம் அழிந்துவிடும் எனப்பேசி– அரசியல் வாழ்வைத் தொடர்கின்றார். இந்தப் போக்கே 1956 களனி மாநாட்டில், சிங்களம் மட்டும் அரசமொழி என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் 1957 ஒக்ரோபரில் பண்டா–செல்வா உடன்பாட்டிற்கு எதிராக கண்டி தலதா மாளிகைக்குக் காவடி எடுத்தபோதும் தொடர்ந்தது.

இவை எல்லாவற்றையும் விட மிகப் பிரதானமானது, இன்று சந்திரிகா – ரத்வத்த குழு மேற்கொள்ளும் அனைத்து அடக்குமுறைகட்கும், படுகொலைகட்கும், பாவச் செயல்கட்கும் அத்திவாரங்கள் இடப்பட்டதும், ஆயத்தங்கள் செய்யப்பட்டதும் ஜே.ஆர் காலத்திலேதான் என்பதே! இன்று சந்திரிகா அலட்டிக்கொள்ளும் புலித்தடை தொடர்பான முன்னேற்பாடுகள் 1978 இல் புலிகளை தடைசெய்யும் சட்டமூலமும், பின் அதை மாற்றி 1979 யூலையில் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்ட காலத்திலே வித்திடப்பட்டன. புலிகளை அழிக்க காலக்கெடுவிதிக்கும் கைங்கரியமும் 1979 யூலை 11ஆம் திகதி தமிழர் பகுதிகளில் அவசரகால நிலையைப் பிறப்பித்து, "எருமை" புகழ் பிரிகேடியர் வீரதுங்காவை அனுப்பி ஆறுமாதத்திற்குள் அதாவது 1979 டிசெம்பருக்குள் அழிப்பு என நாள் குறித்ததோடு ஆரம்பமாகின்றது. அன்று பண்ணைப்பாலத்திலே சிதைத்து சின்னா பின்னப்படுத்தி போடப்பட்ட இன்பம், செல்வரத்தினத்தோடு ஆரம்பித்த மனிதவதை இன்று கிருஷாந்தி வரை தொடர்கின்றது. 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல் மேசடியோடு ஆரம்பித்த தேர்தல் ஏமாற்றுவித்தைகள் இப்போதைய யாழ், கிளிநொச்சி உள்ளூராட்சி மன்றத்தேர்தல் அறிவிப்புவரை நீள்கின்றன. அன்றைய லலித்தின் தேசிய பாதுகாப்பு

> 1975 ஆம் ஆண்டு யாழ் முற்றவெளியில் பேசும்போது "பண்டா-செல்வா உடன்பாடு இன்று கொண்டு வரப்பட்டாலும் எதிர்ப்பேன்" எனத் திமிர்க்கதை பேசியபோது செருப்புக்கள் வீசப்பட்டன. மேடை இறங்கியபின் ஜே.ஆர், "இவை யாழ்ப்பாணத்தான் செருப்பு என்பதால் என்றும் மன்னியேன்" என்றும் 1977 இனக்கலவரத்தை தூண்டி, "போரா? சமாதானமா? எதற்கும் தயார்!" என்றும் எத்தனை வடுக்கள். ஆனால், நடந்தது என்ன?

அமைச்சு இன்று ரத்வத்த அமைச்சாகவும், அன்றைய இராணுவ சீரமைப்பு தென்னாபிரிக்க, பாகிஸ்தானிய, எஸ்.ஏ.எஸ், கீனிமினி, மொசாட் தொடர்புகள் இன்று மேலும் விரிவாக்கம் பெற்று அன்றைய ஒபரேசன் லிபரேசன் தொடர்ச்சியே சூரியக்கதிராக, சத்ஜெயவாக இராணுவ ஆக்கிரமிப்பின் உச்ச வடிவங்களாகக் தோற்றம் கண்டன. இங்குள்ள விசித்திரமான நகைமுரண் என்னவென்றால், 1977 ஆம் ஆண்டு தேர்தலில் வெல்வதற்காக தமிழருக்காக முதலைக்கண்ணீர் வடித்த ஜே.ஆர், தமிழர் சிக்கல்களைத் தீர்க்க போதுமான சிங்களவரின் நல்லெண்ணத்தை ஆதரவை 50.92 விழுக்காட்டு வாக்குகள் பெற்றதன்மூலம் பெற்றார். அதேபோல், தமிழருக்காக நீலிக் கண்ணீர் வடித்த சந்திரிகாவும் 62 விழுக்காட்டு வாக்குகள் பெற்று பதவியேறினார். எந்தப் பதவியை ஒழிக்கப்போவதாகக் கூறி பதவியைக் கைப்பற்றினாரோ அதே பதவியைப் பயன்படுத்தி ஜே.ஆர் தொடக்கிவைத்த இனச்சங்காரத்தை முடித்துவைக்க முயல்கின்றார் அம்மையார். இதுபற்றி ஜே.ஆரிடம் வினவியபோது கேலியாக நகைத்த ஜே.ஆர் கூறினாராம், "இவ்வளவு அதிகாரங்களைக் கைவிட எவருக்காவது பைத்தியமா பிடித்திருக்கும்" அப்படியானால் தேர்தல் காலவாக்குறுதி......... என்கிற கேள்விக்கு "வாக்குறுதியா" எனக்கேட்டு விழுந்துவிழுந்து சிரித்தாராம். "5 நட்சத்திர ஜனநாயகம் நிலவும் நாடு நம்நாடு" என தன் நாட்டையே வருணித்தார் டிமிக்கியர் ஜெயவர்த்தனா.

17ஆம் நூற்றாண்டிலே டச்சுக்காரர் காலத்தில் தமிழ்நாட்டு கரையிலிருந்து வந்து குடியேறிய வணிக மரபில் வந்த தம்பிஜயா முதலியார் வழிவந்த ஜே.ஆர், தமிழ்மக்கள் மீது "நாவினாற் சுட்டவடுக்கள்" என்றும் ஆறாது. 1975 ஆம் ஆண்டு யாழ் முற்றவெளியில் பேசும்போது "பண்டா-செல்வா உடன்பாடு இன்று கொண்டு வரப்பட்டாலும் எதிர்ப்பேன்" எனத் திமிர்க்கதை பேசியபோது செருப்புக்கள் வீசப்பட்டன. மேடை இறங்கியபின் ஜே.ஆர், "இவை யாழ்ப்பாணத்தான் செருப்பு என்பதால் என்றும் மன்னியேன்" என்றும் 1977 இனக்கலவரத்தை தூண்டி, "போரா? சமாதானமா? எதற்கும் தயார்!" என்றும் எத்தனை வடுக்கள். ஆனால், நடந்தது என்ன? எல்லாவற்றையும் மீறி தமிழர் விடுதலைப் போராட்டம் தலை நிமிர்த்திய பின், விடுதலைப் புலிகளால் ஜே.ஆரின் குள்ளநரித் திட்டங்கள் தவிடு பொடியாகிய பின் கழிவிரக்கம் கொண்ட ஜே.ஆர், "என்னிடம் துணிவு, விவேகம், தொலைநோக்கு இருந்திருக்கவில்லை!" என ஒப்புதல் வாக்கு மூலம் கொடுக்க நேர்ந்தது. ஜே.ஆர் பற்றிய மிகச்சரியான தமிழ் மக்களின் மனப்பதிவு 1984ஆம் ஆண்டே தலைவர் வாயால் வெளிவந்தது. "ஜெயவர்த்தனா ஒரு உண்மையான பௌத்தனாக இருந்திருப் பாரேமானால் நான் ஆயுதம் தாங்க நேரிட்டிருக்காது." ✷

**- வே.பாலகுமாரன் - *தமிழீழம்***

www.tamilarangam.net



# எந்த நாடும் எங்கள் மண்ணைத் தொட முடியாது-புலி ஏற்றி வைத்த கொடி இனிப் படமுடியாது!

"ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாள்பாள்" என்பது போல, தமிழீழ மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இனக்கொலையை சிறிலங்கா அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று, சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி நடாத்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மை காயுமுன்னரே, மேலும் பதினாறாயிரத்திற்கும் அதிகமான வன்னிப் பெருநிலத்து மக்கள் இரவோடு இரவாக அகதிகளாக மாற்றப்பட்டுள்ளார்கள்.

> "தமிழ் மக்களைப் பற்றிச் சிந்திக்கவோ அவர்களைப் பற்றிக் கவலைப்படவோ எங்களுக்கு நேரம் இல்லை அவர்களை எவ்வளவுக்கெவ்வளவு அடக்குகிறோமோ அவ்வளவிற்கவ்வளவு சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்"" என்ற முன்னாள் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் வடிகட்டின இனவாதக் கோட்பாட்டையே ஒரு சொட்டும் பிசகாது இன்னாள் சனாதிபதி சந்திரிகா கடைப்பிடிக்கிறார். அவருக்கு தமிழர்களின் உயிர், உடமைகள் பற்றிக் கவலையே கிடையாது.

பெப்ரவரி 4இல் இலங்கை பெற்ற சுதந்திரம் சிங்களவர்களுக்கு மட்டும், தமிழர்களுக்கு அல்ல என்பதை எந்தவித சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபிப்பது போல, சிறிலங்கா அதே நாளில் தமிழீழம் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட்டது.

இருபதினாயிரம் படையினரைக் கொண்ட 'எடிபல' என்ற இராணுவ குறியீட்டுப் பெயரோடு பெப்ரவரி 4இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ ஆக்கிரமிப்பை அடுத்து, வவுனியா – மன்னார் எல்லைக் கிராமங்களான செட்டிக்குளம், பறையனாலங்குளம், குருக்கள் மடம், செங்கல்பட்டி, கன்னாட்டி மக்கள் சிங்கள இராணுவப் பிடியிலிருந்து தப்ப இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இதனால், மடுக்கோயில் அகதிகளால் நிரம்பி வழிகின்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது மட்டுமல்லாமல், வவுனியா – யாழ்ப்பாணம் வீதியூடாகவோ அல்லது அதனைச் சார்ந்த பகுதிகளிலோ இராணுவம் தனது நகர்வை அல்லது நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடும் என்ற அச்சத்தில் ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த எல்லைப்புறக் கிராம மக்கள் பாதுகாப்பான இடங்களைத்தேடி இடம் பெயர்ந்தனர்.

இவர்கள் பெரும்பாலும், மடுக்கோயில் இரணை இலுப்பைக் குளத்திற்கு அப்பால் உள்ள பாதுகாப்பான பிரதேசங்களுக்குச் சென்றுள்ளார்கள்.

சிறிலங்கா இனவாத அரசின் பொருளாதாரத் தடையாலும் விமானக் குண்டு

**- நக்கீரன் -**

வீச்சாலும் ஏற்கனவே பாதிக்கப்பட்டுப் போயிருந்த மக்கள், மீண்டும் தங்கள் சொந்தக் கிராமங்களிலிருந்து வெளியேற வேண்டிய அவலத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

'எடிபல' இராணுவ படையெடுப்பின் நோக்கம் வவுனியா – கிளிநொச்சி தரைப்பாதையைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை என அரசியல், இராணுவ வட்டாரங்களில் பேசப்பட்டாலும், தென்னிலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரத்துக்காகவே வன்னிப் பெருநிலப்பரப்பில் சனாதிபதி சந்திரிகா ஒரு யுத்தக் களத்தை திறந்திருந்ததாக எண்ண வேண்டியுள்ளது.

சிறிலங்காவில் சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த 'சுப முகூர்த்தத்தில்' இந்த இராணுவ நடவடிக்கையை முடுக்கிவிட்டிருந்தமை, சிறிலங்கா அரசு தனது செல்வாக்கைப் பெருக்கவே என்பதுதான் பெரும்பாலான அரசியல் விமர்சகர்களது கருத்தாகும்.

வவுனியா – கிளிநொச்சி தரைப் பாதையைத் திறப்பதுதான் இந்த இராணுவ நடவடிக்கையின் இலக்கு என்றால், இராணுவம் வவுனியா – யாழ்ப்பாணம் கண்டிவீதி வழியாக வடக்கு நோக்கி முன்னேறியிருக்க வேண்டும். ஆனால் அப்படி நடைபெறவில்லை. மாறாக, வவுனியா – மன்னார் பாதையைத் திறக்க முற்பட்டிருப்பது எந்தவித இராணுவ இலக்காகவும் இருக்க முடியாது.

எனவே இந்தப் படையெடுப்பை, சந்திரிகாவின் தேர்தல் தந்திரங்களில் ஒன்றாகவே பார்க்க வேண்டியிருக்கிறது.

பரந்தனிலும் – ஆனையிறவிலும் விடுதலைப் புலிகளிடம் வாங்கிய அடியை சிங்கள மக்களின் மனதிலிருந்து திசை திருப்பவே, **"நாங்கள் பலத்தோடுதான் இருக்கிறோம், பலவீனப்படவில்லை"** என்று காட்டவே எடிபல இராணுவ நடவடிக்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டது.

பரந்தன் – ஆனையிறவில் விடுதலைப் புலிகளிடம் வாங்கிய அடியை மறைக்க மட்டுமல்ல, தென் தமிழீழத்தில் நாளாந்தம் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு ஆளாகி, உயிரிழப்புக்களையும் ஆயுத இழப்புக்களையும் சந்தித்துக்கொண்டிருக்கும் படையினரின் கையாலாகாத்தனத்துக்குத் திரைபோடவும் சிறிலங்கா அரசு இந்த இராணுவப் படையெடுப்பைப் பயன்படுத்துகிறது என்பதும் தெளிவாகிறது.

தென் இலங்கையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் சனாதிபதி சந்திரிகா, 88–89 பயங்கரவாதத்திற்கு நீங்கள் திரும்பத் தயாரா? என்ற கோஷத்தைச் சிங்கள வாக்காளர் முன் வைத்திருக்கிறார்.

அதாவது ஐ.தே.கட்சி தனது ஆட்சியின் போது, ஜனதா விமுக்தி பெரமுனையின் கிளர்ச்சியை அடக்க சிங்கள இளைஞர்களை ஆயிரக்கணக்கில் சுட்டுத்தள்ளியது. அது போன்ற அரச பயங்கரவாத ஆட்சிக்காலத்துக்கு நீங்கள் மறுபடியும் போகத் தயாரா? என்று சிங்கள வாக்காளர்களைப் பார்த்து சனாதிபதி கேட்டுள்ளார்.

ஏதோ இவரது ஆட்சிக்காலத்தில் நாட்டில் அரச பயங்கரவாதம் அடியோடு இல்லை என்பது போலவும், நாட்டில் அமைதியும் மகிழ்ச்சியும் தாண்டவமாடுவது போலவும், முழுநாடுமே அமைதிப் பூங்காவாகக் காட்சியளிப்பது போலவும் சனாதிபதி சிங்கள மக்கள் மனதில் ஒரு மாயையைத் தோற்றுவிக்கப் பார்க்கிறார்.

1995ம் ஆண்டு நடுப்பகுதியில் கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள ஆறு, குளம், ஏரிகளில் எண்ணி முப்பத்திரண்டு தமிழர்களது பிணங்கள் கண்டெடுக்கப்பட்டன. இப்படிக் கொல்லப்பட்டோர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டதாக, பிரேத பரிசோதனையின்போது தெரியவந்தது. இதனையடுத்து கொலைகாரர்களைத் தேடிய காவல்துறை, காவல்துறையின் உளவுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ்காரர்களே இந்தப் படுகொலைகளை திட்டமிட்டுச் செய்ததாகக் கண்டுபிடித்தது.

இதன் தொடர்பாக பத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது.

இருந்தும் அவர்கள் இப்போதும் தங்கள் பழைய பதவிகளிலேயே கடமையாற்றுகிறார்கள். நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

இதற்கு மாறாக, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் அப்பாவித் தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களில் ஆண்டுக் கணக்காக அடைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒன்பது அப்பாவித் தமிழர்களைச் சுட்டுக் கொன்ற இராணுவம், பழியை விடுதலைப் புலிகள் மேல் போட்டுத் தப்பித்துக் கொண்டிருக்கிறது. **"இராணுவம்தான் இவர்களைக் கொன்றது"** என்று செய்தி வெளியிட்ட உதயன் பத்திரிகை ஆசிரியர் இராணுவ அதிகாரிகளால் மிரட்டப்பட்டுள்ளார்.



இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் சிங்கள இராணுவம் எதை நினைக்கிறதோ அது சட்டமாகி விடுகிறது.

மக்களது சுதந்திரமான நடமாட்டத்துக்கு இராணுவம் தடை விதிக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாடு, திருகோணமலை, வவுனியா போன்ற நகரங்களில் தமிழ்மக்கள் குடியிருப்பதற்கும், நடமாடுவதற்கும் 'மிலிட்டரி பாஸ்முறை' அமுல் படுத்தப்படுகிறது.

திருகோணமலையில் சிங்கள மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு இராணுவம் தாராளமாக அனுமதிக்கிறது. போதாக் குறைக்குப் பாதுகாப்பும் கொடுக்கிறது.

அதே நேரம், தமிழ் மீனவர்கள் கடல் ஓரமாக மீன்பிடிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கற்குடா தொடக்கம் வாழைச்சேனை வரையான பிரதான வீதியோரங்களில் மதில்கள், வேலிகள் எதுவுமே இனிமேல் இருத்தல் கூடாது என்று தடைவிதித்த சிங்கள இராணுவம், கவச வாகனங்களை உபயோகித்து மதில்களை உடைத்துப் போட்டுள்ளது.

வீதியில் சென்ற உழவு இயந்திரங்கள் நிறுத்தப்பட்டு, உழவு இயந்திரப் பெட்டியினால் மதில்களை முட்டிமோதி உடைக்குமாறு சாரதிகள் கட்டாயப் படுத்தப்பட்டனர்.

அன்றையதினம் நேரில் எதிர்ப்பட்ட ஆண்கள், பெண்கள் எல்லாம் வயது வித்தியாசமின்றி இராணுவத்தால் தாக்கப்பட்டார்கள்.

சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் தமிழர் பூமியில், தமிழ் மக்களுடைய உயிர்களுக்கும் உடமைகளுக்கும் எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது.

கைது செய்யப்படுபவர்கள் காணாமல் போகிறார்கள் அல்லது அவர்களது சடலங்கள் புதைகுழிகளிலிருந்தும் கடலோரங்களிலிருந்தும் மீட்கப்படுகின்றன.

இந்த இலட்சணத்தில் **"88–89 பயங்கரவாதத்துக்கு நீங்கள் திரும்பத் தயாரா?"** என்று சந்திரிகா கேட்பது, **"அவன் கிடக்கிறான் குடிகாரப்பயல், எனக்கு வார்"** என்று சொன்னவன் கதையாக இருக்கிறது.

உண்மை என்னவென்றால், "தமிழ் மக்களைப் பற்றிச் சிந்திக்கவோ அவர்களைப் பற்றிக் கவலைப்படவோ எங்களுக்கு நேரம் இல்லை; அவர்களை எவ்வளவுக்கெவ்வளவு அடக்குகிறோமோ அவ்வளவிற்கவ்வளவு சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்" என்ற முன்னாள் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் வடிகட்டின இனவாதக் கோட்பாட்டையே ஒரு சொட்டும் பிசகாது இன்னாள் சனாதிபதி சந்திரிகா கடைப்பிடிக்கிறார். அவருக்கு தமிழர்களின் உயிர், உடமைகள் பற்றிக் கவலையே கிடையாது. இன்னும் சொல்லப்போனால், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவே பரவாயில்லை என்பதுபோல தமிழீழத்தின் மீது முழுச் சிங்களப் படையினரையும் ஏவி, ஒரு நேரடி யுத்தத்தையே சந்திரிகா ஆரம்பித்துள்ளார்.

எங்கள் சொந்த மண்ணில் அந்நிய ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவம் நிலைகொண்டிருக்கும் வரை, தமிழ் மக்கள் கண்ணீர் வடிப்பதும் செந்நீர் கொட்டுவதும் ஓயப்போவதில்லை. அவர்கள்படும்

தொடர்ச்சி 19 ம் பக்கம்...

www.tamilarangam.net



# "பயங்கரவாதம்" என்ற சோல்லுக்கு சர்வதேச சட்டத்தில் வரைவிலக்கணம் இல்லை!

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

திரு. Villancourt விசாரணை

**கேள்வி:** போர்க்குற்றத்திற்கு ஒருவர்மீது வழக்குத் தொடருவதற்கு முதலில் அவர் போராளி எனக் கருதப்படவேண்டும். அப்படி அவர் போராளி எனக் கணிக்கப்படாவிட்டால் அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது?

**பதில்:** அது சரி, ஒருவர் சம்பந்தப்படாவிட்டால், விதி 1(4) க்குப் பொருந்தி வராத ஒரு இயக்கத்தின் உறுப்பினராக இல்லாவிட்டால்.....

**கேள்வி:** மெத்தச் சரி

**பதில்:** அவருக்கு எதிராக போராளி என்ற அடிப்படையில் வழக்குத் தொடரமுடியாது.

**கேள்வி:** மெத்தச் சரி. ஒருவர் மோதலில் சம்பந்தப்படாத மூன்றாவது நாட்டின் பிரதேசத்தில் வன்செயல்களில் ஈடுபட்டாலும் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் உறுப்பினர் தனது போராளி அந்தஸ்தைத் தொடர்ந்து வைத்திருப்பார் என்பதுதான் உமது சாட்சியம்?

**பதில்:** ஆம். இராணுவ சிப்பாயைப் பொறுத்தளவிலும் இதேமாதிரித்தான் இருக்கும். சோமாலியாவில் கனேடியச் சிப்பாய்கள் நடந்துகொண்ட விதம் பற்றிய பிரச்சனையை எடுத்துக்கொள்வோம்.

இது பொதுவாக நடக்கும் நம்பவமாகும். உதாரணத்துக்கு – விடுப்பில் ஒரு சிப்பாய் போகிறார். அவர் விடுப்பில் நிற்கும்போது கொலை அல்லது கற்பழிப்பு அது போன்ற குற்றம் இழைக்கின்றார். அல்லது போர் நடவடிக்கையின் போது கொலை அல்லது கற்பழிப்புச் செய்கிறார்.

அந்தச்செயல் அவர் ஒரு சிப்பாய் என்ற அந்தஸ்த்தை இழக்கச்செய்யாது. மூன்றாவது ஜெனிவா மரபுகள் வழங்கும் பாதுகாப்புகளுக்கடங்க அவர் ஒரு சிப்பாயாக எப்போதும் கணிக்கப்படுவார்.

இருந்தும், அவர் இழைத்த குற்றத்திற்காக அவர் கண்டிக்கப்படலாம். ஆனால் மூன்றாவது மரபு பாதுகாப்பு வழங்குகிறது..... முறையான விசாரணை..... அறிவிக்கும் பாதுகாப்பு, ஆனால் தண்டனையில் இருந்து (அவருக்கு) பாதுகாப்பில்லை.

மறுபடியும் சொல்கிறேன். இராணுவத்தைச் சார்ந்த ஒரு சிப்பாய் கற்பழித்தால் அவர் யுத்தக்கைதியாக இருப்பார். ஆனால் கற்பழித்த குற்றத்திற்கு அவர்மீது வழக்குத் தொடரலாம்.

**நீதிபதி:** உமது சாட்சியம் என்னவென்றால், ஒரு தேசிய விடுதலை இயக்க உறுப்பினர் ஒருவர் மூன்றாவது உலக நாடொன்றுக்குச் சென்று ஒரு பொதுமனனை (Civilian) கொலை செய்கிறார். அதனைக் கிரிமினல் குற்றமெனக் கொள்ளலாம்.

**சாட்சி:** ஒரு போர்க் குற்றம்.

**நீதிபதி:** ஒரு போர்க் குற்றம்?

**சாட்சி:** ஆம். தெளிவாக, நான் குறிப்பிட்டது போல, எந்த நீதி பரிபாலனம் என்பதைப் பொறுத்தது, தூக்குத்தண்டனை உட்பட, தூக்குத் தண்டனை இருக்குமானால், எந்தத் தண்டனையும் வழங்கலாம்.

**நீதிபதி:** போர்க்குற்றவாளி எங்கு குற்றம் புரிந்தாரோ அந்த நாட்டில் ஒரு கிரிமினலாக விசாரணை செய்யப்படலாம்?

**சாட்சி:** அல்லது எங்காவது விசாரிக்கப்படலாம். பேராசிரியர் Quigley கூறியவாறு போர்க்குற்றங்களுக்கு சர்வ வியாபகமான நியாயாதிக்கம் (Universality of jurisdiction) இருக்கிறது.

அதாவது ஒருவர் இங்கு கனடாவில் குற்றம் இழைக்கிறார். ஜெர்மனியில் கைதாகிறார். ஜெர்மனியர்கள் அவரை நீதிவிசாரணைக்கு உட்படுத்த முடிவு செய்கிறார்கள். அவர்கள் அப்படிச் செய்ய முடியும்.

அப்படிச் செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. பெரும்பாலும் அவர்கள் அந்தக் குற்றவாளியை கனடாவுக்கு நாடு கடத்தக்கூடும்.

ஆனால் அனுமானத்தில் ஜெனிவா மரபுகளை ஏற்றுக்கொண்டுள்ள எந்தவொரு அரசும் (உரிமை) மீறலுக்கு வழக்குத்தொடர முடியும். இதனைத்தான் சர்வ வியாபக நியாயாதிக்கம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

போர்க்குற்றவாளி ஒருவரைக் கைப்பற்றும் யாரும் அவரை நீதி விசாரணை செய்யலாம்.

திரு. Vaillancourt விசாரணை

**கேள்வி:** பேராசிரியர் அவர்களே, நான் எங்கிருந்து எடுத்தேன் என்பதை உங்களுக்குச் சொல்கிறேன். நான் உங்கள் புத்தகத்தை முழுதுமல்ல, சில பகுதிகளை வாசித்து இருக்கிறேன். "அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையும், சர்வதேசச் சட்டத்தின் எதிர்காலமும்" (The Future of International Law and American Foreign Policy) என்ற புத்தகத்தைக் குறிப்பிடுகிறேன். இதன் 89வது பதிப்பு என்னிடம் இருக்கிறது. இதற்குப் பிந்திய பதிப்பு இருக்கிறதா என்பது தெரியவில்லை.

**பதில்:** அதுதான் பிந்திய பதிப்பாகும்.

**நீதிபதி:** எந்தப் புத்தகம்?

திரு. Villaincourt: இந்தப் புத்தகத்தை இப்போதுதான் பார்த்தேன். இது இன்னும் (நீதிமன்றத்தில்) அணைக்கப்படவில்லை.

திரு. Villaincourt விசாரணை

**கேள்வி:** இதில் ஒரு அதிகாரம் இருக்கிறது. 3வது அதிகாரம் அதன் தலைப்பு "Preserving the Rule of Law in the War Against International Trrrorism" ("சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் சட்டாதிக்கத்தை சட்டத்தின் முன் அனைவரும் சமமாகப் பாதுகாத்தல்") என்பதாகும். இந்த அதிகாரம் நீங்கள் இன்று கூறியதைத்தான் பெரும்பாலும் கூறுகிறது.

**பதில்:** அது சரி

**கேள்வி:** ஜெனிவா மரபு, ஒப்பந்தம் 1, தேசிய விடுதலை இயக்கங்களின் உறுப்பினர்கள் எப்படி நடாத்தப்படவேண்டும் என்று வரையறை செய்கிறது.

**பதில்:** ஆம்.

**கேள்வி:** .... அவர்கள் போராளிகளாக நடாத்தப்பட வேண்டும் என்கிறது. அது பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள். இந்த அதிகாரத்தில் இன்னொரு தலைப்புக் காணப்படுகிறது. "What is Trrrorism" ("பயங்கரவாதம் என்றால் என்ன") என்பது அத்தலைப்பு.

"பயங்கரவாதம்" என்றால் என்னவென்பதை வரையறை செய்வதில் உள்ள வில்லங்கத்தைப் பற்றி இன்று இங்கு எடுத்துச்சொன்னீர்கள். அந்தச் சொல்லைப் பற்றியும் வியாக்யானம் செய்தீர்கள்.... அதன் உபயோகம் பற்றியும் சொன்னீர்கள். "பயங்கரவாதம்" என்ற சொல் உங்களுக்குப் பிடிக்காது என்ற கூற்று நியாயமானது என்று நினைக்கிறேன். காரணம் சட்டப்படி ஒரு சர்வதேசச் சட்டவாதிக்கு அந்தச்சொல் அர்த்த மற்றதாகும். இது எதனையும் குறிப்பிடாது.

**பதில்:** முதலில் ஒரு விடயத்தைத் தெளிவாக்க விரும்புகிறேன். என்ன காரணத்திற்காகவும் அப்பாவிப் குடிமக்கள் கொலைகள், குண்டு வைப்புக்கள் மூலம் கொல்லப்படுவதை நான் அங்கீகரிக்க மாட்டேன்.

**கேள்வி:** அப்படி நான் அர்த்தம் கொள்ளவில்லை. என்னை நம்புங்கள்.

**பதில்:** ஆனால், ஒருசட்டவாதி பேராசிரியர் என்ற வகையில் எனது அனுபவம் என்னவென்றால் பயங்கரவாதம் பற்றிய விவாதங்கள், வரைவிலக்கணங்கள் மலடானவை. அவை உபயோகம் இல்லாதவை. இதன் தோல்வி பற்றிய எனது முந்திய புத்தகத்தின் அடிப்படையில் முழு வரலாற்றையும் படித்துப் பார்க்கவும்.

1985ம் ஆண்டு தொடக்கம் நான் படித்துப் பார்த்ததன் அடிப்படையிற்றான் எனது 89ஆம் ஆண்டின் முடிவு எடுக்கப்பட்டது. ஐ.நாடுகள் சபை பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் செய்ய முயற்சி செய்தபோது அது தோல்வியில் முடிந்தது.

**கேள்வி:** ஆம்.

**பதில்:** சட்டத்தின் அடிப்படையில் இதனை (வரைவிலக்கணத்தை) செய்ய முடியவில்லை. அவர்கள் என்ன செய்தார்கள் என்றால்..... ஆனால் இப்படிச் செய்வதால் அப்படியொரு பிரச்சனை இருப்பதை மறுப்பது என்று அர்த்தமல்ல.

**கேள்வி:** நீங்கள் இன்று விபரித்ததுபோல இதையிட்டு துண்டுதுண்டான அணுகுமுறையை எடுத்தார்கள்?

**பதில்:** துண்டு துண்டான அணுகுமுறை, ஆம் நான் நம்புகிறேன், எனது கட்டுரையில் அது பற்றித் தர்க்கித்துள்ளேன். சட்டத்தின் கண்ணோட்டத்தில், உலகம் அப்படித்தான் அந்தப் பிரச்சனையைத் தீர்த்துள்ளது. நான் நம்புகிறேன் அப்படித்தான் அது தீர்க்கப்படவேண்டும்.

அது சரி வரும். அது சரி வந்திருக்கிறது. அது மேலும் சரிவரும் மனிதர்கள் விரும்பினால்.

**கேள்வி:** துரதிஷ்டவசமாக "பயங்கரவாதம்" என்ற சொல்லை வரையறை செய்யப்படுவதற்கு அது பரிகாரம் ஆகாது. வெளிப்படையாக இதை ஒப்புக்கொள்வீர்களா?

**நீதிபதி:** மன்னிக்கவும். உங்கள் கேள்வி என்ன?

திரு. Villaincourt விசாரணை

**கேள்வி:** நான் சொல்வது என்னவென்றால் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெற்ற வரைவிலக்கணப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. இது வெளிப்படை?

**பதில்:** சரி இன்று எனது பணி என்னவென்றால் இப்பிரச்சனை பற்றிய வில்லங்கங்களை இந்த நீதிமன்றத்துக்கு விளக்குவதாகும். வரலாற்று ரீதியாக இதனைச் (வரைவிலக்கணத்தை) செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றி எடுத்துக் கூறுவதாகும். அது சரி.

*தொடரும்......*

www.tamilarangam.net



# 06.03.97 - வவுணதீவு முகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் விபரம்.



1. லெப். கேணல் பாலேந்திரா
வேல்முருகு ரவி, மட்டு

2. மேஜர் கீர்த்தியபாலன் / சைலன்
இராசப்பு சிவம், மட்டு.

3. 2ம் லெப்- நவமாலி
நடராசா மனோகரன், மட்டு.

4. மேஜர் மணிமாறன் / ரம்போ
சிவராசா சிவநீதன், மட்டு.

5. கப்டன் பத்மன்
முருகேஸ் சுரேஸ்குமார், மட்டு.

6. லெப்- இசைலிங்கம் / தேவகுமார்
பெரியான் சுந்தராஜன், மட்டு.

7. லெப். சந்திரகாந்த்
சின்னத்தம்பி நவரவி, மட்டு.

8. லெப். சிவராஜ் / தர்மதேவன்
துரைராஜசிங்கம் சத்தியநாதன், மட்டு.

9. வீரவேங்கை ஜெயதீபன் / ஜெயதரன்
கந்தையா முரசொலிக்குமார் , மட்டு.

10. வீரவேங்கை சசிமோகன்
அருளம்பலம் ரஞ்சுதன் , மட்டு.

11. வீரவேங்கை இராமதீசன்
அடைக்கலம் சுப்பிரமணியம், மட்டு.

12. வீரவேங்கை திரயுகன்
சந்திரலிங்கம் மயூரதன் , மட்டு.

13. வீரவேங்கை வர்ணன்
குணசேகரம் யோகராசா, மட்டு.

14. வீரவேங்கை கற்சீலன்
தங்கராசா ரவிச்சந்திரன், அம்பாறை– மட்டு.

15. வீரவேங்கை இசைவாணன்
லிங்கநாதன் கோணேஸ்வரன், மட்டு.

16. 2ம் லெப்- அசுர்தனன்
பாக்கியராசா முருகமூர்த்தி , மட்டு.

17. 2ம் லெப்- விஸ்பருபன் / தருசன்
சின்னத்தம்பி சிறிதரன், மட்டு.

18. வீரவேங்கை லிங்கஜோதி
தர்மலிங்கம் விஜயகுமார் , மட்டு.

19 வீரவேங்கை பாரிதேவன்
நல்லதம்பி நாகராசா , மட்டு.

20. வீரவேங்கை பிருந்தன்
முத்துலிங்கம் விஜயன் , கல்முனை.

21. வீரவேங்கை நிந்துஜன்
சிறில் லலித் , மட்டு.

22. வீரவேங்கை யுகனேஸ்
வெல்லதம்பி ஜெயதரன், மட்டு.

23. வீரவேங்கை சற்குணம்
இராசரத்தினம் லிங்கேஸ்வரன், மட்டு.

24. வீரவேங்கை செந்தாளன் - அகிலன்
தர்மலிங்கம் லிங்கநாதன் , மட்டு.

25. லெப்- சுதாகா- சுதாகரன்
அலகிப்போடி கோபாலசிங்கம் , மட்டு.

26. வீரவேங்கை மன்மோகன்
வெள்ளைத்தம்பி பாலசுந்தரம், மட்டு.

27. வீரவேங்கை விஸ்வகரன்- விசுவாகரன்
முத்துலிங்கம் கமலேஸ்வரன், மட்டு.

28. வீரவேங்கை பாலமுதன் - வனவன்
நவரத்தினம் நித்தியராஜ், மட்டு.

29. வீரவேங்கை குருமூர்த்தி
அருணாசலம் குலசேகரம், அம்பாறை

30. 2ம் லெப்- விஜே
அமரசிங்கம் ரவீந்திரன், மட்டு.

31. 2ம் லெப்- சாயிலிராஜ் - ஜெயக்குமார்
மயில்வாகனம் தியாகராஜா, அம்பாறை.

32. வீரவேங்கை வான்முகில்
குழந்தைவேல் யோகநாதன் , மட்டு.

33. வீரவேங்கை துஷ்மன்
முத்துலிங்கம் வேந்திரராஜா, அம்பாறை.

34. வீரவேங்கை சுவர்ணராஜன்
சுந்தரலிங்கம் சந்திரமோகன், மட்டு.

35. வீரவேங்கை சிவதாஸ்
பொன்னம்பலம் ரவிஜேந்திரன், அம்பாறை.

36. வீரவேங்கை மனோபதி
கந்தப்போடி நித்தியானந்தன், மட்டு.

37. லெப். தவசீலன்- சபேசன்
சின்னத்தம்பி தேவராஜ், அம்பாறை.

38. 2ம் லெப். முத்தரசன்
பாலசுப்ரமணியம் யோகதாஸ், திருமலை.

39. லெப். மணிவேல்/ புவனேந்திரன்
கிருஷ்ணபிள்ளை ராஜி, மட்டு.

40. வீரவேங்கை தூயமோகன்
செல்வராசா யோகராசா , மட்டு.

41. வீரவேங்கை தேவசீலன்
அழகையா சின்னத்துரை, மட்டு.

42. மேஜர். விமல் / கிருஸ்ணராஜா
இராசசுந்தரம் விமலநாதன், அம்பாறை

43. வீரவேங்கை கனேசன்
யோகராசா கவிராசன், அம்பாறை.

44. லெப். தயா / நிருபன்
முருகப்பர் தெய்வேந்திரம், மட்டு.

45. லெப். பால்ராஜ் / நாதாசித்திரன்
தங்கராசா மோகன், மட்டு.

46. லெப். விகடகவி
ஜேசுதாஸ் மரியதாஸ், மட்டு.

47. வீரவேங்கை உதயகுமார்
சித்திரவேல் சிவகுமார் , மட்டு.

48. வீரவேங்கை சுகந்தவாசன்
ரவி, மட்டு.

49 கப்டன் ஈழன்
வேலுப்பிள்ளை நிரஞ்சன், மட்டு

50. 2ம் லெப். சயந்தேவன்
குமாரசாமி குணநேசன், அம்பாறை,

51. 2ம் லெப். கைலாசபதி / வித்துவான்
பங்கயநாதன் முகுந்தன், அம்பாறை

52. 2ம் லெப். காந்திமதி
அரசரத்னம் ஜெயக்குமார் , மட்டு.

53. வீரவேங்கை விஜயகண்ணன்
கந்தன் குவிசந்திரன், மட்டு.

54. மேஜர் தேவகுமார்
நல்லரத்தினம் பரமானந்தராசா, மட்டு.

55. கப்டன் தயா / கீசராஜா
கந்தையா பரஞ்சோதி, மட்டு.

56. 2ம் லெப். தேரவன்
சங்கரப்பிள்ளை பிரபாகர் ,
அம்பாறை.

57. வீரவேங்கை செல்வராஜன்
அரியரத்தினம் சபாரத்தினம், மட்டு.

58. வீரவேங்கை வரகுணன்
ஞானச்செல்வன் ரவி , மட்டு.

59. வீரவேங்கை அரியகாந்தன்
சாமித்தம்பி நடேஸ்வரன், மட்டு.

60. வீரவேங்கை விசித்திரன்
முருகமூர்த்தி விஜயராசா மட்டு.

61. வீரவேங்கை பிரியங்கன்
வீரன் விபுலானந்தன் , அம்பாறை

62. வீரவேங்கை சாந்தினி
சின்னத்தம்பி உதயகலா, மட்டு.

63 2ம் லெப். வனப்பரியா
மயில்வாகனம் சசிகலா, மட்டு.

64. வீரவேங்கை துசாந்தன்
கோபாலப்பிள்ளை சுவேந்திரன், திருக்கோவில்.

65. லெப். லவனராஜ்
மயில்வாகனம் பிரபாகரன்
மல்வத்தை, அம்பாறை.

66. லெப். கவிகீதன்
நல்லதம்பி தவராசா, மட்டு.

67. 2ம் லெப். விஜயதர்சன்
கந்தசாமி புஸ்பராசா
பிள்ளையார் கோயில் வீதி, சந்திவெளி.

68. லெப். கேணல் மதனா
நாகேந்திரம் கருணாதேவி, மட்டு.

69 கப்டன் வித்தியா
கோபாலகிருஷ்ணன் சரளா, மட்டு.

70. 2ம் லெப். குமுதா
மானிக்கோடி புவனேஸ்வரி, மட்டு.

71. வீரவேங்கை ஜெயந்தா
வைரமுத்து குணலட்சுமி, மட்டு.

72. வீரவேங்கை சிவலேகா
கிருஸ்ணபிள்ளை கோகிலநாயகி, மட்டு.

73. 2ம் லெப். சாமந்தி
சிதம்பரப்பிள்ளை சந்திரா, மட்டு.

74. 2ம் லெப். மலைமதி
இராசதுரை வசந்தமலர், மட்டு.

75. வீரவேங்கை வனிதா
அழகிப்போடி சரஸ்வதி, மட்டு.

76. வீரவேங்கை சசிகலா
சின்னத்தம்பி சித்திரகலா ,மட்டு.

77. கப்டன் கலாமதி
முத்தையா சந்திரதேவி, மட்டு.

78. லெப். மாலதி
யோகராசா மலர் ,மட்டு.

79. வீரவேங்கை சுகிர்தா
விநாயகமூர்த்தி அரசம்மா, மட்டு.

80. வீரவேங்கை பைந்தமிழ்
சின்னத்தம்பி கிருபாகரன்,
மட்டு.

81. 2ம் லெப். காந்திமதி
கணபதிப்பிள்ளை கோமதி, மட்டு.

www.tamilarangam.net

# தியாகச்சுடர் அன்னை பூபதியின்



## தாயகத்திற்காய் தன்னைத் தந்த தியாகச் சுடர் அன்னை பூபதி

அன்னை பூபதி மக்களின் கரைகடந்த உற்சாகத்துக்கு மத்தியில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல், தனது ஆயுட்கால உண்ணாவிரதத்தை உறுதியோடு கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறார்.

நாளாக ஆக அன்னை பூபதியை சோர்வு தட்டுகிறது. தலைச் சுற்றலும் ஆரம்பிக்கின்றது. போகப் போக திடீர் மயக்கத்தில் சரிகின்றார். எனினும் மறுகணமே தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறார்.

வைத்தியர்கள் அவரைத் தினமும் வந்து பரிசோதித்துச் செல்கின்றனர். முறைப்படி வைத்திய அறிக்கைகள் நாளாந்தம் தயாரிக்கப்படுகின்றன.

அன்னை இவ்வாறு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார். இடையில் இந்தியப் படை அதிகாரிகள், இந்திய இராணுவத்தினர் வந்து போகின்றனர்.

அன்னையிடம் சமாதானம் சொல்லப் பார்த்தனர். அன்னையோ இந்தியப் படையினரைக் கண்டால் காளியாக மாறினார். அவர்கள் மிரட்டிப் பார்த்தனர். அது பலிக்கவில்லை.

கணவர் கணபதிப்பிள்ளை; மக்கள் மருமக்கள் என்று உறவினர்களுக்குத் தூண்டில் போட்டு விரதத்தைக் குழப்பியடிக்க எத்தனித்தனர்.

ம்... முடியவில்லை.

கணபதிப்பிள்ளை கங்காணியார் குடும்பம் இலேசுப்பட்டதல்ல. வீரத் தாயின் பராமரிப்பில் வளர்ந்தவர்கள் அல்லவா!

இந்தியப் படையினர் போட்ட இரையை அவர்கள் விழுங்குவதாவது! இந்தியாவின் சாணக்கியத் தந்திரங்கள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன.

மகாத்மா காந்தியின் உண்ணாவிரதங்கள், மறியல் இயக்கங்கள், சத்தியாக்கிரகங்கள் மூலம் பிரித்தானியர்களை வெளியேற்றிச் சுதந்திரம் ஈட்டிய நவ பாரதத்திலிருந்து வந்த படையினரா? அண்ணல் வழியில் அன்னை பூபதி நடாத்தும் அகிம்சைப் போராட்டத்தை அலட்சியம் செய்கிறார்கள்? குழப்பியடிக்க முனைகிறார்கள்?

உண்மையிலேயே இவர்கள் இந்திய மண்ணில் பிறந்தவர்களா? அந்த இராமராஜ்யத்திலிருந்து தான் வந்தவர்களா? தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்றெடுத்த அத் தாயகத்திலிருந்து புறப்பட்டவர்களா?

இப்படித் தமிழீழ நாட்டவர்களுக்கு மாத்திரமல்ல – மனித உரிமை பாராட்டுபவர்களும், ஏன் மகாத்மா காந்தியின் அகிம்சைத் தத்துவத்தில் மதிப்பும் மரியாதையும் வைத்த உலக மக்களும் மூக்கின் மேல் விரல் வைத்து வியப்புற்றனர் – ஐயுற்றனர்.

அமைதி காக்க வந்து, மிஞ்சியிருந்த அமைதியையும் குலைத்துக் கொண்டிருந்த இந்தியப் படையினர் மீது சர்வதேசங்களிலும் வாழும் மனிதாபிமானிகள் அருவருப்புக் கொண்டனர்.

நாட்கள் நகர்கின்றன. அன்னையின் நாடித் துடிப்புகள் அச்சத்தைத் தருகின்றன. வைத்தியர்கள் பார்வையில் சந்தேகம் நிழலாடுகிறது.

இனிமேல் ஊசி மருந்து பாய்ச்சுவதைத் தவிர, வேறு வழியில்லை என்று வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

அன்னை பூபதியோ "எந்தவொரு மருந்தும் எனக்குத் தேவையில்லை. நீங்கள் போய்விடுங்கள்" என்று நா தழ தழக்கக் கூறி மறுக்கின்றார்.

அந்த மயக்க வேளையிலும் தன்னை வைத்தியர்கள் நெருங்கி ஊசி போடாதவாறு எச்சரிக்கையாகவே உள்ளார்.

அன்னையின் பிடிவாதமே வெல்கின்றது.

ஒரு பக்கம் மக்களின் கரை கடந்த உத்வேகம்; மறுபக்கம் மனித ஜீவனை காப்பாற்றியாக வேண்டும் என்ற வைத்தியர்களின் முயற்சிகள்; இடையிடையே உண்ணாநோன்பைக் குழப்பியடிக்கும் இந்தியப் படையினரின் தந்திரோபாயங்கள்.

இத்தனைக்கும் மத்தியில் அன்னை பூபதி தனது இலட்சியத்தை நிறைவேற்றி கோரிக்கைகளை வென்றெடுக்கத் தனது இன்னுயிரைத் துச்சமென மதித்துச் சத்தியப் போரைத் தொடர்கின்றார்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரெண்டு, பதின்மூன்று ...... இரு வாரங்களல்ல – முழுமையாக முப்பத்திரண்டு நாட்கள் அந்தச் சத்தியப் போர் நடந்தது. 32ஆம் நாள் திடுதிப்பென்று செல்கிறது.

அங்கு குழுமி நின்ற மக்கள் பேசவில்லை. அசையவில்லை. அத்தனை மக்களின் கண்களும் நீரைச் சொரிகின்றனவே!

அன்னை பூபதியே பிரிந்துவிட்டாயா? இத்தனை நாளுமாக இந்தப் புண்ணிய தலத்தில் உறுதியுடன் இருந்த உன் எழில் உடல் என்ன சாய்ந்துவிட்டதா தாயே? எந்த உயிரைப் பணயம் வைத்து, தமிழீழ மண்ணுக்குச் சமாதானத்தைக் கொண்டுவரக் களத்தில் இறங்கினீரோ, அந்த உன்னத 'பயணம்' பறிபோய் விட்டதா அம்மா? உன் சத்தியப் பயணம் பாதியில் முடிந்துவிட்டதா தாயே?

மட்டு மாநகரம் கதறி எழுகிறது. தமிழீழம் எங்கும் சோகமாகியது. ஒவ்வொரு வீட்டிலும் மரண ஓலமே கேட்கிறது.

அன்னை பூபதி உண்ணாவிரதம் பற்றியும், மக்கள் எழுச்சி தொடர்பாகவும் நாளாந்தம் முற்பக்கச் செய்திகளாக வெளியிட்டு வந்த அனைத்து ஈழத்துப் பத்திரிகைகளும், கடல் கடந்த நாடுகளில் வெளியாகும் தினசரிகளும் தங்கள் நடுநடுங்கிய கரங்களால் அன்னையின் ஆருயிர் 19-04-1988 செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்குப் பிரிந்த – நெஞ்சைத் துணுக்குறச் செய்த – அந்தச் செய்தியைச் சோகவரிகளில் எழுதி வெளியிட்டது. தமிழ்த் தினசரி ஒன்று பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

### "பூபதி உயிர்த்தியாகம் தமிழீழத்தில் சோக வெள்ளம்"

எங்கும் கறுப்புக் கொடிகளும் வெள்ளைக் கொடிகளும், தெருக்கள் ஒழுங்கைகள் எல்லாம் வாழை மரங்கள் நட்டு துக்கம் வெளிப்படுத்தப்படுகின்றது. முக்கிய சந்திகள் தோறும் அன்னை பூபதியின் மறைவு இரங்கல் பதாதைகள் தொங்க விடப்படுகின்றன.

தத்தம் அலுவல்களை அப்படி அப்படியே விட்டவாறு ஊழியர்களும் கடைக்காரர்களும் அன்னைக்கு அஞ்சலி செய்ய திரள்கின்றார்கள். வகுப்பறைகளில் புத்தகங்களை விட்டுவிட்டு அன்னையைக் காண ஓடிவந்த மாணவ – மாணவியர் அங்கு சிலையாகினர். சமையல் தட்டில் மரக்கறியும் கையுமாக நின்ற அன்னையர்களும் அப்படித்தான். அன்னையர் முன்னணியின் கையே ஓங்கியது. முகத்துவாரம் வீதியிலுள்ள மட்டக்களப்பு அன்னையர் முன்னணி அலுவலகத்துக்கு அன்னையின் புகழுடல் கொண்டு வந்து வைக்கப்பட்டு அடுத்துள்ள விளையாட்டுத் திடலில் நிறுவப்பட்ட விசேட பந்தலில் அவ்வுடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இந்தியப் படையினரின் கழுகுப் பார்வைக்கும் அகப்படாது விடுதலைப் புலி வீரர்கள் எப்படியோ மலர் வளையம் ஒன்றை கொண்டு வந்து அன்னையின் புனித பாதத்தில் அர்ப்பணித்திருந்தனர்.

"நியாயம் தேடித்தான் என் மனைவி உயிர்விட்டார்" கணபதிப்பிள்ளை கங்காணியாரின் இந்தியப் படையினருக்கான அச்சொட்டான பதிலிது.

அன்னையர் முன்னணி உறுப்பினர்களும், பொதுமக்களும் அன்னையின் உடலைச் சூழ்ந்து பாதுகாத்துக் கொண்டதால், அன்னையின் உடலை அப்புறப்படுத்தி சூட்டோடு சூடாக அழித்துவிடும் இந்தியப் படையினரின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

படையினர் தலையைத் தொங்கப் போட்டபடி முகாம் திரும்பினர். அதில் இந்த வாசகம் உள்ளது.

### "விடுதலைக்குத் தன்னுயிர் நீத்த எங்கள் அன்னைக்கு வீரவணக்கம்"

பாம்பின்கால் பாம்பறியும். வீரியத்தை வீரனே மெச்சுவானல்லவா?

பல பாகங்களில் இருந்தும் ஏராளமான இரங்கற் பிரசுரங்கள் பல்வேறு சமய – பொது – கல்வி நிறுவனங்களால் வெளியிடப்பட்ட வண்ணம் இருந்தன. மும்மத குருமார்கள் அன்னை அருகில் வந்து பிரார்த்தனை செய்கின்றனர். கவிதாஞ்சலியும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒரு சமான்யப் பெண்ணின் மறைவுக்கு இத்தனை மரியாதையா? இந்தியப் படையினரும், அதன் கைக்கூலிகளும் நெஞ்சம் பொருமினர். மீண்டும் அன்னையின் புகழுடலை எடுத்துச் செல்லும் உபாயத்தில் ஈடுபட்டு. அன்னையர் முன்னணியின் எதிர்ப்பால் தோல்வி கண்டனர். ✳

அன்னையின் உண்ணா நோன்பிற்கு ஆதரவாகக் கிளர்ந்த மக்களில் ஒரு பகுதியினர்



### பசித் தீயில் எரிந்தவள்

ஆயிரம் ஆண்டுகளோ
இல்லை இது ஒன்பதாண்டு.
தீயினில் கிடந்தவளின்
நினைவிங்கு நிறைவுண்டு
பாயினில் படுத்திருந்தா
நோயில் உயிர் பிரிந்தாள் - பசித்
தீயில் உருகியன்றோ
அன்னை தன்னைக் கொடுத்தாள்.
வாழ்வொன்றை நினைத்தழுது
ஏங்குகின்ற வேளையிலே
வீழ்வென்று தமிழ் மாந்தர்
புலம்புகின்ற போதினிலே
தாளவில்லை இம்மண்ணில்–என
தள்ளாத வயதினிலும்
நாள் தின்ற நிலவு போல்
பூபதி உடல் தேய்ந்தாள்.
கையில் எரிதுவைக்கும்
கவச வாகனமும்
பொய்யில் உருவெடுத்த
போலி வேடங்களும்
மெய்யிலே தாங்கியெமை
மீறி வந்த படைகளது
மெய்முகத்தைக் காட்டிவிட்டாய்
மேதினியில் உயர்ந்து விட்டாய்.
காந்தியின் தேசமிங்கு
சாந்திதர வந்ததோ?
நீந்தும் குருதியிலே–எமை
நீராட்ட வந்ததோ
தீய்ந்த உடல்களெல்லாம்
தெருவிலே எறிந்தவரைக்
காய்ந்த வயிறோடு–இனம்
காட்டியவள் பூபதித்தாய்.
நசுக்குண்ட ஈழத்
தமிழரின் குரலினை
நாலு திக்கும் பேச
நாவரண்டு செத்தவள்.
பொசுங்குண்டு போன
தமிழர்கள் உணர்வினை
பூமியின் மேனியில்
புரிந்திட வைத்தவள்.
பிள்ளைக்குத் தாயாக
அன்னை வாழ்ந்தவளோ–தமிழ்
மைந்தர்க்குத் தாயாக
தரணியில் உயர்ந்தவள்.
பெண்ணுக்குள் வீரம்
புறம்கண்ட சேதியோ!
மண்ணுக்கு உயிராகி
மாண்பினில் உயர்ந்தவள்.
அன்னை புகழ்பாடி
ஏற்றிடவே வந்தோம்
அவள்தன் உணர்வேந்தி
விடுதலையை வெல்வோம்!

–சுதந்திரப் பறவைகள்–

www.tamilarangam.net

# ஒன்பதாம் ஆண்டு நினைவாக....

## அன்னை பூபதியின் தியாகம் உலக வரலாற்றில் ஒப்பற்றது

அன்னை பூபதியின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு (19-04-1990) தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த அறிக்கை)

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
19-04-90

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்று நாம் ஒரு மகத்தான தியாகியை, அந்தத் தியாகியின் அற்புதமான அர்ப்பணிப்பை நினைவு கூர்ந்து, எமது இதய அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரணப் பற்று உறவுகளைத் துறந்து தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

அவரது தியாகம் ஒப்பற்றது. உலக வரலாற்றிலே புதுமையானது.

இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தைத் தலைகுனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

அதனாலேதான் இன்றைய தினத்தை, அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை, தேசிய எழுச்சி நாளாக – இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட வெற்றி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, எத்தனையோ திருப்பு முனைகளுக்கு முகம் கொடுத்து வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரதூரமானதென்றால், மிகவும் ஆபத்தானதென்றால் அது இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியத் தலைமையானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எழுந்த மிகப் பெரிய சவாலாக அமைந்தது. முதன்முதலாக எமது போராட்ட வரலாற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவத் தலையீட்டைச் சந்தித்தோம். ஒரு அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையைச் சந்தித்தோம்.

எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டபோது, எமது மக்கள் மீது ஒரு முழு அளவிலான போர் ஏவிவிடப்பட்டபோது, எமக்காகக் குரல் கொடுக்கவோ அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த ஒரு உலக நாடும் முன்வரவில்லை. உலக வல்லரசுகளும் மூன்றாம் உலக நாடுகளும் இந்தியத் தலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த்தனா தலைமையிலான அன்றைய சிங்கள அரசும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது. எமது சகோதர இயக்கங்களும் எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்குத் துணைபோயின.

நாம் தனித்து நின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத் தீயை அணையவிடாது போராடினோம். இறுதியில் நாம் வெற்றி கண்டோம். இந்த வெற்றிக்குக் காரணம் எமது மனம் தளராத உறுதி, சாவுக்கும் அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.

இந்த வெற்றியானது – தமிழீழ மக்களாகிய உங்கள் வெற்றி – உங்கள் குழந்தைகளாகிய எமது போராளிகளின் வெற்றி – உங்கள் இயக்கமாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெற்றி.

இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றி கொண்டு, இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்று கொண்டிருக்கிறது. மலைபோல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

இலட்சியத்தால் ஒன்றுபட்ட எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

இன்றைய எழுச்சி தினத்தில் இந்திய இராணுவ அரக்கனை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த எமது தியாகிகளையும் மக்களையும் நினைவில் நிறுத்தி, அவர்களுக்கு எமது வீர அஞ்சலியைச் செலுத்துவோமாக.

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்




## பூபதி என்னும் பூகம்பம்

பூபதி என்னும் பூ ஒன்று
பூகம்ப மாகிய நாளன்று
அன்னையவள் அன்று
அகிம்சைப் போரில்
அகிலத்துக்கே–எம்
அவல நிலை எடுத்துச் சொன்னாள்
உண்ணாமல் வாடி
உரிமையினைத் தேடி
உணர்த்தியே விட்டாள்
உண்மையை உலகிற்கு
கண்ணான எம் இளைஞர்
கைதியாய் சிறையில் வாடும்
காரணம் கேட்டாள்
பொன்னான தமிழவள்
பொங்கியே எழுந்து
புண்ணான நெஞ்சுடன்
புதுநீதி படைத்தாள்.
உண்ணுவது என்பது
உரிமைக்கு பின்பே
உணர்ச்சி என்பதோ
உயிருக்கு முன்பே
உறுதி கொண்டு
உணர்த்தினாள் அன்னை
பெண்ணென்று பேசாதிருக்கவில்லை
பெரியவள் என்று
ஒதுங்கியும் விடவில்லை
தமிழர் அனைவரும் தாயகம் மீட்க
தாகம் கொண்டு சரித்திரம் தந்தாள்
போய் அவள் – இன்று
போன ஒன்பதாண்டு
செய் நாம் அவள் செயல் மறப்பமோ?
மீன்பாடும் தேனாட்டிலிருந்து
தியாகமே உருவாகி
அணைந்த தீபத்திற்கு
செய்திடுவோம் அஞ்சலிகள்

–அல்லையூர் தர்மினி–

## தாயவள் பூபதி உலகிற்கே விளக்கானாள்

தமிழரின் தாயகம்
தமிழீழம் என்றுமே
தரணிக்கு உணர்த்திட
தாயவள் அணைந்திட்டாள்.
தள்ளாடும் வயதினிலே - பூபதி
தளராது எதிர்த்து நின்றாள்.
உறவோடு ஊண் மறந்தாள் - பூபதி
உலகிற்கே விளக்கானாள்.
இந்திய அரசது
இழைத்திட்ட கொடுமைகள்
தானதை எதிர்த்தெழுந்தாள்.
பூமியிலே அவளே - தியாக
பூவாய் மலர்ந்திட்டாள்.
தமிழன்னை எழுந்துவிட்டாள்-
இங்கே
தமிழர்கள் விழித்துக் கொண்டோம்.
எல்லோரும் எழுந்து கொண்டால் -
இனி
எதிரிதான் இருப்பானோ?

- அலங்கேஸ்-

## தியாக வேள்வியில் நீ எரிந்தாய்!

பெண்ணினம் பெருமை கொள்ளப்
பெயரது விளங்கி நிற்க
எண்ணரும் தியாக வேள்வி
இயற்றினாள் எங்கள் அன்னை
கண்ணெனும் தமிழீழத்தாய்
கண்டிடும் காட்சிக்காக
உண்ணாது நோன்பிருந்து
உயிரையே உவந்து ஈய்ந்தாள்.

–வ. யோகானந்தசிவம்–

## தமிழுக்கு தன்னுயிர் தந்தவள்...

மட்டு நகரின் மாமாங்க கரையில்
பட்டினித் தீயை வளர்த்து
பார் அதிர யுத்தம் நடத்தியே
பாரதத்தை தலைகுனிந்திட
வைத்த அன்னை !
அமைதிப் போர்வையில் மூடிய
- காந்திகள்
ஆயுதம் தன்னை துகிலுரித்தாள்
அன்னை தமிழினம் வாழ்வதற் கென்றே
தன்னுயிர் கூடத் தந்தாள்!

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பன்னிரெண்டு

(தொடர்ச்சி)

லியோன் யூறிஸ்

> "ஒரு மனிதனின் வாழ்நாளில் தான் வாழ்வதற்காக தன் மனம் வெறுக்கும் எவ்வளவோ காரியங்களை செய்கின்றான். அவமானம், சித்திரவதை, மரணத்திற்குக்கூடப் பயப்படாமல் தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் உலகின் இந்த சிறிய தொகை மனிதர்கள்..."

கொப்பன் ஹேஹனில் இவற்றை விட்டுவிட்டு வேறெங்கும் , ஏன் இருந்துவிட்டோமே என்று க்ரேன் ஆச்சரியப்பட்டுக் கொள்வாள்.

ஒருநாள் தாங்களிருந்த பாதைவழியே ஓடிவந்து, படிகளில் ஏறி கதவை விரைவாகத் திறந்துவிட்டு மூச்சிரைக்க இரைக்க, செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருந்த தந்தையை அணைத்துக் கொண்டே அப்பா! அப்பா! அப்பா! எனக்கூவினாள். அவள் அவரை இழுத்தெடுத்து அறையைச் சுற்றி நடனமாடவே தொடங்கிவிட்டாள். நடப்பது என்னவென்று புரியாமல் திகைத்தபடி ஆகேயை நடுவில் நிறுத்திவிட்டு அவரைச்சுற்றி தளபாடங்களுக்கு மேலால் குறுக்கும், நெடுக்கும்– அறையெங்கும் சுற்றிவந்து நடனமாடிக் கொண்டிருந்தாள். திரும்ப வந்து அவரைக் கட்டியணைத்துக் கொண்டாள்.

கதவடியில் நின்ற மேற்றா சிரித்துக் கொண்டாள். "உங்கள் மகள், தான் கொப்பன்ஹேஹன் நடனக்குழுவில் தெரிவுசெய்யப்பட்டுள்ளதை உங்களுக்குப் புரியவைக்க முயல்கிறாள்" என்றாள்.

"அப்படியா? மிகவும் நல்லது" என்றார் ஆகே.

அன்றிரவு கரேன் நித்திரையானதும் மேற்றா பெருமைபொங்கிவழிய ஆகேக்குச் சொன்னாள், "அவர்கள் சொன்னார்கள் இவள் ஆயிரத்தில் ஒருத்தியென்று, ஒரு ஐந்தாறு வருடப்பயிற்சி அளித்தால் அவள் சிறந்த ஒரு இடத்தை அடையக்கூடும் என்று சொன்னார்கள்" என்றாள்.

"மிக நல்லது... மிக நல்லது" தன் உள்ளத்தில் பொங்கி வழியும் பெருமையை மறைக்க முயன்றபடி ஆகே சொன்னார்.

ஆனால் எப்போதுமே எல்லாம் சொர்க்கமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் இருக்கவில்லை. ஒவ்வொரு இரவும் நிலத்தை அதிரவைக்கும் குண்டு வெடிப்புக்கள் தலைமறைவு இயக்கத்தினரால் நடத்தப்பெற்றது. இவை வானத்திலும் ஒளியூட்டின. தொடர்ந்து நடனமாடிய தீச்சுவாலைகள், ரைபிள்களின் வெடியோசைகள், இயந்திரத் துப்பாக்கிகளின் ஓசைகள் இரவை நிறைத்தன. ஹிப்போஸின் நாசவேலைகளும், பழிவாங்கும் நடவடிக்கைகளும் டென்மார்க்கியர்களுக்கு மகிழ்ச்சியளித்துவந்த இடங்களைத் திட்டமிட்டுத்தேடி அழித்து வந்தன. ஜெர்மன் ஆதரவிலான பயங்கரவாதிகள் தியேட்டர்கள், வடிசாலைகள், பொழுதுபோக்குமிடங்கள் போன்றவற்றைக் குண்டுவைத்துத் தகர்த்து விட்டனர். டென்மார்க் தலைமறைவு இயக்கத்தினர் பதிலுக்கு ஜெர்மன் போர் இயந்திரத்திற்கு தீனி போட்டுக்கொண்டிருந்த இடங்களைத் தாக்கினர். விரைவில் பகலும், இரவும் வெடியோசைகளாலும், ஏற்படும் அழிவுகளாலும், பறக்கும் சிதைவுகளாலும் நிரம்பி வழிந்தன.

ஜெர்மனிய அணிவகுப்புக்கள் நடக்கும்போது தெருக்கள் வெறுமையாக இருக்கும். ஜெர்மனிய விழாக்களுக்கு சமுகம் கொடுக்காது ஒதுங்கினர் டென்மார்க் மக்கள். டென்மார்க்கின் தேசிய விடுதலை நாட்களில் சோகமயமான மக்கள் கூட்டம் தெருக்களை நிறைக்கும். தினசரி குதிரையேறிச்செல்லும் வயதான அரசரைக்காணும் மக்கள் அவருக்குப்பின்னாலும், அவரைச்சுற்றியும் வாழ்த்தொலிகளை எழுப்பித் தொடர்வது வழக்கமாக நிகழ்வதாயிற்று. நிலைமை கொந்தளிப்பாய் இருந்தது. ஒருநாள் வெடித்தே விட்டது. 1943ம் ஆண்டு ஆவணி 23ம் திகதி காலையைச் சீலன்டுக்கு (Zealamd) குறுக்காகக் கேட்ட வெடிச்சத்தம் வரவேற்றது. கப்பல்கள் செல்லும் பாதைகளை முட்டுக்கட்டை செய்யும் விதமாக டென்மார்க்கின் முழுக்கடற்படையும் தங்களைத் தாங்களே தகர்த்துக் கடல் வழிகளில் மூழ்கடித்துக் கொண்டன.

கோபமுற்ற ஜெர்மனியர்கள் தங்கள் படைகளை அமாலியின் போர்க்கட்டிடங்களையும், அரச மாளிகையையும் நோக்கி நகர வைத்தனர். அரசருடைய மெய்ப்பாதுகாப்புப் படை இதை எதிர்த்து உக்கிரமாகப் போரிட்டனர். ஆனால் விரைவில் எல்லாம் முடிந்துவிட்டது.

அமாலியின் போர்க்கில் அரசரின் மெய்பாதுகாப்புப் படைக்குப் பதிலாக ஜெர்மன் இராணுவ வீரர்கள் நிலை கொண்டார்கள். பல ஜெர்மன் வெளிக்கள ஜெனரல்களும் (Field Genarals) எஸ்.எஸ்.பிரிவும், கெஸ்ராபோ அதிகாரிகளும், டென்மார்க் மக்களை வழிப்படுத்த வந்திறங்கினர். டென்மார்க் பாராளுமன்றம் இடைநிறுத்தப்பட்டது. ஆத்திரத்துடன் சில புதிய ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டன. மாதிரிப் பாதுகாப்பு ஆளுகைக்குட்பட்ட பிரதேசம், "மாதிரி" யாயிருப்பது நின்றுவிட்டது. அப்படி இருந்திருந்தால் கூட,

டென்மார்க்கியர்கள் இதற்குப்பதிலடியாக தங்கள் நாசவேலைகளை அதிகரித்தனர். ஆயுதக்கிடங்குகள் (Arsenals) தொழிற்சாலைகள், வெடிமருந்துக் கிடங்குகள் (Ammunition Dumbs) பாலங்கள் போன்றவை தகர்த்தெறியப்பட்டன. ஜெர்மனியினருக்கு மேலும் சிக்கல் தொடங்கின. டென்மார்க்கிய நாசவேலைகள் பிரச்சினைகளை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டன.

ஹோட்டல் டி அங்கிள்ரெர் (Hotelr De Angleterr) இல் இருந்த ஜெர்மன் இராணுவத் தலைமையகத்தில் இருந்து கட்டளை பிறந்தது. "எல்ல யூதர்களும் டேவிட்டின் நட்சத்திரத்தோடு கூடிய மஞ்சள் நிறக் கைப்பட்டிகளை அணிய வேண்டும்."

அன்றிரவு டென்மார்க்கிய இரகசிய வானொலி ஒரு செய்தியை ஒலிபரப்பியது. "யூதர்கள் டேவிட்டின் நட்சத்திரத்தை அணிய வேண்டும் என்ற கட்டளைக்குப் பின்வரும் பதில், அமாலியன் போர்க் மாளிகையில் இருந்து அரசர் கிறிஸ்ரியன் அளித்துள்ளார். "எல்லா டென்மார்க்கியனும் ஒவ்வொரு டென்மார்க்கியனைப் போன்றவனே. தானே முதல் டேவிட்டின் நட்சத்திரத்தை அணியப் போவதாகவும், விசுவாசமுள்ள ஒவ்வொரு டென்மார்க்கியனும் இதையே செய்யவேண்டும். என்றும் எதிர்பார்க்கிறார்."

அடுத்தநாள், கொப்பன்ஹேஹனில் எல்லா மக்களும், டேவிட்டின் நட்சத்திரத்தை அணிந்திருந்தனர். அடுத்தநாள் இந்தக்கட்டளை வாபஸ் பெறப்பட்டது.

ஆகே தலைமறைவு இயக்கத்தில், இயங்கும் உறுப்பினனாக இல்லா விட்டாலும், அவரது சட்ட நிறுவனப் பங்குதாரர்கள் அதில் முக்கிமான உறுப்பினர்களாக இருந்ததால் அவர்களது நடவடிக்கைகள் பற்றி அடிக்கடி அவருக்குத் தகவல்கள் கிடைத்துக்கொண்டிருந்தன. 1943 முதுவேனிற்காலத்தில் மிகவும் கவலை கொண்டு கரேனைப்பற்றித் தானும் மேற்றாவும் ஒரு முடிவெடுத்தாக வேண்டும் என முடிவு செய்து கொண்டார்.

ஆகே தனது மனைவிக்குச் சொன்னார். "உண்மைதான், இன்னும் சில மாதங்களுள் ஜெர்மன்காரர் எல்லா யூதர்களையும் சுற்றிவளைத்துப் பிடிப்பார்கள். கெஸ்ராபோ எப்போ இதைச் செய்யத்தொடங்கும் என்று சொல்ல முடியாது."

மேற்றா ஹான்சன் மௌனமாக ஜன்னலருகே நடந்து சென்று அதனூடாகக் குளத்தையும், பழைய நகருக்குள் செல்லும் பாலத்தையும் நோக்கினாள். அப்போ மாலையாகிக் கொண்டிருந்தது. விரைவில் கரேன் நடனப்பாடசாலையில் இருந்து வரக்கூடும். மேற்றாவுடைய மனதுள், கரேனுடைய 13வது பிறந்ததின விருந்துக்காக தான் போட்டிருந்த பல திட்டங்கள், நிறைந்திருந்தன. அது, ரியொலி பூந்தோட்டத்தில் நாற்பது பிள்ளைகளுடன், ஒரு அழகிய நிகழ்வாக இருக்கப்போகிறது.

ஆகே, தன்னுடைய சுங்கானைப் பற்றவைத்துக்கொண்டு மேசையில் வைக்கப்பட்டிருந்த கரேனின் புகைப் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு பெருமூச்செறிந்தார்.

"நான் அவளை கைநெகிழப் போவதில்லை" மேற்றா சொன்னாள்.

"எங்களுக்கு அப்படிச் செய்ய எந்த உரிமையும் இல்லை..."

"அது வேறு, ஆனால் அவள் ஒரு டென்மார்க் யூதப்பெண் அல்ல எங்கள் சொந்த மகள்."

ஆகே தனது கையை மனைவியின் தோள்மேல் ஆதரவாக வைத்தபடி சொன்னார். "ஆல்போர்க்கில் யாராவது அவளைப்பற்றித் துப்புக் கொடுக்கக் கூடும்."

"ஒரு குழந்தைக்காக அவ்வளவு தூரம் மினக்கெட மாட்டார்கள்."

"இப்பவாவது இவர்களைப்பற்றிப் புரிந்து கொள்ளவில்லையா?'' மேற்றா திரும்பிச் சொன்னாள், நாங்கள் அவளுக்கு ஞானதீட்சை கொடுத்து சுவீகாரம் செய்து கொள்வோம்."

ஆகே மெதுவாகத் தலையசைத்தார். அவர் மனைவி மெதுவாக இருக்கையில் சரிந்து, அதன் கைப்பிடியை முஷ்டிகள் வெளுத்துப் போகும்வரை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

"என்ன நடக்கும் ஆகே?"

அவர்கள் எல்லா யூத இனத்தவர்களையும் நீரிணைக்கு அருகிலிருக்கும் சீலன்ட் கடற்கரைக்குக் கொண்டு செல்லப்




போகிறார்கள். நாங்கள் முடிந்தளவு படகுகளை விலைக்கு வாங்கி, அவற்றை சுவீடனுக்கு ஓடவிடப்போகிறோம். சுவீடன்காரர் வரும் எல்லா யூத இனத்தவரையும் ஏற்றுக் கொண்டு அவர்கள் தேவையைக் கவனித்துக் கொள்வதாக செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

"எவ்வளவு நாட்கள் நான் நித்திரையில்லாமல் கிடந்து இது பற்றி யோசித்திருக்கிறேன். அவள் தப்பியோட வெளிக்கிட்டால் அபாயத்தில் மாட்டிக் கொள்வாள் என்று எனக்கு நானே சொல்லிக்கொள்ள முயற்சித்திருப்பேன். இங்கே எங்களுடன் அவள் பாதுகாப்பிலிருப்பாள் என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்." "நீ சொல்வது என்னவென்று கொஞ்சம் யோசித்துப்பார் மேற்றா."

அந்தப்பெண் தன் கணவன் இதுவரை அவனிடம் கண்டிராத க்வலையும், உறுதியும் தொனிக்கச் சொன்னாள், "நான் அவளை ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. ஆகே அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." அழைக்கப்பட்ட எல்லா டென்மார்க் கியரும் அந்தப் பெரிய முயற்சியில் நிறைவாக ஒத்துழைத்தனர். டென்மார் க்கின் எல்லா யூதக் குடிசனம் முழுவதும் இரகசியமாக வடக்கு சீலன்ற் கரையோரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சுவீடனின் பாதுகாப்புக்குள் எடுத்துச் செல்லப்பட்டனர்.

தொடரும்...

www.tamilarangam.net



சிறுகதை

# அழைப்பு

– வசந்தன் –
(தமிழீழம்)

இரவு திருவிழா முடிந்த வாட்டம்; காட்டா வினாயகர் கோயில் முற்றம் காஞ்சு வரண்டுபோய் இருந்தது. இரவார வாரத்தின் சுவடுகள் அங்குமிங்குமாக வெளித்தெரிந்தன. கச்சான் கோதுகள், ஐஸ்கிறீம் கடதாசிகள் என வேறும் சில அடையாளம் சொல்லின.

காலை வெய்யில் உச்சிக்கேறும் நேரம். தேகம் சுள்ளிட்டு சுணைத்தது. மூப்பனுக்கு ஏதோ வெறுப்பு கலந்த சினமாக இருந்தது. தோளில் கிடந்த பறையை இறக்கி, கீழே வைத்துவிட்டு கால்களை மடக்கி குந்தி இருந்தான். முன்னர் என்றால் பிள்ளையாருக்கு நேராக பருத்த அரசமரம்; சற்றுத் தள்ளி வலது பக்கமாக தோப்பு போன்ற அகன்ற ஆலமரம்; நல்ல நிழல்.

அப்போதெல்லாம் என்ன அருமையான பொழுதுகள். காலைகளில் கோயிலுக்கு வந்தால் பறவைகளின் கலகலப்பு இனிமையான குரலின் தேவாரம் போல நெஞ்சை நிறைக்கும். நின்றால் மெய்மறந்து போகும் அருமையான இடம். இப்போது அவை நின்றதற்கான சான்றுகூட இல்லை. அவை சரிந்து ஆக மிஞ்சினால் எத்தனை வருடங்கள் ஆகும். ஆக, நான்கு அல்லது ஐந்து வருடங்கள்தான் இருக்கும்.

"பேணவேண்டியதெல்லாத்தையும் எவ்வளவு கெதியா விட்டெறிறம்; சே, அந்த அரசையும் ஆலையும் எங்களால ஏன் காப்பாத்த ஏலாமப் போச்சு" நினைக்க மூப்பனுக்கு வெறுப்பாக இருந்தது.

"இப்பிடி எத்தினையை இழந்தாச்சு; ஆல் விழுதுவிடேக்கை அதை நிலத்தில தாங்க விட்டிருந்தா மரத்தைக் காப்பாத்தி இருக்கலாம். பத்துத் தலைமுறைக்கு மேலான மரம்" நினைப்பு திரும்பவும் அந்த மரங்களையே சுற்றியது.

பிள்ளையாரின் கண்ணுக்கு முன்னால் வாசலுக்கு நேராக அரசமரம் குடை விரித்து நின்றது. முன் மண்டபத்தைத் தொடர்ந்து அதுவுமொரு மண்டபம் போல நிழல். அந்த அரசுக்கு முன்னரே பிள்ளையார் அந்த இடத்தில் இருந்தாரா அல்லது அவருக்கு முன்பே அரசமரம் அதில் வேரூன்றி விட்டதா என்பது இந்த எழுபது வயது அனுபவத்தில் அவனுக்கு பதில் தெரியாத விடயம். கேள்விப்பட்ட வரைக்கும் அதைப்பற்றி ஒருவருமே சரியாகச் சொல்லவில்லை. ஆனால், பிள்ளையாருக்கு இப்படி காட்டா வினாயகர் என்ற பெயரே அந்த அரசமரத்தால்தான் வந்தது.

கோயில் குருக்கள் எங்கோ நின்று விழுந்தடித்து ஓடினார். பெரிய மணி பூசைக்கு ஆயத்தமாக அடித்தது.

"அந்த மணியை சற்று வடிவாக் கேளுங்கோ; ஒண்டும் விளங்காட்டி இன்னும் நல்லா உற்றுக் கேளுங்கோ. நினைவன் கந்தன் நினைவன் கந்தன் என்றெல்லோ கேக்குது"

அவனது ஆச்சி இப்படித்தான் சொன்னது.

"அப்ப பறங்கியள் ஆள் புடிச்சு திரிஞ்ச காலம்; அவங்கள் சேரனும் எண்டா சேரனும் இல்லாட்டிப் புடிச்சுக்கொண்டு போடுவாங்கள். போனா போனதுதான். திரும்பி ஒருத்தனும் வந்து சேரலை.

பெரிய பெரிய குதிரையள்ள வருவாங்கள். கால்களில சப்பாத்து. ஆளாளுக்கு துவக்குகளும் வைச்சிருப்பாங்கள். அவங்கள் வந்தா ஊரே கலங்குமாம்.

ஒருநாள் பட்டாளத்தில் சேரச் சொல்லி கந்தன்ர பேரும் வந்திட்டுது. அவன் ஒழிச்சிட்டான். பறங்கியள் விடுறபாடா இல்லை. தேடிவந்தாங்கள். இவனும் காடு மேடெல்லாம் ஓடி ஒழிச்சுத் திரிஞ்சான். பறங்கியளும் விடாமல் தேடித் திரத்தினாங்கள்.

ஒருக்கா கந்தனை கண்டிட்டு அவங்கள் திரத்திவர இந்த இடத்திலதான் அவனால ஏலாமப் போச்சு. அரசமரத்தில ஏறி ஒழிச்சிட்டான். கீழை பாத்தா ஒரே பட்டாளக்காரர். இவன் மேல அப்பதான் கண்ணை மூடி பிள்ளையாரை நினைச்சு நேத்தி வைச்சான்." ஆச்சி சொல்லும்போது அவளையும் அறியாமல் குரல் தழுதழுக்கும். சுருங்கிய முகத்திலிருந்து பிரதிபலிப்புகளைக் காணேலாது. குழிகளுக்குள் மறைந்து கிடக்கும் கண்ணிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வடியும்.

கந்தன் செய்து கொடுத்த மணிதான் இது. அன்றையிலிருந்து தான்



காட்டுக்குள் இருந்த பிள்ளையார் காட்டா வினாயகராக மாறினார்.

"சரி இனி அடி மூப்பன்" காவடிக்கு செடில் குத்தியவன் பலமாக குரல் கொடுத்தான்.

மூப்பன், வாருக்குள் செருகியிருந்த சிம்பைக் கையில் எடுத்து வினாயகரை நினைத்து நெஞ்சில் அணைத்து, பின்பு அடித்தான். அவனுக்குப் பக்குவம் நன்றாகவே தெரியும். எப்ப எப்ப, எப்பிடி எப்பிடி அடிக்க வேண்டுமென்பது அவனுக்கு அத்துப்படி. ஏழு வயதில் அப்புவுக்குப் பக்கத்தில் 'சல்லாரி' போடத் தொடங்கிய காலம் தொட்டு, வற்றாப்பளை பொங்கல் ஒவ்வொன்றுக்கும் அவன் வாசித்திருக்கிறான்.

கடந்துபோன காலங்களின் ஒவ்வொரு துளியும் எவ்வளவு அற்புதமான நினைவுகளை பதிந்துவிட்டுப் போயிருக்கின்றன.

அம்மனை சுற்றியுள்ள அயற்கிராமத்தவன் ஒவ்வொருவனைப் போலவும் மூப்பனும் இந்தப் பொங்கல் முடிந்ததும் அடுத்த பொங்கலுக்கான கனவுகளில் மூழ்கிப் போவான்.

வருடா வருடம் அந்த நாளுக்குத்தான், பொங்கல் நடந்தாலும் ஒரு முன்னறிவித்தல்போல், ஏழு சமூகங்களைச் சேர்ந்த ஏழு குடில்களில் சம்பிரதாய பூர்வத்துக்கு, 'பாக்குதெண்டி' பிள்ளையாருக்குப் பக்கத்தில் நிற்கிற வேப்ப மரத்தில் கட்டிய பிறகு பொங்கல் பற்றிய பரவசம் மனதில் விரியும்.

மறுவாரம், இந்த தெய்வத்தை ஆதரித்து இந்த வழமையை ஆரம்பித்து வைத்த 'பக்த ஞானி' யின் வழி வழி வந்த ஒருவன் குடம் ஏந்த, பறை முழங்க கடற்கரைக்குப் போய் கடல் நீர் எடுத்து வந்து காட்டா வினாயகருக்கு விளக்கேற்றுவதுடன் திருவிழா ஆரம்பிக்கும்.

அடுத்த ஏழு நாளும் ஊருக்குள் திருவிழா தவிர்ந்த எந்த விசேஷமும் இல்லை. வேட்டைக்கோ விறகு தறிக்கவோ காட்டுக்கு ஒருவரும் போவதில்லை. கல்யாணமோ வேறெதோ ஒன்றுமே இல்லை. சாவீடு கூட தாரை தம்பட்டமின்றி சுடுகாடுபோய் சேர்ந்து விடும்.

ஏழாம் நாள் காட்டா வினாயகரின் பொங்கல். மறுநாள் குடத்தோடு எஞ்சிய கடல் நீரை கொண்டு போய் விளக்கேற்றி வற்றாப்பளை அம்மனுக்குப் பொங்கல். அந்தக் கிராமங்களின் மக்கள் எல்லாம் தங்களின் துன்ப துயரங்களை மறந்து, அற்புதமான பரவசத்தில் மூழ்கித் திளைத்து, மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மிதக்கும் நாள். ஏதோ அந்த ஒரு நாளுக்காகத்தான் உலக இயக்கமே என்பது போன்ற திளைப்பு. பகலும், இரவு விடிய விடியவும் கொண்டாட்டம்.

எல்லாம் முடிந்து பூசாரியோடு சிலர் மட்டும் காட்டுக்குப் போய் சப்தமின்றி மௌனமாக 'பக்த ஞானி' க்கு பொங்கிவிட்டு திரும்பியும் பாராமல் வருவதோடு ஊர் வழமைக்குத் திரும்பும். அடுத்த பொங்கல் பற்றிய கனவுகளோடு

**"கடவுளே! அதை எப்பிடி சொல்லுறது? அந்தப் பிசாசுகள் கடலுக்கு இஞ்சாலை கையை நீட்டி இப்பிடி கொத்தா அள்ளிக்கொண்டு போவாங்களெண்டு ஆர் கண்டது. எல்லாம் முடிஞ்சு கூட்டி அள்ளி .........."**

கோயில் வாசலில் காவடிகள் வந்தன. பத்துக் காவடிகள். பத்தும் செடில் காவடிதான். செடில் பிடிக்கிறவன் ஒழுங்கானவனாக இருக்க வேண்டும். அவனும் ஆட்டத்துக்குத் தக்கவாறு அசைந்து ஆடிப் பிடித்தால்தான் ஆடுறவனுக்கு அலாதியாகவும் சுகமாகவும் இருக்கும்.

ஒரு வட்டக் களரிபோல் ஆறுபேர் வெளி வட்டத்திலும் நால்வர் நடுவிலுமாக அணிவகுத்து ஆடத் தொடங்கினர்கள்.

மூப்பனின் அடி நிமிசத்திற்கு நிமிசம் சத்தம் அதிகரித்தது. பிரளயம் ஒன்றின் முன்னறிவித்தல் போல் மெதுவாகவும் பின்பு அகோரமாகவும் மாறி மாறி ஜதிக்குத் தக்கபடி பறை அதிர்ந்து முழங்கியது.

"மூப்பன் இதிலயே நிண்டால் விடிஞ்சிடும்; நட கோயிலுக்குப் போவம்" அருகில் நின்ற கந்தமுத்துக் கிழவர் உரக்கக் கத்தினார்.

அவனுக்கு நெஞ்சு திகைத்தது. சிறிது தடுமாறினான். கை ஒரு கணம் இயங்க மறுத்து தளம்பியது.

"எந்தக் கோயிலுக்குப் போறது" மனம் அவாவியது. கிழவரின் முகத்தை இரங்கத்தக்கவாறு பார்த்தான். அவனுடைய, தசை வற்றி என்பு மட்டும் முன்னுக்கு நின்ற கன்னங்கள் பரிதாபமாக நடுங்கி அசைந்தன.

இப்போது ஐந்தாறு வருடமாக வற்றாப்பளை அம்மனடிக்கு ஒருவரும் போவதில்லை. அம்மன் வாசலில் இருபத்தி நாலு பேர் சிதறி சின்னா பின்னமான பிறகு—

அவனுக்கு மனம் பாரமாக கனத்தது. பறை மீண்டும் ஆக்ரோசம் கொண்டு அதிர்ந்தது. அன்றைக்கு கோயில் வாசலில் மூப்பனின் காவடியும் இறக்குகின்ற நேரம்தான்.

"கடவுளே! அதை எப்பிடி சொல்லுறது? அந்தப் பிசாசுகள் கடலுக்கு இஞ்சாலை கையை நீட்டி இப்பிடி கொத்தா அள்ளிக்கொண்டு போவாங்களெண்டு ஆர் கண்டது. எல்லாம் முடிஞ்சு கூட்டி அள்ளி ........"

அன்றைக்குப் பிறகு அந்த வாசலுக்கு அவன் போகவில்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் போக வேண்டும் என்ற அவா எழுந்து நெஞ்சை அழுத்தும். இரவுகளை விழிக்க வைத்து வாட்டும்.

பறை அதிர்ந்தது. கேட்கும் ஒவ்வொருவரையும் உலுக்கி உருக்கொள்ள வைக்கும் ஆவேசமாக. வீடுகளிலிருந்து சனம் வீதிக்கு ஓடி வந்தது. "மூப்பனுக்கு ஆவேசம் வந்திட்டுது; இனி அவன் பெடியனை ஆட்டிப் படைச்சுப் போடுவான்" வாய்க்கு வாய் அதுதான் கதை.

"வாங்கோ, எல்லாரும் வாங்கோ தாயின்ர வாசலுக்குப் போவம்; விழுந்தாலும் பரவாயில்லை. செத்தாலும் பரவாயில்லை. பரம்பரை பரம்பரையா போனனாங்கள்.

தொடர்ச்சி 14ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அழைப்பு...

சிறுகதை (தொடர்ச்சி)

போகாமல் விடக்கூடாது'' அவன் மனம் கூவியது. பறை முழங்கியது. மூசி மூசி அடித்தான். காவடிகளும் செடில் பிடிப்பவர்களும் உருக்கொண்டு ஆவேசமாக ஆடினார்கள். தசையும், தோலும் இழுபட்டு செடில் அறும்போல் உக்கிரம். எதையும் துவைத்து துவசம் செய்துவிடுவதுபோல் ஆக்கிரோசம்.

மூப்பன் நடந்தான். காவடிகளும், செடில் பிடிப்பவர்களும் அதன் பின்னால் ஊர்ச் சனமும் நடந்தனர். ஓடினர். ஆடினர்.

வழிகாட்டி அம்மன் கோயில் தெரிந்தது. அது வழிகாட்டி அம்மன் தாயின் கோயில் செல்வதற்குரிய பாதையை அடையாளம் காட்டுவதற்காக அமைக்கப்பட்ட சிறு கோயில். தாயிடம் செல்பவர்கள் சற்று ஓய்ந்திருந்து செல்லுமிடம்.

வழிகாட்டி அம்மனின் முற்றம். முன்னால் மூப்பன் நின்று அடித்துக் கொண்டிருந்தான். எதிராக காவடி வரிசையாக நின்று ஆடினார். ஜதிக்குத் தக்கவாறு அவன் தலையும் கால்களும் ஆடின. அவன் அசைவுக்கு காவடிகள் ஆடின. ஊர் உலக சனமெல்லாம் சுற்றி நின்றனர்.

இதிலையே இறக்குவம். சில குரல்கள் கேட்டன. குரல் வந்த திசையில் பார்த்தான். முகம் சிதைந்து போன சிலர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோர முகம். "இவர்களுடைய முகங்கள் ஏன் இப்படிச் சிதைந்து போயின'' நம்ப முடியவில்லை. கலங்கிய கண்களை வெட்டி வெட்டிப் பார்த்தான். முகங்கள் மாறவில்லை.

"இல்லை, வேண்டாம்; இதில களைப்பாறிப் போவம். இல்லாட்டி கொஞ்ச நேரம் இருந்திட்டு நடப்பம்'' அவனுடைய மனம் கூவியது. பறை வேகம் பெற்று அதிர்ந்தது. ஆடுபவர்களும் வேகம் கொண்டனர். சனம் தம் நிலை மறந்து லயித்து நின்றனர்.

"அங்க போறதுக்கு அனுமதி எடுத்ததோ?''

சத்தம் வந்த திசையில் திரும்பிப் பார்த்தான். "எங்கட தாயின்ர வாசல்; அங்க போக ஆரிட்ட அனுமதி கேட்கிறது.'' நினைக்க சினமாக



இருந்தது. கேட்டவன் ஒரு சிறு புழுபோல் மாறி நெளிந்தான்.

"தாயடிக்குப் போகேல்லாது; வீணா எல்லாரும் சாக வேணும். அந்தப் பேய்கள் எங்கையெண்டு இருக்கிதுகள்'' அதே முகம் சிதைந்தவர்கள், உரத்த குரலில்.

அவனுக்கு பகீரென்றது. தேகம் நடுங்கி ஆடியது. பறை மேலும் மேலும் உக்கிரமாக அதிர்ந்தது. கட்குழிகளில் இருந்து வழிந்த கண்ணீர், தோல் சுருங்கிய கன்ன எலும்புகளூடாக வழிந்து ஓடிக் கொண்டிருந்தது. காவடிகள் ஆவேசத்தின் உச்சத்தில் ஆடின.

"தாயடிக்குப் போவம்; சாவம். சாகச் சாகப் போவம். இவ்வளவு பேரும் ஒண்டாப் போனா எந்தப் பிசாசையும் துரத்தலாம்'' அவன் மனம் மீண்டும் அழுதது. அவனது தலை அறுந்து விழும்போல் ஆடியது. கால்களை உதைத்து உதைத்து ஆடி அடித்தான். பறை உக்கிர உக்கிரமாக அதிர்ந்தது.

"மூப்பன் இண்டைக்கு செத்தாலும் செத்துப் போவான்'' சனம் முணு முணுத்தது. ஆனால், கட்டுண்டு ஆடாது ஆசையாது நின்றனர்.

பறை அதிர்ந்தது. பிரபஞ்சத்தை ஆட்டி அசைக்கும் ஆவேசமாக அதிர்ந்தது.

திடீரென காவடிக்காரன் ஒருவன் வீதியில் இறங்கி ஓடினான். மற்றக் காவடிகளும் இருவர் மூவராக விழுந்தடித்து ஓடினர். மூப்பன் முழங்கினான். பின்னால் செடில்காரரும் ஓடினர். மூப்பன் உக்கிரமாக முழங்கினான்.

வீடுகளிலிருந்த சனம் எல்லாம் ஓடி வந்தது. பறை மீண்டும் மீண்டும் அதிர்ந்தது. காவடிகள் ஓடின. பின்னால் சனம் ஊர்ச் சனம் 'முழுவதும் பறை' அதிர்ந்தது.

குறிப்பு: 1992 வைகாசி, வற்றாப்பளை அம்மன் பொங்கல் அன்று முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஏவிய எறிகணைகளால் 24 பேர் உயிரிழந்தார்கள். அதன் பின் நாலு வருடங்கள் வற்றாப்பளை அம்மனை நினைத்து முள்ளியவளை சந்தியிலிருந்த வழிகாட்டி அம்மன் கோயிலிலேயே மக்கள் பொங்கலிட்டனர். தற்போது முல்லைத்தீவு படை முகாம் தகர்க்கப்பட்டு வற்றாப்பளை அம்மனடிக்கு மக்கள் சென்று வருகின்றனர். ✷

> "தாயடிக்குப் போவம் சாவம். சாகச் சாகப் போவம். இவ்வளவு பேரும் ஒண்டாப் போனா எந்தப் பிசாசையும் திரத்தலாம்'' அவன் மனம் மீண்டும் அழுதது. அவனது தலை அறுந்து விழும்போல் ஆடியது. கால்களை உதைத்து உதைத்து ஆடி அடித்தான். பறை உக்கிர உக்கிரமாக அதிர்ந்தது.

## தூபக் அமாறு இயக்கத்தினர்......

பதித்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

இரண்டு வருடங்களின் பின் புஜிமோரி சர்வாதிகார பலத்தைப் பாவித்து பேருவின் இரண்டு இயக்கங்களையும் அடக்கி ஒடுக்கினார். 25வருடங்களாக வெளியில் முகம் தெரியாமல் வாழ்ந்த "சைனிங் பாத்" தலைவர் அபிமால் ருஸ்மான் 1993ல் சிறைப் பிடிக்கப் பட்டதுடன் விக்டர் போலேயும் மீள் கைது செய்யப்பட்டார்.

தற்போதைய பணயக் கைதிகள் நாடகத்தினை வழிநடத்துபவர் 43வயதுடைய நெஸ்டர் செர்பா (Nestor Cerpa) என்பவராவார். முன்னாள் ஆடை உற்பத்தித் தொழிலாளியான இவர் சிறந்த புத்திசாலி என பேருவின் பத்திரிகை ஒன்று தனது ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. மிகவும் பாதுகாப்புக் கூடிய தலைநகர் லீமாவில் குறிப்பாக 5 மீற்றர் உயரமான சீமெந்துச் சுவர் அதன்மேல் 3 மீற்றர் உயரத்தில் அடிக்கப்பட்டுள்ள மின்சாரக் கம்பிகளுடனான யப்பானிய தூதரகத்தின் உள்ளே, உணவு பரிமாறுபவர்கள் போல பாசாங்கு செய்து முதலில் உள்ளிட்டு பின்பு குண்டுத் தாக்குதல் மூலம் காவலாளிகளைச் செயலிழக்கச் செய்து பணயக் கைதிகளைச் சிறைப்பிடித்த இச்செயல் இவரது திட்டமிட்ட செயற்திறனை வெளிக்காட்டுகிறது.

72 பணயக் கைதிகளைத் தவிர (கனேடியத் தூதர் உட்பட) ஏனையோரை விடுவித்துள்ள சேர்பா, இவர்கள் வெளியில் சென்று தமது இயக்கம் பற்றிச் சரியான தகவல்களைக் கொடுப்பர் என்று நம்புகின்றார். "ஏகாதிபத்திய" செல்வாக்குச் சக்திகளிடமிருந்து பேரு நாட்டை மீட்டெடுப்பதே இவர்களது பிரதான நோக்கமாக உள்ளது. இதனால்தான் ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக போராடியவரின் பெயரைத் தமது இயக்கத்துக்கு வைத்துள்ளனர்.

பேரு நாட்டில் உள்ள அரசியல் வன்முறைதான் இவ்வாறான பணயக்கைதிகள் சம்பவங்களுக்குக் காலாக அமைகின்றன எனக்கூறும் செர்பா வேறு வழிவகைகள் இல்லாததாலேயே இவ்விதமான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என விளக்கியுள்ளார். மேலும் நாம் பயங்கரவாதிகள் அல்ல எனக்கூறும் இவர் சமூக நீதியுடனான உண்மையான சமாதானம் பற்றி உரையாடவே நாம் விரும்புகின்றோம் எனவும் கூறினார்.

சிறையில் இருக்கும் போராளிகளை விடுதலை செய்வது பற்றிய தேக்கநிலை எவ்வாறு முடிவடையும் என்பது பற்றி ஆரூடம் கூற தற்போது முடியாது எனினும் பேரு நாட்டின் சமூக சமத்துவமின்மை பற்றிய பல உண்மைகளைகளை துலாம்பரமாக வெளிக்கொணர இப்பணயக்கைதிகள் நாடகம் வழிவகுத்துள்ளது எனலாம். ✷

## அடிமேல் அடியாக

(ஆசிரிய தலையங்கம், ஈழநாதம் - தமிழீழம்)

சிறிலங்கா வான்படைக்கு அடிமேல் அடி விழுந்தது போல் அதன் விமானங்களும் உலங்கு வானூர்திகளும் அடுத்தடுத்து அழிந்த வண்ணமே உள்ளன. இவ் வான்கலங்களின் அழிவுகளுக்குப் பல காரணங்கள் இருப்பினும் வான்படையைப் பொறுத்தும் சிறிலங்கா அரசைப் பொறுத்தும் இவை பாரிய இழப்புகளேயாகும். சிறிலங்கா விமானப்படை எந்த ஒரு வான்கலத்திலும் இன்று நம்பிக்கை வைக்கக்கூடிய நிலையில் இல்லை என்றே கொள்ளலாம். ஏனெனில், சிறிலங்கா வான்படையின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இறுதிவரை இருந்த கிபீர் குண்டு வீச்சு விமானங்களும் அன்ரனோவ் பயணிகள் விமானங்களும் எம்.ஐ ரக உலங்குவானூர்திகளும் அண்மையில் ஏதோ ஒரு வகையில் அழிந்து போய் உள்ளன. சிறிலங்கா விமானப்படை இரண்டாம் கட்ட ஈழப்போரில் இருந்து இழப்புகளைச் சந்திக்கத் தொடங்கியது. ஆயினும், மூன்றாம் கட்ட ஈழப்போரில் அதுவும் குறிப்பாக – இவ்வாண்டின் தொடக்கத்தில் இருந்து, அதாவது ஜனவரி 16இல் இருந்து மார்ச் 19ஆம் திகதி வரை அது எட்டு வான்கலன்களை இழந்துள்ளது. இது சிறிலங்கா விமானப்படையைப் பொறுத்தவரை பெரியதொரு தொகையாகும். அதன் செயற்பாடுகளை பெருமளவு முடக்கக்கூடியதுமாகும். சிறிலங்கா விமானப்படையின் அண்மைக்கால இழப்பிற்கு மூன்று பதில்கள் வெளிப்படையாகக் கிடைக்கின்றன. ஒன்று, இயந்திரக் கோளாறு என்பதாகும். சிறிலங்கா வான்படை விமானம் பறந்து கொண்டிருக்கும் போது, அது வெடித்துச் சிதறினாலோ அன்றி காணாமல் போனாலோ முதலில் சிறிலங்கா விமானப்படையினாலோ அன்றி பாதுகாப்பு அமைச்சினாலோ தெரிவிக்கப்படும் அல்லது கூறப்படும் காரணம் இதுவாகும். இக்காரணமானது, தெளிவான ஒரு கண்டுபிடிப்பின் அடிப்படையில் கூறப்படுவதல்ல. ஒரு காரணம் தேவை என்ற அடிப்படையிலேயே கூறப்படுவதாகும். இரண்டாவதாகக் கூறப்படும் காரணம் – விமானத்தைக் காணவில்லை அல்லது மர்மமாக மறைந்து விட்டது என்பதாகும். அதாவது சிறிலங்கா ஆயுதப்படையினரின் கையில் சிக்கமுடியாத தொலைவில் போய்விட்டால் பாதுகாப்பமைச்சர் கூறும் பதில் இதுவாகும். இதில் விமானம் எவ்வாறு காணாமல் போனது என்பது பற்றி எதுவித தகவல்களும் வழங்கப்படமாட்டாது. ஆகையினால், இவ்விமானம் எவ்வாறு காணாமல் போனது என்பது குறித்த முடிவைப் பாதுகாப்பமைச்சினால் மேற்கொள்ளமுடியவில்லை என்பது பொருளாகும். மூன்றாவதாக, விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் அழிக்கப்பட்டுவிட்டன அல்லது சேதமாக்கப்பட்டன என்பதாகும். இவை விமானங்கள் பறந்து கொண்டிருக்கும் போதும் தரையில் நிறுத்தி வைக்கப்பட்ட போதும் நிகழ்ந்துள்ளன. இந்த வகையில் சிறிலங்கா விமானப்படை சந்தித்துள்ள இழப்புகளைப் பார்த்தால் – அதற்கான காரணங்களைக் கண்டறிய முடியாத நிலையிலோ அன்றி அவற்றில் ஏற்பட இருந்த ஆபத்தைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையிலோ ஏற்பட்டன என்று கூறுதல் வேண்டும். போர் நடவடிக்கையில் ஈடுபடும் போது போர்த் தளபாடங்கள் இழப்புக்கு உள்ளாவது வழமையானதுதான் என அமைச்சர் ரத்வத்த போன்ற சிலர் கூறலாம். அவ்வாறு கூறியும் உள்ளனர். ஆனால், அவ்வாறான இழப்புக்கள் அப்படையினரின் நடவடிக்கைகளையே பெரியளவில் பாதிக்கும் அல்லது முடக்கும் நிலை உருவாகியிருக்குமானால் அது அமைச்சர் ரத்வத்த கூறுவது போன்று சாதாரணமான ஒன்றுதான் எனக் கொள்ளமுடியாது. ஏனெனில், ஒரு படைப்பிரிவின் கணிசமான அழிவானது – போரை அரசு கூறிக்கொள்வது போல் தொடர்ந்து வெற்றிகரமாக நடாத்துவதற்கு உதவப் போவதில்லை. ஏனெனில், ஒரு படைப்பிரிவின் அழிவானது – எதிர்த் தரப்பிற்கான அனுகூலமேயாகும். இதனை உலகப் போர் வரலாறுகள் உறுதி செய்கின்றன. அதிலும் விடுதலைப் புலிகளின் தாக்குதலினாலும், காணாமல் போனது என்ற ரீதியிலும் கணிசமான விமானங்களை இழப்பதற்குக் காரணம் கூறப்படுகையில் அவ் இழப்பினைச் சுலபமாகத் தட்டிக்கழித்துவிட முடியாது. ஆனால், சந்திரிகா அரசின் இவ் வறட்டுத்தனம் – இவ்விழப்புக்களை எல்லாம் புறக்கணித்து போரைத் தொடர்ந்து நடாத்துவதற்கு முற்படலாம். இதற்காகப் புதிய போர் விமானங்களையும் உலங்குவானூர்திகளையும் கொள்வனவு செய்ய முற்படலாம். ஆனால், விமானப்படைப் பிரிவின் இவ்விழப்பிற்குரிய காரணங்களைத் தெளிவாகக் கண்டறியாத வகையிலும், புலிகளின் பலம் குறித்து சரியான மதிப்பீடு அற்ற நிலையிலும் இவ்வாறான முயற்சிகள் – சிறிலங்காவின் பொருளாதாரத்தை மேலும் அழிப்பதற்கு உதவுமே ஒழிய – போரை வெல்வதற்கு உதவப் போவதில்லை. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னிப்பிரதேச நிலவரங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் துரித அபிவிருத்தி வேலைகளும்

## வன்னிப்பகுதியில் மோசமான சுகாதார நிலை

வன்னிப்பகுதியில் அகதி முகாம்களின் சுகாதார நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது, அளவுக்கு மிஞ்சிய ஆட்கள், சுத்த நீர் பற்றாக்குறை, மருந்து நிலையங்களில் மருந்துப் பஞ்சம், ஆகிய சூழல், வன்னிப்பகுதிக்கு இலட்சக்கணக்கில் இடம்பெயர்ந் துள்ள தமிழ் மக்களுக்கு, அடிப்படை சுகாதார வசதிகளைக்கூட அளிக்க முடியாத நிலைக்கு, சுகாதார சேவையில் உள்ளோர் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளார்கள். உணவு விநியோகக கட்டுப்பாட்டால் ஏற்கனவே இங்கு இடம பெயர்ந்த மக்கள் அல்லற்படுகிறார்கள். கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கும் சொற்பளவு மருந்து ஒதுக்கீட்டால் இங்குள்ள வைத்தியர்கள் ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். நீண்ட தடங்கல்களுக்குப் பின் கிடைக்கும் வரையறுக்கப்பட்ட விநியோகம், ஒரு சில வாரங்களுக்கு மட்டுமே போதும் என்ற பயத்தை ஏற்படுத்தி உள்ளது.

இப்பகுதியில் உள்ள ஒவ்வொரு வைத்தியசாலையும் விபரமாகத் தத்தம் தேவை குறித்து வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் என்றும் ஆனால் அரசு ஒட்டுமொத்தமாக இது குறித்துப் பாராமுகமாக இருந்து விட்டதென்று வைத்தியசாலைத் தலைமைப்பீடம் மூலம் அறிய வருகிறது.

மலேரியா, மூளை மலேரியா, வயிற்றோட்டம் ஆகியவற்றுடன் வேறும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற தண்ணீர் மூலம் பரவும் நோய்கள் கட்டுப்பாடு மீறிப்பரவுகின்றன. முல்லை மாவட்டத்தில் உள்ள தமிழ்ச சிறார்களுக்கு முக்கூட்டு (Triple) பால் குத்தும் மருந்து (மீள்வழங்கல்களுக்கான) அண்மையில் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவுமற்ற நிலைமை நிலவுகின்றது. முல்லைத்தீவில் வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாக வைத்திய சாலையே மூடும் நிலையேற்படும் என அவதானிக்கப்படுகின்றது. வன்னிப்பகுதியில் நடாத்தப்பட்ட ஒரு சுகாதாரக்கணிப்பின்படி முறையே, மலேரியா, வயிற்றோட்டம், வயிற்றுளைவு, கல்லீரல் வீக்கம், நெருப்புக் காய்ச்சல் ஆகிய நோய்களே தமிழ் மக்களுக்கு உபாதை ஏற்படுத்தும் பிரதான நோய்களாகும். தமிழர் புனர்வாழ்வுக்கழகம், வன்னிப்பகுதி சுகாதார மேலிடத்தின் பங்களிப்புடன் சுத்தமும் சுகாதாரமும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துக் கடுமையாக உழைக்கும் வேளையில் சுய உதவி வழிவகைகளிலும் கவனம் செலுத்துகிறது.

தகுந்த பயிற்சி பெற்ற வைத்திய ஊழியர்கள் பற்றாக்குறையும், அளவுக்கு மீறிய தொகையினரின் வைத்தியசாலைக்கு வருகையுமே நிலைமையை மேலும் பாதிப்படையச் செய்கிறது. கிளிநொச்சி கிழக்கிலுள்ள தர்மபுரம் வைத்தியசாலை, ஒரேயொரு தகைமையுள்ள வைத்தியருடன்(அதாவது அங்கு சேவையில் இருந்த வைத்திய ஊழியர்களை இலங்கை இராணுவம் யாழ் குடாநாட்டிற்குப் போகும்படி உத்தரவிட்டபின் ) இயங்குகின்றது.

தினசரி 75 நோயாளர்களுக்கு வைத்தியம் செய்யக் கட்டுப்பட்ட இவ்வைத்தியசாலைக்கு 700 நோயாளர்கள் வருகிறார்கள். இந்த வைத்தியசாலையின் மகப்பேறு வாட், குழந்தை பெறும் வசதி செய்து கொடுக்க முடியாது செயலற்றுப் போயுள்ளது. சிலநாட்களில் இந்த ஒரே வைத்தியர் இம்மாவட்டத்தில் உள்ள தர்மபுரத்துடன், இராமநாதபுரம், வட்டக்கச்சி ஆகிய இரு வைத்தியசாலைகளுக்கும் போக வேண்டியுள்ளது. அந்த ஊழியர் பற்றாக்குறை உள்ளது.

வாரத்தில் இருதினம் இயங்க ஆரம்பித்த பூநகரி வைத்தியசாலை, வைத்தியஊழியர் பற்றாக் குறையாலும் மருந்து விநியோகப்பற்றாக் குறையாலும் தனது சேவையை இடைநிறுத்த வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் வைத்திய கவனிப்பு எதுவுமின்றி நிர்க்கதியாக்கப் பட்டுள்ளார்கள்.

இதற்கிடையில் இனம்புரியாத ஒரு வைரசின் நோய் வைத்தியர்களின் கவனத்தை ஈர்ந்துள்ளது. பல தொற்று நோய்களுக்குத் தங்களை உள்ளாக்கியிருக்கும் தமிழ் மக்களுக்கு இந்த வைரஸ் மேலும் தொல்லை தருகிறது. இந்த வைரஸ் ஏற்படுத்தும் காய்ச்சல், கிளிநொச்சியில் பல நிலையங்களிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால் வைத்தியர்களால் முறையான அடையாளம் காணலும், வைத்தியமும், தகுந்த மருத்துவ உபகரணங்களும் இல்லாமல் இந்நோயைச் சுகப்படுத்தவோ அன்றி சரியான அறிகுறிகளைக்கண்டு பிடிக்கவோ இயலாதுள்ளது.

## துரித புனர்வாழ்வுச்சேவைத் திட்டத்தைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆரம்பிக்கிறது

இன்று இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் கிட்டத்தட்ட 10 இலட்சம் மக்கள் குடிபெயர்ந்த நிலையில் வாழ்கிறார்கள். ஒன்றில் தற்காலிக மீளத்திரும்பும் வதிவிடங்களில் அல்லது நிரந்தர இடம்பெயர்வு டன் பற்றாக்குறை உணவுடனும் அத்தியாவசிய தேவைகள் பற்றாக்குறையுடனும் வாழ்கின்றனர்.

வட இலங்கையின் யாழ்குடாநாட்டிலிருந்து 5 இலட்சம் மக்கள் குடிபெயர்ந்தனர். பின கிளிநொச்சியிலிருந்து இரண்டரை இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து இலங்கையின் வடக்கு கிழக்கிலும் அகதிகளாக அத்தியாவசியப் பொருட் களுக்கான தடைகளைச் சமாளித்துக் கொண்டும் தொடரக் கூடிய இராணுவத் தாக்குதல்களை எதிர்பார்த்துக் கொண்டும் வாழ்கின்றனர்.

இடம்பெயர்ந்தோரில் பெரும்பகுதியினர் அரச சார்பற்ற நிறுவனங்கள் கொடுக்கும் உணவு வகைகளிலேயே தங்கள் தினசரி தேவைகளுக்குத் தங்கிக் கடந்த பல மாதங்களாக வாழ்ந்துள்ளனர். இந்நிலையிலுள்ள மக்களுக்கு ஒரு நம்பிக்கையும் ஒரு மதிப்பான வாழ்க்கையும் கிடைக்கத் தமிழர் புனரவாழ்வுக்கழகம், சுயதேவைப்பூர்த்தி, தங்கள் கால்களிலேயே தாங்கள் நிற்றல், ஆகிய ஊக்குவிக்கும் திட்டங்களை அடையாளம் கண்டுள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்தவும் உள்ளது. இது அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து நிவாரண விநியோகம் செய்ய வேண்டிய சுமையைக் குறைக்கும்.

## துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத்திட்டம்

இந்த நிலையைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், மற்றைய அரச சார்பற்ற நிறுவனங்கள் சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் பல அத்தியாவசிய நன்கு உருவமைக்கப்பட்ட குறுங் கால நீண்ட காலத்திட்டங்களை நடைமுறைப் படுத்த ஆரம்பித்துள்ளது.இடம்பெயர்ந்த இலட்சக கணக்கான மக்கள் திரும்ப அவர்கள் வாழ்வை சுமுகமாக ஆரம்பிக்கவும், நீண்ட காலப் புனர் வாழ்வை அவர்கட்கு வழங்கவும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1996 நவம்பர் 26ம் திகதி செவ்வாய்க்கிழமை, 10 வருடத்திட்டமான துரித அபிவிருத்திச் சேவைத் திட்டத்தை அறிவித்துள்ளது. அது உலக சமூகத்திடமும் இத்திட்டத்திற்கு அவர்கள் கரங்கள் நீட்டி உதவி செய்யும்படி அழைப்பு விடுத்துள்ளது.

### திட்டத்தின் குறிக்கோள்:

இந்தத் திட்டத்தின் மூலம் 3 பிரதான குறிக்கோள்கள் பூர்த்தியாகும்.

* இடம் பெயர்ந்தோரினதும் நிரந்தரக் குடியமர்ந்தோரினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
* அவர்களது அடிப்படை தேவைகளை வழங்கல்.
* அவர்களது சமூக அபிவிருத்தியை ஊக்குவித்தல்.

திட்டங்கள் 3 முதல் 6 மாதங்கள் வரை நீடிக்கும். ஏழு பிரதான திட்ட நிரல்கள் இந்த ஏற்பாட்டின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவை கல்வி, வீட்டுவசதி, விவசாயம், தொழில், புனர்வாழ்வு, சுகாதாரம் ஆகியவற்றுடன் பொது விடயங்களான சமூக அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு, கலாச்சார அபிவிருத்தி ஆகிய திட்டங்களும் அடங்கும்.

### செயல்முறை:

இத்திட்டம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத் தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்கள் பயன்பெற நடைமுறைப்படுத்தப்படும். மாவட்டங்களின் தேவைகளுக்கொப்ப நிதி ஒதுக்கப்படும்.

திட்டத்தில் பங்குகொள்ள அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாவட்ட பரிசீலனை சபையால் அனுமதிக்கப்படும். இச்சபை மாவட்ட அரசாங்க அதிபர் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அரசு சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்கள் பங்குபற்றும் நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படும். இலங்கை அரசினால் தடைசெய்யப்படாத திட்டங்களுக்கே நிதி ஒதுக்கப்படும்.

அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தியே திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். எல்லாக்காலகட்டங்களிலும் பயனடைவோரினதும், திறமையும் நிபுணத்துவமும் கவனத்தில் எடுக்கப்படும்.

### பயனாளிகள்:

பலவகைப்பட்ட பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். கீழ்த்தரப் படும் அடிப்படையிலேயே தெரிவு நடைபெறும்.

* சேவை வழங்கும் குழுவினர் இடம் பெயர்ந்தோர்களையும் பங்குபற்றுவோராகச் சேர்த்துக் கொள்வர்.
* ஒரு கணிசமான அளவு இடம்பெயர்ந்தவர்கள் அடங்கிய சமூகங்களே கூடுதலாக விரும்பப்படுகிறது.
* இடம் பெயர்ந்தோர் துரித புனர்வாழ்வுத் திட்டங்கள், பயனை உச்சக்கட்டத்திற்கு கொண்டு வரும் அத்துடன் தொடரும் பயன் மூலமும் வளர்ச்சி ஏற்படுத்தலாம்.
* நிரந்தரமாகக் குடியேறுபவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்கள் துரித அபிவிருத்திக்கு உதவிகளும் வழங்கலாம்.
* பெண்கள் எல்லா நடவடிக்கைகளிலும் முக்கிய பங்களிப்பது அதாவது தேவைகளைப் பரிசீலிப்பது திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் ஆகிய அனைத்துமே ஊக்குவிக்கப்படும்.
* மேலதிகப் பயன் சிறுவர்களுக்கும் விதவைகளுக்கும், வலது குறைந்தவர்களுக்கும், பெண்கள் தலைவியாயுள்ள குடும்பங்களுக்கும் சென்றடையும் திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த ஆரம்பத்தில் 10 கோடி ரூபாய் தேவையென்று கணக்கிடப்பட்டது. இது 10 வருடங்களில் பூர்த்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொடரும்...............

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்கள அரசின் கொள்கை ..........

நிகழ்வுகள் இடம்பெறுவது அவசியம் என்று தலைவர் பிரபாகரன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நேர்மையான வகையில் பேச்சுவார்த்தை நடைபெற்று நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்று வரையப்படுவதற்கு ஏதுவாக, தமிழர் நிலத்தில் இயல்புநிலை தோன்ற வேண்டியது அவசியம். அப்போதுதான் நடுநிலையுடன் பேச்சுக்கள் தொடரும். பரஸ்பர சந்தேகங்கள் அகன்று பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் உறுதிப்பாடு பிறக்க வழியேற்படும்.

இராணுவ ஆட்சியில் தமிழ் மக்கள் அல்லலுறும்போது, பொருளாதாரத் தடைகள் மற்றும் ஆக்கிரமிப்பு அழுத்தங்கள் கொடுக்கும் பல்வேறு விதமான வாழ்க்கைச் சுமைகளால் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டி ருக்கும்போது, பேச்சுவார்த்தை மேசையில் நல்லெண்ணம் நிலவாது வெறுப்பும், சந்தேகமும், பழிவாங்கும் உணர்வும்தான் நிழலாடும்.

எனவேதான், பேச்சுவார்த்தைக்கு முன் நிகழ்வாக தமிழர் நிலத்தில் இயல்புநிலை ஏற்படுத்தப்படல் அவசியம் என்று தலைவர் பிரபாகரன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் இருந்து படைகளை விலக்கி, பொருளாதாரத் தடை போன்ற அழுத்தங்களை நீக்குவதன் மூலம் நெருக்கடியைத் தணித்து, சுமூகமான இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்று, தலைவர் வலியுறுத்தியிருக்கிறார்.

புலிகள் இயக்கத்தின் இந்த அரசியல் நிலைப்பாட்டை சந்திரிகா அரசு ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்க இயலாது. ஏனெனில், போர் மூலம் சமாதானம் காணப் புறப்பட்ட அம்மையாருக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் காணும் எண்ணம் எழ வாய்ப்பில்லை.

பேச்சுக்கள் மூலம் சமாதானம் காண முயன்றால் தமிழரின் அரசியல் உரிமைகளை முழுமையாக வழங்க வேண்டி வந்துவிடும். இதை சிங்கள அரசு ஒருபோதும் விரும்பாது. எனவேதான், போர் மூலம் தமிழினத்தைத் தோற்கடித்து – அதன்பின் சமாதானப் பேச்சு என்ற போர்வையில் – சரணாகதி ஒப்பந்தத்தை தமிழினத்தின் மீது திணிப்பதே சந்திரிகா அரசின் திட்டம். அதாவது, இராணுவ மேலாதிக்கத்துடன் இருந்தபடி இனப்பிரச்சினை பற்றிப் பேசவே சிங்கள அரசு விரும்புகின்றது. அப்போதுதான் குறைந்தபட்சத் தீர்வை தமிழர் மீது திணிக்க முடியும் என்று அது எண்ணுகின்றது. இவ்விதமான ஒரு இராணுவத் தீர்வே சிங்கள அரசின் நிரந்தரக் கொள்கையாகும்.

இதேவேளை, பேச்சுவார்த்தைக்கான முன்நிகழ்வாக புலிகள் இயக்கம் எடுத்துள்ள நிலைப்பாடு கடுமையானதாக இருக்கின்றது என்ற கருத்தும் சிலரிடம் உண்டு. ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து இராணுவம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்ற அரசியல் நிலைப் பாட்டையே சிலர், இவ்விதம் கேள்விக் குறியுடன் நோக்குகின்றனர்.

புலிகளின் இந்த நிலைப்பாடு சரியானதே. அதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. தமிழரின் இனப்பிரச்சினைக்கு நீதியான, கௌரவமான தீர்வொன்று பேச்சு மூலம் காணப்பட வேண்டுமாயின், இந்த முன்நிகழ்வுகள் அவசியமானவை. சமாதான தேவதையாகவும் – அரசியல் தீர்வில் நாட்டம் கொண்ட ஒரு ஜனநாயகவாதி போலவும் நடந்து கொள்ளும் சந்திரிகா அம்மையாரை சர்வதேச சமூகத்தின் முன் அம்பலப்படுத்தவும் இந்த முன்நிகழ்வுகள் உதவும்.

பேச்சுவார்த்தையை நேர்மையுடனும் – உண்மையுடனும் நடாத்த வேண்டும் என்று சந்திரிகா அரசு மனப்பூர்வமாக விரும்பினால், தலைவர் பிரபாகரன் வலியுறுத்தியுள்ள இந்த முன்நிகழ்வுகளை ஏற்றுக்கொள்வதில் அவருக்கு எந்தத் தடையும் இருக்காது. சிங்கள அரசிற்கு அது எந்த நட்டத்தையும் ஏற்படுத்தி விடாது. ஆனால், பேச்சுவார்த்தையை ஒரு அரசியல் நாடகமாக – சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு கண்துடைப்பாக நடாத்த விரும்பினால் – படைவிலக்கல் சிங்கள அரசிற்கு நட்டத்தைக் கொடுக்கும். மேலும், போரை நிறுத்தி தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர அரசியல் தீர்வை உண்மையிலேயே அம்மையார் நாடுகின்றாரா? அல்லது போரைத் தொடர்ந்து நடாத்தி இராணுவத் தீர்வொன்றை தமிழினத்தின் மீது திணிப்பதையே தனது அரசியல் திட்டமாகக் கொண்டுள்ளாரா? என்பதை உலகம் கண்டறிய, புலிகளின் நிலைப்பாடு நிச்சயம் உதவும்.

இந்த அரசியல் நிலைப்பாட்டால் தமிழினத்திற்கு எந்த ஒரு நட்டமும் வந்துவிடாது. இதை சிங்கள அரசு ஏற்றுக்கொண்டால் அது தமிழினத்திற்கு நன்மை பல பயக்கும். ஏற்க அரசு மறுத்தால், புதிதாக எந்த ஒரு நட்டமும் தமிழ் மக்களுக்கு ஏற்படாது.

எனவே, தலைவர் பிரபாகரன் வலியுறுத்திய அரசியல் நிலைப்பாட்டில் கடுமை இல்லை. மாறாக, உறுதியும் –சாணக்கியமும் – தமிழர் நலனும்தான் உண்டு.

ஆயுதச் சரணடைவு – பேச்சுக்கு கால எல்லை விதிப்பு ஆகிய அரசின் முன்நிபந்தனைகள் தமிழர் நலனுக்கு தீங்கிளைக்கக் கூடியவை. ஆனால், தலைவர் பிரபாகரன் வலியுறுத்திய முன்நிகழ்வுகள் தமிழர் நலன்களை உறுதிப்படுத்துபவை – சரியானவை.

இதேவேளை, புலிகள் இயக்கத்தின் யோசனைகள் உலக இராஜதந்திரிகளது கவனத்தையும் ஈர்த்துள்ளன. இதனால்தான் புலிகளின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்கு மத்தியத்துவம் வகிக்கத் தயார் எனப் பல மேற்கு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

சிங்கள அரசுடனான சமாதானப் பேச்சுக்கு வெளிநாட்டு மத்தியத்துவம் அவசியம் தேவை என்ற நிலை முன்னரே எழுந்துவிட்டது. சந்திரிகா அரசுடனான முன்னைய பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த பின், இனிமேல் மூன்றாந் தரப்பு மத்தியத்துவத்துடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைதான் பயன்தரும் என்று முன்னரே புலிகள் தெரிவித்துவிட்டனர். இம்முறை மாவீரர் நாள் உரையிலும் தலைவர் பிரபாகரன் அதனை நினைவூட்டி உள்ளார்.

சமாதானப் பேச்சிலும் – அரசியல் தீர்வு முயற்சியிலும், புலிகள் காட்டும் நேர்மையான விருப்பத்தையே வெளிநாட்டு மத்தியத்துவத்துக்கான புலிகளின் அழைப்பு புலப்படுத்துகின்றது. அதேவேளை, சமாதானப் பேச்சை நிராகரிப்பவர்கள் என்று புலிகளுக்கு எதிராக சிங்கள அரசு சுமத்தும் அபாண்டமான குற்றச்சாட்டுகளையும் இது அர்த்தமற்றதாக்கும். அத்துடன் சிங்கள அரசின் சமாதான விரோதச் செயற்பாடுகளையும் – இராணுவவாதப் போக்குகளையும் உலகம் தெரிந்து கொள்ள இது வழிசமைத்துக் கொடுக்கும்.

சந்திரிகா அம்மையார் தொடர்பாக உலக சமூகம் முன்பு வைத்திருந்த கணிப்பில், இப்போது பெரும் மாறுதல்கள் நிகழத் தொடங்கி உள்ளன.

யாழ். ஆக்கிரமிப்புக்குப் பின்னர் அம்மையார் வெளிப்படுத்திவரும் பேரினவாதக் செய்கைகளும் – பேச்சுக்களும், ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்களில் நடைபெறும் இராணுவ அட்டூழியங்களும், உருப்படியான அரசியல் தீர்வொன்றை இதுவரை காணாத நிலையும், போர் மீறும் இராணுவ வழிமுறைகளிலும் அவர் காட்டும் மறைமுகப் பிரியமும் உலக சமூகத்திற்கு அதிர்ச்சியையும் – ஏமாற்றத்தையும் கொடுத்துள்ளன. இவை காரணமாக அம்மையாருக்கிருந்த சமாதானத் தேவதைத் தோற்றம் உலக அரங்கில் மங்கத் தொடங்கிவிட்டது. போரை முடிவுக்குக் கொண்டுவந்து – பேச்சு மூலம் இனப்பிரச்சினையை விரைவாகத் தீர்த்துவைக்கும்படி சர்வதேச அழுத்தம் அம்மையாரை நெருக்குகின்றது. அண்மையில் பாரிஸ் நகரில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் ஒன்றியத்தினது கூட்டத்திலும் அம்மையாருக்கு நேரடியாகவே நிர்ப்பந்தம் கொடுக்கப்பட்டது. உதவிகளிலும் வெட்டு விழும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

போர்ச் செலவால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் சிங்களப் பொருண் மியத்திற்கு – வெளிநாட்டு உதவிகளும் தடைப்படுமாயின், போர் இயந்திரம் பெரிதும் பாதிக்கப்படும். இதனால், அம்மையாரின் போர் முயற்சி பெரிதும் தடைப்படும். இத்தகைய புற சூழலில்தான், பேச்சுவார்த்தைக்குரிய அறிவிப்பையும், வெளிநாட்டு மத்தியத் துவத்திற்கான அழைப்பையும் அம்மை யாரின் அரசு வெளியிட்டது. ஆயினும், பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச் சினையைத் தீர்க்க அம்மையார் விரும்பவில்லை. அவரது பேச்சு வார்த்தையைப் புலிகள் இயக்கத்தைக் கொண்டு நிராகரிப்பிக்கச் செய்வ தற்காகவே – கடுமையான நிபந்தனைகளை அவர் விதித்துள்ளார். எனினும், மாவீரர் நாள் உரையில், இந்த நிபந்தனைகளின் ஏற்க முடியாத தன்மைகள் பற்றி விளக்கிய தலைவர் பிரபாகரன் அவர்கள் – சமாதானச் சூழலை ஏற்படுத்தத் தேவையான முன்நிகழ்வுகள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். இரு பக்க நிலைப்பாட்டையும் உலகம் இப்போது அவதானித்து வருகின்றது. 'சந்திரிகாவின் சமாதான வேடம்' கலையும் நாளும் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கான நியாயத்தை உலகம் புரிந்துகொள்ளும் நாளும் வெகு தூரத்தில் இல்லை. ✷

**நேர்மையான வகையில் பேச்சுவார்த்தை நடைபெற்று நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்று வரையப்படுவதற்கு ஏதுவாக, தமிழர் நிலத்தில் இயல்புநிலை தோன்ற வேண்டியது அவசியம். அப்போதுதான் நடுநிலையுடன் பேச்சுக்கள் தொடரும். பரஸ்பர சந்தேகங்கள் அகன்று பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் உறுதிப்பாடு பிறக்க வழியேற்படும்.**


## யாழ்முரி '97 விருதுப்போட்டி

*தமிழீழ மருத்துவ நிதிக்காக*

டென்மார்க், நோர்வே, பிரான்ஸ், லண்டன் இசைக்குழுக்கள் ஒரே மேடையில்

**04-05-97**

**ஞாயிற்றுக்கிழமை**

**மாலை 6 மணி**



**1600 இருக்கைகள் அடங்கிய**

**Fairfield Hall, Park Lane**

**East Croydon, UK**

மேலதிக விபரங்களுக்கு: 0171 403 4554, 0956 329 660, 0956 314 370

www.tamilarangam.net



# உலக அரங்கு

## பேரு

# தூபக் அமாறு இயக்கத்தினர் பயங்கரவாதிகளா? அல்லது போராளிகளா?


**தெ**ன் அமெரிக்காவின் மேற்குப் பகுதயில் அமைந்துள்ள பேரு நாட்டின் தலைநகரான லீமாவின் ஏழு மில்லியன் மக்கள் வழமைபோல சுறுசுறுப்பான ஒரு நாளை முடித்துக்கொண்டு ஓய்வெடுக்க ஆயத்தமாகின்றார்கள்.

நகரம் மெதுவாக இருளில் மூழ்கி சோபை இழந்துகொண்டிருக்க வெளி நாட்டுத் தூதுவராலயங்கள் இருக்கும் பகுதி மட்டும் களை கட்டத் தொடங்குகின்றது.

பல நாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தூதுவர்கள், வர்த்தக சமூகத்தவர், பேரு நாட்டின் அரசியல் வாதிகள், பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள், அவர்களது மனைவிமார் என சுமார் 600 பேர் ஆடம்பரக்கார்களில் யப்பானியத் தூதராலயத்திற் வந்திறங்கு கின்றனர்.

யப்பானிய மன்னர் அக்கிஹிட்டோவின் 63வது பிறந்தநாளை மிக விமரிசையாகக் கொண்டாடும் நோக்குடன் ஆயிரத்திற்கு மேற்பட்டோருக்கு பிரத்தியேக அழைப்பித ழ்கள் அனுப்பப்பட்டிருந்தன.

பேருவின் பிரதான வர்த்தகப் பரிமாற்றம் செய்யும் நாடாக யப்பான் விளங்குவதாலும் (வருடத்திற்கு ஒரு பில்லியன் டொலர்) பேருவின் சனாதிபதி அல்பேர்ட் மேல் பூஜிமோரி யப்பானிய குடிவரவாளரின் மகனாக விளங்குவதாலும் மேற்கூறப்பட்ட கொண்டாட்டத்திற்கு பல மட்டங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.




யப்பானிய தூதுவராலயத்தின் சுற்றுச் சுவருக்குள் விருந்துக்காக அமைக் கப்பட்டிருந்த கூடாரத்துள் திராட்சைப்பழ ரசத்தை சுவைத்தவாறு சுவையான உணவை ருசி பார்க்கவெனக் காத்திருந்த விருந்தினர்களை இரவு 8.35 மணியளவில் திடீரென வெடித்த குண்டொன்று அதிர வைத்தது.

தூதரகத்துடன் இணைத்திருந்த வீட்டின் தடுப்புச் சுவரானது தகர்க்கப்பட்டு துவாரம் ஏற்படுத்தப்பட்டதுடன், காவல் வீரர்களின் நிலைகளும் கிரனைட் வெடிகள் வீசித் தாக்கப்பட்டன. தூபக் அமாறு புரட்சிகர இயக்கத்தைச் சார்ந்த சுமார் 25பேர் முகமூடி அணிந்தவாறு திடீரெனத் தோன்றி சரமாரியாக வானை நோக்கிச் சுடத்தொடங்கியதுடன், பொலிசாருடனும் துப்பாக்கிப் பிரயோ கத்தைப் பரிமாறிக்கொண்டனர்.

எனினும், அதிர்ஸ்டவசமாக அங்கிருந்த விருந்தினர்களில் இருவர்ரத் தவிர எவரும் காயத்துக்குள்ளாகவில்லை.

20 நிமிடம் கழித்து பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை எறிந்தபோது இவ்வியக்கத்தினர் தாம் தயாராக வைத்திருந்த தடுப்பு முகமூடிகளை அணிந்து கொண்டனர். இதனால் மூச்செடுக்கமுடியாமல் திண்டாடியது விருந்தினரே.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் கழித்து வெளியில் உள்ள அதிகாரிகளுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்ட பின்பு பெண்கள் மற்றும் வயதானவர்கள் என சுமார் 300 பேர் படிப்படியாக விடுவிக்கப்பட்டனர். பேருவின் சனாதிபதி புஜிமோரியின் தாயாரும், சகோதரியும் இதில் அடங்கியிருந்தது குறிப்பிடத் தக்கது.

1996 டிசம்பர் 17 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்துடன், அநேகமாக பணயக்கைதிகள் பிடிக்கப்பட்ட வரலாற்றில் மிகத் துணிச்சலுடன் நடாத்தப்பட்டதெனக் கருதப்பட்ட இந் நடவடிக்கை ஆரம்பமாகி இன்றுவரை (ஏப்ரல் 06) முடிவு காணப்படாமல் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. பல நாட்டு முக்கியஸ்தர்கள் பண யக்கைதிகளாக்கப்பட்டதாலும், இம் முற்றுகை வெளிநாட்டுத் தூது வராலய சுற்றுச் சுவருக்குள் இடம்பெற்றுள்ளதாலும் பேரு நாட்டின் சிறிய, உள்நாட்டு அவசரநிலைச் சம்பவமாகக் கணிக்கப்படவேண்டிய இச் சம்பவம் சர்வதேச முக்கியத் துவம் வாய்ந்ததொன்றாக மாறி யுள்ளது. உலகின் பல நாடுகளில் இருந்தும் செய்தித் துறையினர் இத்தூதராலயத்தை முற்றுகை யிட்டுள்ளனர்.

உள்நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டேன் எனப் பறைசாற்றிக் கொண்டிருந்த பேருவின் சனாதிபதி புஜிமோரிக்கு இச்சம்பவம் தர்மசங்கடமான

- சாள்ஸ். தேவசகாயம் -

நிலையைத் தோற்றுவித்துள்ளது. தூபக் அமாறு இயக்கத்தினரை ஆயுதத் தாக்குதல் மூலம் எதிர்கொண்டால் பல முக்கியஸ்தர்களின் உயிர்களைப் பலிகொடுக்க வேண்டியிருக்கும். புஜிமோரியின் சகோதரரும் இப்பணயக் கைதிகளில் ஒருவர் என்பது கவனிக்கத்தக்கது. அதேவேளை இவ் இயக்கத்தினரின் கோரிக்கைகளுக்கு இணங்கினால் எதிர்காலத்திலும் இவ்வாறான பணயக் கைதிகள் சம்பவங்கள் இடம்பெற அது தூபம் போடுவதாக அமையும் என்றும், தான் அடக்கிவிட்டதாகப் பறைசாற்றும் வன்முறைக் கலாச்சாரத்தை மீண்டும் அறிமுகப்படுத்துவதாக அமையும் என்றும் புஜிமோரி கருதுகிறார்.

15வருடங்களுக்கு மேலாக பயங்கர வாதத்திற்கு எதிராக நடத்தப்பட்ட போரில் தான் வெற்றி கண்டுள்ளதாக அண்மைக்காலம் வரை புஜிமோரி குழுவினர் பெருமைப்பட்டுக்கொண்டனர். இந்த நீண்ட உள்நாட்டுப்போரில் சுமார் 30,000 பேர் கொல்லப்பட்டதுடன் 5000க்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பணயக் கைதிகள் நாடகம் ஆரம்பமாகி சில மணித்தியாலங்களில் உள்ளூர் தொலைக் காட்சி மற்றும் வானொலி நிலையங்களுடன் தொடர்புகொண்ட தூபக் அமாறு இயக்கத்தினர் தமது இச் செயற்பாட்டிற்கான காரணத்தைத் தெளிவு படுத்தினர். பேருவின் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் சுமார் 450 தூபக் அமாறு இயக்கத்தினர் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பணய விலை கொடுக்கப்பட வேண்டும் என்பதும், இவர்களது பிரதான கோரிக்கைகளாக விளங்கின. அமேசன் காட்டுக்கு அல்லது மூன்றாவது நாடொன்றுக்குப் பாதுகாப்பாக இயக்கத் தினரைக் கொண்டு செல்வதோ, பணயத் தொகையைக் கொடுப்பதோ இங்கு பெரும் பிரச்சனையாக விளங்கவில்லை. அமெரிக்கா, விசேட கொமாண்டோக்கள் உதவியுடன் பணயக் கைதிகளை விடுவிக்க பேருவிற்கு ஆதரவு தெரிவித்போதும் யப்பான் தனது பிரஜைகள் நலன் கருதி இவ் யோசனைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. வெளிநாட்டுத் தூதரகங்கள் இறைமை யுள்ள பிரதேசங்களாக விளங்குவதனால் பேருவினால் தன்னிச்சையாக இவ்விட யத்தில் செயற்படமுடியாமல் உள்ளது. இப்பணயக்கைதிகள் நாடகம் தீர்க் கப்படாமல் இழுபறிப்படுவதற்கு சிறையில் உள்ள இயக்கத்தினரின் விடுதலை பற்றிய விடயமே (முக்கிய காரணியாக) விளங்குகின்றது.

'நாகரீகமற்ற தூபக் அமாறு இயக்கத்தினர் இறப்புக்களையும், அழிவுகளையும் பேரு நாட்டில் விதைக்கிறார்கள்' எனக் கூறிய புஜிமோரி 'இவர்கள் போராளிகள் அல்ல பயங்கரவாதிகள்' எனக் கூறியதுடன், சிறையில் உள்ள இக் குற்றவாளிகளை நான் ஒரு போதும் விடுதலை செய்யப்போவதில்லை, தூபக் அமாறு இயக்கத்தினர் அநேகமாக அடக்கப்பட்டு விட்டார்கள். எஞ்சிய ஒரு சிலரையும் அழித்தொழிப்பேன்' எனச் சபதமிட்டுள்ளார்.

தூபக் அமாறு இயக்கம் 1983ல் அமேசன் காடுகள் மற்றும் பேருவின் மத்திய உயர்நிலப் பகுதிகளில் தோன்றினாலும் இவ்வியக்கத்தின் பெயருக்கு இரத்தம் தோய்ந்த வரலாறு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்பானிய ஆக்கிரமிப்பாளர்களால் "இன் கான்" மன்னன் 1533ல் கொல்லப் பட்டதையடுத்து அவனது மருமகனும் முடிக்குரிய வாரிசுமான தூபக் அமாறு (Tupac Amaru) ஸ்பானியர்களைப் பல வருடங்களாக எதிர்த்து வந்தார்.



நெஸ்டர் செர்பா

ஆனாலும் இறுதியாக 1572இல் அவர் கைதுசெய்யப்பட்டு கோவேறு கழுதை மேல் ஏற்றப்பட்டு கஸ்கோ எனும் நகரவீதிகளில் பவனி கொண்டு செல்லப்பட்டு சிரச்சேதம் செய்யப்பட்டார். தூபக் அமாறு என்பதற்கு "ராஜபாம்பு" என சுதேச மொழியில் அர்த்தம் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு நூற்றாண்டுகளின் பின் இப்பெயரைச் சூடிக்கொண்டு போராடிய இன்னோர் இன்கான் போராளியும் இதே நகரில் 4 குதிரைகளினால் இழுக்கப்பட்டு கிழித்தெறியப்பட்டார்.

தூபக் அமாறுவை பேருவின் பிரபல்யமான கெரில்லா இயக்கமான "சைனிங் பாத்" (Shining Path) உடன் தொடர்பு படுத்தியும் கதைக் கப்படுவதுண்டு. ஆனால் மேற்படி இயக்கம் சீன சார்பாக இருக்கும் அதேவேளை தூபக் அமாறு இயக்கம் கியூபா சார்ந்ததாக உள்ளது. முதலாவது இயக்கத்தில் புத்திஜீவிகள் எனப்படுவோர் முதன்மை வகிக்க தூபக் அமாறுவில் நாட்டுப்புறப் பகுதியில் உள்ள ஏழைக் குடும்பத்தவரிடம் இருந்து போராளிகள் சேர்க்கப்பட்டனர்.

1990 களின் ஆரம்பகாலத்தில் சைனிங்பாத் இயக்கத்தினர் வன்முறைக் கிளர்ச்சிமூலம் பேரு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் அநேகமாக வெற்றி கண்டனர். தூபக் அமாறு இவ்வாறு பரந்தளவில் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை எனினும் 1983 தொடக்கம் நகரப்புறங்களில் தாக்குதல் நடத்தத் தொடங்கியதை அடுத்து பிரபல்யம் பெறத்தொடங்கினர். அமெரிக்கா சார்பான நிலைகளைக் குறிவைத்தே இவர்களின் தாக்குதல்கள் அமைந்திருந்தன.

அமெரிக்க தூதராலயத்தின் மீது ஏவுகணை கிரனைட் தாக்குதலும், அமெரிக்க தூதுவரின் வீட்டின் மீது மோட்டார் தாக்குதலும் நடாத்தியதுடன் லீமாவில் உள்ள பல கென்டக்கி பிரைட் சிக்கின் (Kentucky Fried Chicken) துரிதகதி உணவுச் சாலைகள் பலவற்றின் மீது தாக்குதலும் நடத்தியுள்ளது.

எனினும் 1990ல் லீமாவுக்கருகில் அமைந்துள்ள பேரு நாட்டின் மிகவும் பாதுகாப்பான சிறைச்சாலையில் இருந்தும் சுமார் 50 போராளிகள் சுரங்கவழியாகத் தப்பித்துச் செல்ல வழிவகுத்தமை பலரின் புருவத்தை உயர்த்த வைத்தது. இவ்வாறு தப்பியவர்களில் தூபக் அமாறுவின் தலைவரான விக்டர் போலேயும் அடங்கியிருந்தது மட்டுமின்றி இவர்கள் தமது சாகசத்தை ஒளிநாடாவிலும்

தொடர்ச்சி 14ம் பக்கம் ...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போனாரே... படகில் ஏறி!

பச்சைப் பசேலென்ற எழிலும் -
முத்துக் குளித்தெழும் கடல் வளமும் -
எண்ண இனித்திட்ட சொர்க்கத்தீவு -
லங்காபுரி!
குத்துவெட்டும், குதறலும் - சதைதொங்க
கொப்பளிக்கும் குருதியின் வெள்ளமும்
பிண நாற்றமும்.
"நீதி கேட்க யாருமிலையோ?"
அவலக் குரல்கள்
வீதிக்கு வீதி, வாசலுக்கு வாசல்
கேட்கும்.

புதரிடை கண்தூங்கி, எழுந்து,
மீண்டும் மீண்டும் எமன் துரத்த
உயிரிழந்து ஓடி. . .
கடலுக்கும் வானுக்கும் தரைக்கும்
ஒழித்து, பதுங்கி. . .
"கொடுகு நிமிராக்" குஞ்சுகளோடு,
கன்று போட்டெழுந்த "கற்பகதரு" வோடு,
அறளை பேர்ந்து, ஜீவன் முக்திக்கு காத்திருக்கும்
ஓரறிவு மறந்துவிட்ட கிழங்களோடு,
பாரிசவாத முடங்களையும் காவிப்பறித்து. . .
உறைந்து காய்ந்த இரத்தச் சுவடு மேல் சுவடு வைத்து
ஒதுங்கலுக்கு ஒரு இடந்தேடல்.

அற்ப பொருளென ஏதுமில்லை!
இன்றைய வாழ்க்கைப் போருள்
அல்லது
போர் வாழ்க்கைக்குள்
தீக்குச்சியா? அல்லது மருந்தற்ற குச்சியா?
எதை ஒதுக்குவது - தெரியவில்லை!
எண்ணற்ற கனமுள்ள பொதிகளுடன்
உறவுகள், பந்துக்களுமே பொதிகளாக. . .
அனைவரும் ஒன்றிணைந்த பெருமையோடு
"மறுமலர்ச்சி" - கடலின் மறுகரையிலென
மனங்கொள்ளா மகிழ்வுடன்
இக்கரையில் காத்திருப்பு!

அரும்புகள் இங்கே.
மலர்வுக்காய் காத்திருக்கும் மொட்டுக்கள்,
கனிதரப் போகின்ற மரங்களுமிங்கே.
இருள் கவியும்பொழுது - வலைப்பாட்டு துறையில்,
சூரிய உதயம் காண - அக்கரை சேர்ந்திடுவோம்.....
பௌதிகம் படகிருக்க
வானில் பறந்த ஆன்மாக்கள்.

நீரில் ஊர்ந்த படகுக்கு
நிறைமாதச் சுமையோடு மகிழ்வுந்தான்.
முக்கி முனகி நகர்ந்தது.
பாரத தாய் மடியில்
பிறக்கப்போகும் குழந்தைகளாய்
படகுக் கருவறைக்குள்
காலுதைப்பின் சுவாரஸ்யங்கள்.

பிரசவ வேதனை தோன்றி, மறையுமுன்னரே
பரந்த, உப்புக்கரிக்கின்ற கடலுக்குள்,
மண் திட்டிகளின் சிக்கலுக்குள்-
செயலிழந்து, திரண்டு குவிந்த கருப்பைக்குள்-
எத்தனை சிசுக்கள் ?
உயிரிழந்து, முகம் புதைந்து கிடந்தன.

ஈழத்தமிழன் -
அவல வாழ்வு!
அவனுக்கு உறுதியாக்கப்பட்டுவிட்ட ஒன்றா?
எங்கே போயினும் இதுதான் முடிவா?
முகமறியாத உறவுகளுக்காய்
இருள் மூடிக்கிடந்த கரையோரம்
சடலங்களை இழுத்து, மடி வைத்து
கதறி அழும் ஓலங்கள்
மீண்டும், கதறி அழும் ஓலங்கள்.
யாருக்கு யார் தேறுதல் கூறுவது
யாவரும் அகதிகள்!
யாவரும் அநாதைகள்!

**- வதனிலா**




## உதயம் காண்போம்

புயங்கொள் விடுதலைப்
புலிப்படை நாங்கள்
பயங்கரவாதிகள்
அல்லவே அல்லர்!
நயம்படக் கோரினோம்
நலிந்தோம், உரிமைகள்
வயப்படவில்லை
வாழ்க்கையும் நாடும்
கயவர்தம் பிடியில்
காலங் காலமாய்
அயலான் கழனிபோல்
அவதிப்படவே
புயலாய் எழுந்தோம்
புதுயுகம் காண்போம்!

சிறகு முளைத்தபின்
சிட்டுவிண் மீதினில்
பறக்கும் உரிமையைப்
பறிப்பவன் யாரடா?

அறத்தின் வழிபடும்
ஆயுதப் புரட்சியை
மறத்தின் கொல்படை
மாய்த்திட ஒண்ணுமோ?
இறப்பினும் மறவோம்
இன்றமிழ் ஈழம்
பிறக்கும் வரைபல
பிறவிகள் எடுப்போம்
உறங்கோம் அதுவரை - புது
உதயம் காண்போம்!

**- வியாக்ர பாதன்**

www.tamilarangam.net





# உங்கள் கருத்துக்கள்

### சாகா மருந்தே!

புயலுக்கு மறு பெயர்தான் புவனமதில் பூபதியோ!
பூகம்பம் தான் பெண்ணுருவு கொண்டு பூமியிலே -
தோன்றியதோ!
அடிவயிற்றில் பசி நெருப்பை அயராது மூட்டியே
அகிலமதை விழிக்கச் செய்த அகிம்சைப் புறாவே!
சாவுக்கே சாவையளித்த சாகா மருந்தே!
சரித்திரமாய் மாறிவிட்ட சந்தனப் பேழையே!
விடியலுக்கு முன்பே விதையாகிப் போனாயே!
விடியும், விடியுமோர்நாள்! நீயங்கே விழிதிறப்பாய்!

இ.சம்பந்தன், ஜேர்மனி

### தியாகப் பெருந்தீ...

பாரத வெறியரின்
பற்களைப் பிடுங்கிட
ஆகுதியாகிய
அற்புத அன்னையே...!
ஈழத் தமிழரின்
ஈகத்தின் சின்னமே
தென்தமிழீழத் தாயீன்ற
தியாகப் பெருந்தீயே...!
பணிகின்றோம் உன்தாழ்
பணிந்து எழுகின்றோம்!

உடுத்துறையூர் சங்கர்புஷ்பா,
ஜேர்மனி

### பூபதியின் புதிய காந்தீயம்

அமைதிப்படை என்ற
ஆக்கிரமிப்பு மாயமான்களுக்கு
புதிய காந்தியம் கற்பித்த,
பூபதி கணபதிப்பிள்ளையே!
ஈழவர் நமது இதயங்களில்
என்றும்,
உன் தியாகம் பதிந்திருக்கும்.

குறிச்சியூர் குரு,
ஜேர்மனி




### உண்ணா நோன்பால் உரிமை காத்த பெண்பால் நீயும் பெரிதாய் வாழ்க!

அமைதித் திரையை
- அகலக்கிழித்து
உலகம் யாவும் உண்மையறிய
வழியைச் செய்த வல்ல தாயே!

அமைதி கொடுக்கப் போன
- படைகள் - தமிழ்
பெண்ணை அழித்த கதைகள்
- கேட்டு
விதியை மாற்ற விரைந்த தாயே!
உண்ணா நோன்பால்
- உரிமைகாத்த
பெண்பால் நீயும் பெரிதாய்
வாழ்க!

பிரபா–சுவிஸ்

### வல்லரசின் வடிவம் காட்ட முன்னெழுந்த தாய்

வீதியெலாம் வெறியர்கள்
வேர்விட்டலைந்த வேளை
வெள்ளைநிறச் சேலைகட்டி
வல்லரசின் வடிவம் காட்ட
முன்னெழுந்த தாயே! அன்னை
பூபதியே!

அகிம்சைத் தீயை அகலப் பரப்பிய
அமைதித்தாயே!
ஆண்டுகள் ஓடலாம் - நின்
நினைவுகள்
மீண்டுகொண்டேயிருக்கும்.

குமுதினி–பிரித்தானியா

### அகிம்சை அம்மா

அஞ்சா நெஞ்சம் மாதருக்குமுண்டு என,
அடிமை வாழ்வு மாந்தற்கு ஏன் என,
அன்பு அறியா கல் நெஞ்சர் மத்தியில்
அறம் செய்ய திரும்பா, ஆதிக்க வெறியர் நடுவில்
அகிம்சை வழி போராடி மாண்டாய்.
அகிலமே, வியக்க ஈழ மண்மேல் காதல் கொண்டாய்
அன்னை பூமியில் நீர் ஏற்றிய சுடர்
அன்னை பூவதியே: எரியாதோ எம்மவர் உள்ளத்தில்

இளவாலை இனிது

### வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்குப் பொருத்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்)வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை 09 - 05 - 97 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: 'Kalathil', Eelam House, 202 Long Lane, London, SE1 4QB

### வயிற்றிலே விடுதலைத் தீயினை மூட்டியவள் !

நெஞ்சிலே தாயகக் கனவினை ஏற்றி
வயிற்றிலே விடுதலைத் தீயினை மூட்டி
இந்திய வெறியரை எரித்திட
சாத்வீக போர் தனை நடாத்தி
காந்தி தேசத்தின் மறுபக்கத்தைக் காட்டியே
தன்னுயிர் நீக்கிய எங்கள் அன்னையை
ஆயிரம் ஆண்டுகள் நீங்கினும் - வையம் மறந்திடினும்,
மறக்குமா மறத்தமிழ் இனம் ?

சி.ரஞ்சித், இலண்டன்



## எந்த நாடும் எங்கள் ...

அல்லல்கள், அனுபவிக்கும் துன்பங்கள் சிறை, சித்திரவதை, கொலை, கற்பழிப்பு முற்றுப் பெறப் போவதில்லை. முடியவும் போவதில்லை.

வன்னிப் பெருநிலத்தில் எந்த முனையிலும், எந்த நேரத்திலும் உக்கிரமமான போர் வெடிக்கலாம் என தமிழீழத்தின் தேசிய இராணுவமாகத் திகழும் விடுதலைப்புலிகள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்கள்.

பொதுவாக விடுதலைப் புலிகள் போருக்கு முன்னறிவித்தல் கொடுப்பது வழமையல்ல. இப்போது கொடுத்துள்ளார்கள்.

சிங்களப் படையெடுப்புக்கு எதிரான யுத்தத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் தயாராகவே இருக்கின்றனர் என அவர்கள் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

வன்னித் தளத்தில் பல்வேறு முனைகளிலும் படையெடுப்பு அரங்குகள் திறக்கப்படக் கூடிய சாத்தியக் கூறுகளை எதிர்பார்த்து இவ் அசைவுகளை அவதானித்த வண்ணம் விடுதலைப்புலிகளின் படையணிகள் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ள விடுதலைப்புலிகள், முல்லைத்தீவு என்றும் ஆனையிறவு என்றும் மற்றும் வேறு வழிகளில் புலிகள் பெற்றிருக்கின்ற புதிய தளபாடப் பலமும், கணிசமான ஆட்பலமும் மரபு-முறைச் சமர்களில் ஈடுபடவல்ல வலுவான போர்த்திறனை இப்போது புலிகளுக்கு வழங்கியுள்ளன எனவும் தெரிவித்துள்ளனர்.

சிங்கள அரசின் இவ் இராணுவ ஆக்கிரமிப்பை முறியடிக்கத் தயாராக இருப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ள விடுதலைப்புலிகள், சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்டுள்ள படையெடுப்பு, தற்கொலைக்கு ஒப்பான காரியம். இதன்ன அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் ஆய்வாளர்கள் வரலாற்று ஏடுகளில் பதியப் போவதாக தூளுரைத்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகள் "சொன்னதை செய்யாமல் விடுவதில்லை, செய்யாததை சொல்வதும் இல்லை."

விடுதலைப்புலிகளது அகராதியில் 'முடியாது', 'இயலாது' என்ற வார்த்தைகள் இல்லை.

வெற்றித் திருமகளைவிட வேறு திருமகளும் இல்லை.

எந்த நாடும் எங்கள் மண்ணைத் தொட முடியாது. புலி ஏற்றி வைத்த கொடி இனி பட முடியாது! ■

www.tamilarangam.net

# மாதவப் பிள்ளையின் கைகளைப்பற்றி அன்னை நடக்கின்றாள்

எங்கும் எதிலும் இளமைத் துடிப்புடனே
பொங்கு தமிழ்வீரப் பெருமைத்திருவுடனே
சித்திரை மாதத்தாள் மெல்ல வருகிறாள்...... இனி
மனமெல்லாம் நிறைகின்ற மங்கலம் உருவாகும் !


தாங்கிநடந்த துன்பச் சுமை நீக்கி
வாழ்வைத் தவிக்கவைத்த துயரப்பிணி நீக்கி
போர்க்களம் வென்றவர் பெருமையைத் தாங்கி
மெல்ல எழுந்தனம் தமிழ் இனி ஓங்கும் !

காத்துவீழ்ந்தவர் காலடி போற்றுவோம்
களத்தில் நிற்பவர் கைகளைப் பற்றுவோம்
தேசத்தின் தேவையில் புலன்களைச் செலுத்துவோம்
தமிழ் அன்னையின் வாழ்வொன்றே
- மனங்களில் இருத்துவோம்!

குறைநிலவென கூன்விழும் இனத்தினை
குன்றாய் நிமிர்த்தியவன்..... துயர்
தந்தவன் தலையில் தந்திடும் கலையை
நன்றாய் விளக்கியவன்.

மாதவப் பிள்ளையின் கைகளைப்பற்றி
அன்னை நடக்கின்றாள்..... இனி
அச்சங்கள் இல்லை துன்பங்கள் இல்லை
மங்கலம் உருவாகும்!

*ஜெயா (பிரான்ஸ்)*




T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 208
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51824 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
Tel: 718-657-6483
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginneln - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1983, Fax: 070 352 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 6224